புரட்சிகர அரசியல், - தத்துவ, நடைமுறை -

விமர்சன சஞ்சிகை.

# கீழைக்காற்று

விசை: 1 தை-மாசி 1986



கீழைத்தேசங்களின் புதிய ஜனநாயகப் புரட்சி விசையே
மேலைநாடுகளின் சோசலிசப் புரட்சி விசைக்கு உந்துசக்தியாகும் (படவிளக்கம்)

''பாசிச அரசைப் பாடாய் வீழ்த்த
அராஜக நரபலி நாட்டியம் ஒழிக்க
மார்க்ஸிச அரசை முறையாய்க்காக்க — வீசும்
புதிய ஜனநாயகப் புரட்சிக்காற்றே கீழைக்காற்று''

அனைத்து அதிகாரமும் பாட்டாளிவர்க்க சிந்தனைக்கே!

www.padippakam.com

# "கீழைக் காற்று"

தை - மாசி ❋ 1986

விசை: 1

❋ ❋ ❋

## இந்த விசையில்.........

❋ போராளிகள் சிந்தனைக்கு!...

❋ "இந்திய அரசு நண்பன்" என்ற மாயையின் வடிவம்.

❋ "கலாச்சாரச்சிதைவுகள்" "மினிசினிமா"" — திரைப்படங்கள்"

❋ "தமிழீழம்" சம்பந்தமான தவறான போக்குகள்.

❋ பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர அரசியலுக்கு அறிவுஜீவிகளின் தேவை.

❋ இப்படியும் நடக்கிறது.

"புரட்சி என்பது லட்சோப லட்சம் வெகுஜனங்களின் பங்கு" - "மக்களைத் தட்டி எழுப்பி அவர்களைச் சார்ந்திருந்தாலேயே அதைச் செய்ய முடியும்"

—மாவோ—

## குறிப்பு:

"கீழைக் காற்று" — இன்று புரட்சிகர (?) என கருதப்பட்டுவரும் எந்த ஒரு விடுதலை ஸ்தாபனங்களினதும் பக்க சார்பாகவோ, அன்றி பிரதிபலிப்பதாகவோ வீசவில்லை. அனைத்து விஞ்ஞான பூர்வமான கருத்துக்களையும், சிந்தனைகளையும், நடைமுறைகளையும், "புரட்சிகர அரசியல் அதிகாரத்திற்காக" - எமது வாழ்வின் சகல நிலைகளிலும் உள்ளடக்கி மக்களணியினருக்காக வீசும் விமர்சன சஞ்சிகையே—

## நமது நோக்கும்:

இன்றைய சமுதாயத்தில் நிலவும் அரசியல் பொருளாதார, கலாச்சார முரண்பாடுகளை விஞ்ஞான பூர்வ கண்ணோட்டத்தில் அணுகி மார்க்சிச புரட்சிகர அரசியல் அதிகாரத்திற்கான தத்துவப்பயிரை நாட்டுவதும், நடைமுறை நீரை ஊற்றுவதும், வளர்ப்பதும், மார்க்ஸிச அறிவியலை எளிமைப்படுத்தி புரட்சிகர அறிவு ஜீவிகளை வளர்ப்பதும், மக்களை ஸ்தாபன மயப்படுத்தி போராட்டப்பங்கில் வழிநடத்திச் செல்வதும்; - "சுரண்டலற்ற சமுதாயத்திற்கான புரட்சித் திசைவழியைக் காட்டுவதேயாகும்."

## வாசகர் பங்கும்:

கீழைக்காற்றின் விசைகளின் விமர்சனங்களை சஞ்சிகையின் அடுத்த விசைகள் வரும் போதாயினும், அல்லது தெரிந்தவர்களுடன் தொடர்புற்று கையாரிப்பீர்களாயின் தங்களது மார்க்ஸிச அறிவு மேலும் செழுமைப்படுத்தப்படுவதுடன் கீழைக்காற்றின் புரட்சிகர விசையும் புது உத்வேகத்துடன் வீச உதவியளிக்கும். விமர்சனத்தின் அவசியம் தவறுகளில் இருந்து விடுபட்டு மீண்டும் தவறுகள் வராத முறையில் இருப்பதற்காகவேயாகும்.

"வைத்தியர் ஒருவர் நோய்க்கு சிகிச்சை அளித்தல் என்பது; நோயாளியைக் காப்பாற்றுவதன்றி அவர் இறப்பதற்கு சிகிச்சை அளிப்பதல்ல"

—மாவோ—

— கீழைக்காற்று —

www.padippakam.com

# "கீழைக் காற்று"

## ★ அறிமுகம் ★

## புதிய ஜனநாயக சமூகப் புரட்சிக்கான --

## -- "கீழைக்காற்று" வீசுகிறது.

"கீழைக்காற்று" மார்க்ஸிச, லெனிஸிச, மாவோயிச, சிந்தனை உருவகங்களை எமது நாட்டுச் சூழ்நிலைகளுக் கமைந்த அரசியல், பொருளாதார, கலாச்சார தத்துவார்த் தங்களாக:- புரட்சிகர வர்க்க சிந்தனையின் எழுச்சி யை, உயர்த்திப்பிடிக்கும் - சஞ்சிகையின் - முதல் விசை இது.

"கீழைக்காற்று" என்ற சொல்லின் பொருள்; பொரு ளாதார அடிப்படையில் மூலதனம், விஞ்ஞானம், நவீன சாதன உற்பத்தி, தொழில் நுட்பம், அரசியலாதிக்கம் போன்றவற்றில் அதி உயர் வளர்ச்சியை எட்டியிருக்கும் ஏகபோக நாடுகளை மேலை நாடுகள் எனவும், இந் நாடு களின் ஆதிக்கங்களின் கீழுள்ளதாகவும், பின் தங்கிய தாகவும், புதிய ஜனநாயகப் புரட்சியை மேற்கொள்ள வேண்டிய அரசியல் சூழ்நிலைகளில் உள்ளதாகவும் இருக் கும் நாடுகளைக் கீழை நாடுகள் எனவும் குறிப்பிடப்பட் டுள்ளது. இந்தக் கீழை நாடுகளில் வீசத் தொடங்கியிருக் கும் புதிய ஜனநாயகப் புரட்சிக் காற்றையே நாம் கீழைக் காற்று எனக் குறிப்பிடுகிறோம். கீழை நாடுகளுக்குரிய இக்காற்று பலமாக வீசும்போதுதான் மேலை நாடுகளின் ஏகபோக சுரண்டல் அரசியல் இயந்திரமும் கீழை நாடு களின் முதலாளித்துவ சுரண்டல் அரசியல் இயந்திரத் தைத் தொடர்ந்து செயலிழக்கச் செய்யும் சர்வதேச சோசலிசப் புரட்சிக்காற்று வீசத் தொடங்குகிறது. மேலும் அது நிலைத்து நிற்கும் என்பதிலும் எதுவித ஐயமுமில்லை.

அடிப்படை - (மா. ஓ.)

இன்றைய சூழ்நிலைகளின் நெருக்கடிகள் மத்தியில் இச்சஞ்சிகை வெளிவருகிறது. இன்று ஆளும் அரசால் முதன்மைப் படுத்தப்பட்டிருக்கும் இன முரண்பாட்டை நீக்கும் விதத்தில் அடிப்படையில் வர்க்கப் போராட்டத்தை மனதிற் கொண்டு இனவிடுதலையை - சுயநிர்ணய உரிமை யை - பிரிந்து போதல் உட்பட - வென்றெடுக்கும் வீரா வேசப் போராட்டத்தில் இறங்கவேண்டும். மக்களும் அதையே விரும்புகின்றனர், ஈடுபடுகின்றனர். ஆனால் ஆளும் அரசினதும் அதன் வர்க்கங்களினதும் கொள்கை யும் இன ஒடுக்குமுறையும், வகுப்புவாதத் தூண்டுதலும் மூர்க்கத்தனமாக நடைபெறுகிறது. பரந்துபட்ட உழைக் கும் மக்களுக்கும், குறிப்பாக தமிழ் மக்களுக்கும் மக்கள் எதிரிகளுக்கும் இடையிலான விடுதலைப் போராட்டத்தில் "கீழைக்காற்று" சஞ்சிகை மக்களையே சார்ந்து நிற்கும்.

எதிரெதிரான இரண்டு ஏகாதிபத்தியங்களும் - அமெ ரிக்கா, சமூக ஏகாதிபத்தியமான ரஷ்யா - அதன் அடிவரு டிக் குட்டிச்சாத்தான் நாடுகளும் எமது நாட்டை மேலா திக்கம் செய்ய முயன்று வருகின்றது. இதற்கு இலங்கைத் தரகு முதலாளித்துவ - அரை நிலப்பிரபுத்துவ வர்க்கங் களும் அதன் அரசும் துணைநிற்கின்றது. புரட்சிகர கருத்துக்களைக் கூறும் சில இயக்க சக்திகள் கூட (?) துணைநிற்பது குறிப்பிடத்தக்கது. இக் கொள்கைகளுக் காகவே இனமோதல் என்ற திரையை உருவாக்கி உண் மையான வர்க்கப் போராட்டத்தை மறைத்து வைத்திருப் பதும் குறிப்பிடத்தக்கது. எனவே பழைய முறையில் ஆளும் இன்றைய வர்க்கங்கள் ஆளவும் மாட்டார்கள் மக்களை ஆளவும் விடமாட்டார்கள் என்ற புரட்சிகர நிலைமை தோன்றியுள்ள இன்றைய சகாப்தத்தில் இந்த எதிரிகளின் அயோக்கியத் தனமான சதிவேலையை அம் பலப்படுத்தும் அரசியற் பணியைக் "கீழைக்காற்று" முழுமுதற் கடமையாக ஏற்கின்றது.

இன்று ஏகாதிபத்தியம் உலகளாவிய முதலாளித்துவ மாக இயங்குவதால் தேசிய முதலாளி வர்க்கத்தால் தலைமை தாங்கி ஏகாதிபத்தியத்தையும், இலங்கையின் தரகு முதலாளிய - அரைநிலப் பிரபுத்துவம் ஆகியவற்றை யும் தூக்கி எறியும் புரட்சிப் பணியை நடத்த இயலாது. எனவே இவ் எதிரிகளை ஒழித்துக்கட்டும் புதிய ஜனநாய கப் புரட்சிப் பணியை பாட்டாளி வர்க்கத்தின் தலைமை யின் கீழ் - பாட்டாளி வர்க்க சிந்தனைத் தலைமையில் - மக் கள் யுத்தப் பாதையாக நடைமுறைப் படுத்தமுடியும். புரட்சியை இறுதிவரை கொண்டு செல்லும் என்பதில் ஒரு துளி சந்தேகமும் இல்லை. இதற்கான போர் உணர்வை மக்களணியினருக்கும், பாட்டாளி வர்க்கத்திற்கும்-முக்கி யமாக - வளர்க்க வேண்டிய பணியை "கீழைக்காற்று" மனமுவந்து ஏற்கிறது.

சர்வதேச பொது நெருக்கடியால் தோன்றிய தேசிய நெருக்கடியின் சுமையைத் தொழிலாளர்களிடம் சுமத்தி யிருப்பதாலும், இதைமறைக்க உருவாக்கப்பட்டுள்ள இன வெறி அடக்கு முறையாலும், வதங்கும் மக்கள் அணி யினருக்கு புரட்சிகர அரசியல் போதனையையும், போ ராட்ட உணர்வையும் ஊட்டும் ஒர் அமைப்பாகக் கட்டி யமைத்து, சமுதாய மாற்றத்திற்கான புரட்சிகரப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் பாட்டாளி வர்க்கம் - விவசாய வர்க்கம் ஆகியவற்றின் கூட்டணியை மையமாக வைத்து அனைத்து ஜனநாயக சக்திகளையும் ஒரணியில் திரட்டி விவசாயப் புரட்சியை முதன்மையாகக் கொண்ட ஸ்தாபன அரசியற் பணிக்கு "கீழைக்காற்று" தன்னை என்றும் செயல்படுத்தும்.



படிப்பகம்

www.padippakam.com

அரைக் காலனி - அரை நிலப்பிரபுத்துவ நாடான இன்றைய இலங்கையில் அரை நிலப்பிரபுத்துவத்தை எதிர்க்கும் தன்மைகள் இருந்தாலும் அவை பின்னடைவையே நோக்கியுள்ளது. பின்னடைவுகளுக்கான தன்மைகளை படிப்பினைகளாக பல்வேறுபட்ட புரட்சி அனுபவங்களின் துணையோடு பெற்று தன்னை ஒரு அமைப்பு ரீதியாக ஒன்றிணைத்து தலைமை சக்தியுடனும் ஏனைய ஜனநாயக சக்திகளுடனும் தன்னை இணைத்துக் கொண்டால் மட்டுமே அரைநிலப் பிரபுத்துவத் தன்மையை முற்றாக அகற்றும் புதிய ஜனநாயகப் புரட்சியை விவசாய வர்க்கத்தால் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். இப்புரட்சிப் பணிக்கு ''கீழைக்காற்று'' விசை முழுமையாக தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது.

இன்று என்றுமில்லாத மிகச்சாதகமான புரட்சிகரமான புற நிலைமை இலங்கையில் நிலவிவருகிறது. ஆனால் அகநிலையில் புரட்சிகர முற்போக்கு சக்திகளின் அமைப்பு ரீதியான பலம் பல்வேறு குழுக்களாக - இயக்கங்களாக ஐக்கியமின்றி - முக்கியமாகத் தோழர்கள் மத்தியிலும் - எதற்காகவோ (வர்க்க சிந்தனை மாறுபட்டதாகவோ, தனிநபர் தலைமை ஆசையோ, விசுவாசமாகவோ, அல்லது உளவாகவோ (?) ஏன் எதுவாகவோ இருக்கலாம்) பிரிந்திருக்கும் வருந்தத்தக்க நிலைமை நீடித்து வருகிறது. எனவே புரட்சிகர முற்போக்கு சக்திகளுக்கு இடையிலான ஐக்கியத்தைப் பலப்படுத்துவதற்காக (இயக்கங்களில் வரட்டுத்தனமான புரட்சி ர? வர்க்கசிந்தனை இல்லாதவற்றைத் தவிர்ந்த) கோட்பாடுரீதியான போராட்டத்தின் மூலமும், சரியான கருத்துக்களை ஏற்று, தவறான கருத்துக்களை முறியடிப்பதன் மூலமும், சித்தாந்தப் போராட்டத்தையும் நடத்தி முதன்மையான துணையான முரண்பாடுகளை பகுத்தும் தொகுத்தும் ஆராய்ந்து சுரண்டும் அதி உயர் எதிர்த் தன்மையை உடைத்து அதை முற்றாக நீக்கவும் என்றும் ''கீழைக்காற்றின்'' விசை தொடர்ந்து வீசும் அரசியல் கடமையைத் தலையாயதாக ஏற்கின்றது.

புரட்சிகரமான சூழ்நிலையில் புரட்சிகரமான தத்துவம் இல்லாமல் புரட்சிகரமான கட்சி இல்லை. புரட்சிகரக் கட்சி இல்லாமல் புரட்சி என்பதே இருக்க முடியாது - மாவோ, எனவே நாடு தழுவியதும், வெகுஜன இயல்புள்ளதும், சித்தாந்த ரீதியிலும், அரசியல் ரீதியிலும் உறுதிவாய்ந்த கம்யூனிச நடைமுறையினைக் கொண்ட ''போல்சுவிச'' மயமான கட்சி ஒன்று அமைய உதவுவதே ''கீழைக்காற்றின்'' நோக்கமாகும்.

அரசியல் அதிகாரத்திற்கான பாட்டாளி வர்க்க உணர்வை சிருஷ்டித்து அதற்கான போராட்ட வடிவங்களை அதன் ஸ்தாபன வடிவில் உருவாக்குதல். இதை நடைமுறைப்படுத்த தத்துவப் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து அதில் சரியானவற்றை மக்களிடம் போதிப்பது போன்ற புரட்சிகர கடமைகளைக் ''கீழைக்காற்று'' முழு மூச்சுடன் செயல்படுத்தும்.

மேலும் முதலாளித்துவ பாராளுமன்றக் குட்டையில் நாறும் முதலாளித்துவ கட்சிகள், வலது, இடது போலிக் கம்யூனிஸ்ட்டுக் கட்சிகள் போன்ற கட்சிகளின் வர்க்கத் தன்மையைத் தோலுரித்து அம்பலப்படுத்துவதும், அதன் பின்னுள்ள மக்கள் அணியினரைப் பாட்டாளி வர்க்கத்தின் பாட்டாளிவர்க்க சிந்தனைத் தலைமையிலான விஞ்ஞானபூர்வ ஸ்தாபனத்தின் பின்னால் அணிதிரட்ட வேண்டிய கடமையையும் ''கீழைக்காற்று'' ஏற்கிறது.

அதே போல புரட்சிகர இயக்கங்களுள்ளும் இன்று வலது, இடது சந்தர்ப்பவாதத் திரிபுகள் தலைதூக்கியுள்ளது. இவற்றை எதிர்த்துப் போராட வேண்டியதன் அவசியம் பற்றித் தோழர் மாவோ பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"ஒரு சரியான அரசியல் ராணுவக் கோட்பாடுகள் என்பது தன்னெழுச்சியாகவோ, அமைதியாகவோ தோன்றாது, வளராது; ஆனால், போராட்டம் என்ற போக்கினூடே மட்டும்தான் வளரும் என்பதை வரலாறு நமக்குக் கூறுகிறது. இந்தக் கோட்பாடுகளும் ஒரு புறத்தில் ''இடது'' சந்தர்ப்ப வாதத்தையும், மறுபுறத்தில் ''வலது'' சந்தர்ப்ப வாதத்தையும் எதிர்த்துப் போராடித் தோற்கடித்தாக வேண்டும். புரட்சிக்கும், புரட்சிகர யுத்தத்திற்கும் சேதப்படுத்தும் தீங்கு பயக்கும் போக்குக்களை எதிர்த்துப் போராடாமல், முற்றாக வெல்லாமல் ஒரு சரியான கோட்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதோ யுத்தத்தில் வெற்றிபெறுவதோ இயலாததாகும்."

இத்தகைய திரிபுகள் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள புரட்சி இயக்கங்களுள்ளும் இருந்து வருகின்றன. குறிப்பாக அழித்தொழிப்புப் போராட்டத்தை மட்டும் ஏற்று ஏனைய போராட்ட வடிவங்களை நிராகரிக்கும் இடது திரிபும், பொருளாதாரவாத - பாராளுமன்றவாத - சாக்கடையில் கட்சியை மூழ்கடிக்கும் வலது திரிபும் இருந்து வருவதைச் சித்தாந்தப போராட்டத்தின் மூலம் எதிர்த்து இயங்கியல் பூர்வமான ஒரு புரட்சிகர தத்துவ ரீதியான அமைப்பை உருவாக்க உதவும் பணியில் வெற்றி பெற ''கீழைக்காற்று'' தன்னால் ஆனமட்டும் விசையாக வீசும்.

சுருங்கச் சொன்னால் இலங்கை மக்களது கனவான புதிய ஜனநாயகப் புரட்சியை நடத்தி முடிப்பதே இன்றைய கடமை, இக்கடமைக்கு ''கீழைக்காற்று'' சஞ்சிகை தன்னைப் பூரணமாக அர்ப்பணித்துக் கொள்கிறது.

பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் தத்துவார்த்த, நடைமுறை ஆயுதமான இச்சஞ்சிகை மக்களணியினரிற்குச் சொந்தமானது. இதை வளர்க்க வேண்டியது உங்கள் கடமை.

விமர்சிப்பதன் மூலம், கட்டுரைகளைத் தந்துதவுவதன் மூலம், நிதியுதவி அனுப்புவதன் மூலம், சஞ்சிகையைப் பரப்புவதன் மூலம், பிற சகல முயற்சிகளின் மூலம் இச்சஞ்சிகையின் வேட்கையை வளரச் செய்யுங்கள்! வாழச் செய்யுங்கள்!

"கீழைக் காற்றின் புரட்சிகர நன்றி"



படிப்பகம்

www.padippakam.com

கவிதை

# கண்ணீர்த் துளிகள்

பகுதி 1

மூருகு இரத்தினம்

பொன்னுச்சி, சின்னுச்சி
பொன்னுதங்கம் மீனாட்சி
இன்னும் இருபிள்ளை
இளையவர்க ளாண்பிள்ளை
மின்னல் கொடிபோல
மினுங்கும் அழகுமயில்;
அன்ன நடையழகில்
ஆடவரும் மயக்கமுற;
பொன்னுட்சி பின்நாடி
பொழுதெல்லாம் அலைவார்கள்
சின்னப் பாட்டிமுத்து
சிரித்திடுவா ரப்பாலே
வண்ண இடைநெளித்து
வறுகி அவள்பார்க்கும்
வலிய பார்வைக்கு,
வாய் பொத்தி நிலம் பார்த்து
வந்த வழிபோவார்
வாலிபர்க ளெப்போதும்
தங்கத்தின் வாரிசுகள்
தப்பிதங்கள் இல்லாமல்
தன்மானம் காத்தார்கள்
தறுதலைகள் ஒதுங்கிவிட
கச்சிதமாய் அவள்பெருமை
கதைபேசிக் களித்தார்கள்.

உப்பில்லை புளியில்லை;
உடுபிடவை தானில்லை
ஒண்டக் குடிசையில்லை
செல்லாத காசுமில்லை
அப்பன் விட்டசொத்து
அவர்களன்றி வேறில்லை
எப்படியோ அவனிறந்து
ஏழாண்டு கழிந்திடவும்
எளிமையாய் வாழ்ந்தார்கள்
ஏற்றந்தான் பெறவில்லை
கூப்பன் கடைக்குட்டி
சுழற்றியது ஏழாண்டை
அப்பனுக்குப் பிள்ளையாய்
அவதரித்த காலத்தே
அப்பனைத் தின்றவன்
அவனென்று பெயரெடுத்தான்.

முருகப்பன் என்றுலோ
முதலாளிமார் களுக்குக்
கரும்பாகத் தானினிப்பான்
கரவில்லாத் தொழிலாளி

பொன்னையாச் சட்டம்பி
பொருள் கூறும் வல்லவனும்
புறக்காணிப் பக்கத்தே
பூவரச மரமேறி
பூமியிலே தான்விழுந்து
புறமுதுகுத் தண்டினிலே
புகுந்துவிட்ட மரத்துண்டால்
பாரினிலே மாண்டகதை
பலபேர் அறிவார்கள்.

பாவம் தங்கமவள்;
பசிக்காக உணவெடுக்க
பகலிரவு பாடுபட்டும்
பயனேதும் கண்டதில்லை
மதாளித்த கத்தரிபோல்
மொள மொளென்று வளராமல்
காய்ந்த சிறு கொடிபோல
சால் சரிந்து நிற்கின்றாள்
வெய்யிலிலே நீரின்றி
வெப்பத்தில் துஞ்சும்செடி
பூமியிலே விழுவதுபோல்
பூவையவள் துஞ்சுகின்றாள்.

ஊட்டச் சத்தில்லா
உணவை உட்கொண்டு
தேகந் தேற்றுவரோ?
தைரியமும் பிறந்திடுமோ?
காட்டினிலே வெள்ளம்
கரைகடந்து ஓடுவதை
கண்களிலே காட்டுகிறார்
காலமெல்லாம் கவலையிலே
நாளொன்று கூலியோ
நாலைந்து ரூபாதான்
வாலைக் குமரியரும்
வயல் நெடுகப் புல்வெட்டி
நாலுகட்டுச் சேர்த்தாலே
நாலுவெள்ளி கைசேரும்
ஓலைக் குடிலுள்ளே
ஒழுகும் மழைநீரில்
சேறும் சகதியுமாய்
சேர்ந்திருப்ப ரெப்போதும்
காலை கால் கடுக்கும்
கை சோரும் தலைவலிக்கும்
சேலையிலே நீர் வடிந்து
சோலையெல்லாம் செழிப்பாகும்.



படிப்பகம்

www.padippakam.com

தங்கம் பிரயாசி
தளர்விலா உழைப்பாளி
செங்கதிர்கள் முற்றிவயல்
சொரிந்த நிலந்தேடி
கொக்காரை மட்டையால்
கூட்டிப் பெருக்கிக்
கட்டி வைத்த நெல்மணிகள்
கஞ்சிக்கு உதவுவதால்
காலை ஒருவேளை
மாலை ஒருபொழுது
நீர் நிறைந்த உணவெடுத்து
நித்தம் உணவுண்பார்.

கூடிய கொள்ளையரின்
கூப்பன் இலவசத்தால்
சங்கக் கடையினிலே
சக்கரிசி தானெடுத்து
பங்கிட்டுப் பிடியரிசி
பக்குவமாய் வைத்ததினுல்
பொங்கல் சோறுண்ணும்
சில வேளை கிடைத்ததுவே.

அள்ளிப் பூச்சூடும்
அழகான கூந்தலிலே
கிள்ளி நெய்தடவி
கழிந்ததோ பலகாலம்
பள்ளித் தலமறியாள்
பாலர்களும்; பலகாலம்
வெள்ளி விரதங்கள்
விம்மல் பொருமலிடை
தள்ளி நாள் மாறித்
தவித்ததுவும் பலகாலம்
கொள்ளி விளக்கெரிய
கும்மிருட்டும் ஒளியாச்சு;
நள்ளிரவு வேளையிலே
நாய்த் தொல்லை ஏதுமில்லை;
அள்ளி வைக்க உணவில்லை
அதனுலே நாயுமில்லை;

கள்வர் பயமில்லை
காசு பணம் ஏதுமில்லை;
காலம் நகர்ந்தோடக்
கட்டுடலும் கரைந்திடவே
கோலங்கள் மாறியது
குமரிகளும் முற்றியதால்
தங்கம் தன் தலையைத்
தொங்கப் போட்டவளாய்
தெருவோரம் ஒதுங்கிடுவாள்
தெரிந்தவரும் கைவிரிப்பார்
''பிள்ளை அழகென்பார்
பிதாவும் இல்லையென்பார்
அள்ளித் தரவேண்டாம்
அவளுக்கொரு வீடென்பார்,
ஐம்பதி னுயிரமும்
அதற்குரிய நிலபுலமும்
சும்மா கொடுத்துவிடு
சுகமாகும் மண'' மென்பார்.

நாளும் உணவின்றி
நாயாய் அலைபவளை
பாழும் சமுதாயம்
பல்லால் கடிக்கிறது
ஆளும் வர்க்கங்கள்
அநியாயம் செய்வதையே
அலசிப் பார்ப்பதற்கோ
அவளறிவு பெறவில்லை;
கூழ் கிடைத்தால் போதும்
கூப்பிடுவாள் தன்குடியை;

வேள்விக் கடாவெல்லாம்
வீட்டைச் சுற்றி வந்து
வேடிக்கை காட்டுவதை
விசனமுடன் பார்த்திருப்பாள்
மாடி மன்னர்கள்
மயக்கும் மொழிகேளாள்
கோடி கொடுத்தாலும்
கொள்கை பலியாக்காள்.

— தொடரும் —



படிப்பகம்

www.padippakam.com

# போராளிகள் சிந்தனைக்கு

## பகுதி 1

இன்றைய இலங்கையின் புரட்சிகர அரசியல் விடுதலைப் போராட்டத்தின் தமிழின விடுதலை இயக்க அமைப்புகள் 1915-ம் ஆண்டிலிருந்து (சட்டசபை) இன்று வரையிலான ஆளும் அரசு களின் இன ஒதுக்கல் கொள்கைகளை உணர்ந்து இனவிடுதலை மூலம்தான் ஒடுக்கப்படும் இனத்தின் சுய நிர்ணய உரிமையைப் பெற முடியுமென செயல்ப்பட்டு வருவதும், இன விடுதலையை ஆயுதப் போராட்டத்தின் மூலம்தான் பெறமுடியும் என சில கொரில்லாப் பாணியிலான போராட்டத்தை யும் முன்னெடுத்து நடைமுறைப்படுத்தி வருவதும் வரவேற்கக் கூடியதானது.

இன விடுதலையை முன்னெடுக்கும் போது போராடும் அந்த இனத்துக்கு மட்டும் தானா விடுதலை? அல்லது அனைத்து இனங்களும் விடுதலை பெற வேண்டுமா? அதனுடன் வர்க்க விடுதலையும் இணைக்கப்பட வேண்டுமா? என்பதான கேள்வி களே முன்நிற்கிறது. இலங்கையில் தமிழினம் விடுதலை வேண்டி நிற்கும்போது அவர்களது அர சியல் விடுதலையை மட்டும் நினைவில் கொண்டால் மட்டும் போதாது பொருளாதார கலாச்சார விடு தலையையும் பெறவேண்டியே போராட வேண்டும். தமிழ் மக்கள்என பொதுவான பதத்தில் எடுத்துக் கொண்டால் வடக்கு கிழக்கு மக்கள், முஸ்லிம் மக்கள் மலையக மக்கள் என்போரைக் குறிப்பிட லாம். ஆனால் தமிழ்த் தேசிய இனம் என்னும் பொழுது மொழி, கலாச்சாரம், வாழ்வுப் பிரதேசம், பொருளாதாரம் என்பன நிலையானதாக-தொடர்ச் சியானதாக இருக்க வேண்டியது அவசியம். வடக்கு-கிழக்கு தமிழ் மக்களைப் பொறுத்த வரை யில் மொழி, கலாச்சாரம், வாழ்வுப்பிரதேசம் என் பன இன்று நிலையானதாக உள்ளது. ஆனால் பொருளாதாரம் சிறு கூறுகளாக இருந்தும் இது வரை நிலையாக்கப்படவில்லை. இன்று தமிழ் மக்கள் தேசிய இனமாக வளர்ந்து வருகிறார்கள் என்ற அடிப்படையில் இன விடுதலைப் போராட்டம் முன் னெடுக்கப்படலாம். ஆனால் அரசு நிர்ணயமாவ தற்கு பொருளாதாரம் கட்டுக்கோப்பான ஒன்றாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். மீன்வளம், சீமென்ற், பனம்பொருள், மழையை நம்பிய, அல் லது கிணற்று விவசாயம் என்பன இன்று உறுதி யானதாக உள்ளதென நம்பஇயலாது. உலோகத் தேவை, மின்சாரம், நதிநீர்வளம் என்பனவும் உறுதியற்ற நிலை. எனவே அவை உறுதியான, நிலையானதான பொருளாதார முன்னிணைப்பாகக் கொண்டு வரப்படும் போதுதான் வடக்கு-கிழக்கு மக்களை தமிழ்த் தேசிய இனம் என அழைக்கலாம். எனவே பொருளாதார அடித்தளத்தை உறுதி செய்ய வேண்டும்.

வாழ்வுப் பிரதேசத்திலும் சிறுசிக்கல் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது, தமிழ் மக்கள் பிரதே சங்களில் சிங்கள மக்கள் இருப்பது, தமிழ்ப் பகுதி கள் கூறுபட்ட நிலை, வடக்கு-கிழக்கு மக்கள் முஸ்லிம் மக்கள், மலையக மக்கள், சிங்கள மக்கள் பகுதிகளான தென் பிரதேசங்களில் பரந்திருப்பது போன்ற காரணங்களினால் சந்தர்ப்பவாதப் போக் கில் தமிழீழ எல்லையிட்டு, குடியேறிய மக்கள்மீதும், ஏனைய சிங்கள உழைக்கும் மக்கள் மீதும் வெறுப் பை, கசப்புணர்வை, பயத்தைத் தூண்டும் போ ராட்ட வடிவங்களை நாம் மேற்கொள்வோமானால் முற்போக்குப் புரட்சிகர சமுதாயப் புரட்சியே பின்னடிக்கப்படும். ஆகவே அது முற்றிலும்தவறு: சட்டசபை ஆட்சி தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை அந்நிய ஏகபோகவாதிகளும், ஆளும் அரசுகளும், அதுசார் வர்க்கங்களும் அடிப்படை யான தேசிய சுரண்டலை மேற்கொள்வதற்கு இனங் களின் மத்தியில் முரண்பாட்டை முதன்மையாக்கி யுள்ளனர். எனவே இன்று முதன்மையான முரண் பாடாக வளர்ந்து பரந்துபட்ட இன மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு ஏகாதிபத்தியங்களுடனும், அரசுட னும் அது சார்ந்த வர்க்கங்களுடனும் போராடிக் கொண்டு ஒவ்வொரு இனத்தினதும் உழைக்கும் மக்கள் விடுதலையடைய வேண்டும், எந்த மக்களும் தமது விடுதலைக்காக சமுதாய சுரண்டலிலிருந்து விடுபடப் போராட வேண்டும் என்பதனைச் சுட்டிக் காட்டி பெரும்பான்மை சிங்கள உழைக்கும் மக்க ளுக்கு விடுதலையின் அவசியத்தில் தூண்டுதல் அளிக்கவேண்டும். ஆனால் அவர்களில் முற்போக்கு சக்திகள் வளர்த்தெடுக்கப்படும், ஆயுதப் போராட் டம் உருவாகும் என நாம் அதுவரை காத்திருப்



படிப்பகம்

www.padippakam.com

பது என்பதல்ல அல்லது அவர்களுடன் சேர்ந்து கலந்து கரைதல் என்பதுமல்ல. எமது தமிழின விடுதலைப் போராட்டம் தொடர்ச்சியானது என்பதனையும் புரிந்து அவர்களுக்குநாம் என்றும் எதிரிகள் அல்ல என்பதனை புரியவைத்தலும் அவசியம், எமது இன்றைய புரட்சிக்கு எதிரான எந்த பிற்போக்கு சக்திகளும் எதிரிகள் என்பதனையும் புரிய வைத்தல் வேண்டும்.

முஸ்லிம் மக்கள், மலையக மக்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் தனித் தேசிய இன விடுதலைப் போராட்டத்தினை முன்னெடுக்க முடியாத நிலை; நிலையற்ற பொருளாதாரம், தொடர்ச்சியற்ற வாழ்வுப் பிரதேசம் அவர்களைத் தனித் தேசிய இனம் என்ற ரீதியிலான கண்ணோட்டத்தை செலுத்த முடியாத நிலைக்கு உட்படுத்துகின்றது. எனவே அவர்களும் இலங்கையின் சிறுபான்மை, உழைக்கும் மக்கள் என்ற பதங்களிலும், சுரண்டப்பட்டு வரும் மக்கள் என்ற அடிப்படையிலும் சிங்கள உழைக்கும் மக்களுடனே; அல்லது தமிழினத்தின் உண்மையான விடுதலைப் போராட்டங்களினுடனே, தம்மை இணைத்துப் போராட வேண்டிய தேவை அவர்களுக்குண்டு. அது அவர்களுடைய உரிமை. ஆகவே அவர்களையும் ஸ்தாபன மயமாக்குவதும், போராடத் தூண்டுதல் அளிப்பதும் தமிழின முற்போக்கு சக்திகளது கட்டாயக் கடமையாகிறது. அத்துடன் அவர்களது சுயநிர்ணய உரிமைக் கோசங்கள் அவர்களது முற்போக்கு அங்கீகாரத்துடன் என்று எழுந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டியது. (விவகாரத்து உரிமை சட்டப் புத்தகத்தில் உண்டென்பதற்காக எல்லோரும் எழுந்தமானத்திற்கு விவாகரத்து செய்வதென்பதல்ல அதற்குரிய காரணங்கள் நிரூபிக்கபடும் பட்சத்தில் தான் அது ஏற்றுக் கொள்ளப்படுகிறது.)

தமிழின விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த அனைத்து விடுதலை அமைப்புக்களும் சிங்கள உழைக்கும் மக்களிடம் பேரின வாதத்தைத் தூண்டும் சித்தாந்தங்களையும், நடைமுறைகளையும் தவிர்த்துக்கொள்வதுடன் ஏனைய சிறுபான்மை மக்கள் மத்தியில் வகுப்பு வாதத்தைத் தூண்டும் சித்தாந்த நடைமுறைகளையும் தவிர்க்க வேண்டும். இது உண்மையான புரட்சிகர அரசியல் விடுதலையின் முக்கிய நிபந்தனைகளாகும்.

புரட்சிகர தமிழின விடுதலை அமைப்புகளது ஆயுதப் போராட்டத்தில் சில கொரில்லாப் பாணியிலான போர்த்தந்திரங்கள் வரவேற்கத்தக்கதும், அவசியமானதுமாகும். ஆனால் கொரில்லாப் போராட்டத்தை போர்த்தந்திரத்தின் ஒரு பகுதியாகக் கொள்ளாமல் அதையே தொடர்ச்சியாக விளம்பரம் செய்வதும், போர்த்தந்திரங்களில் ஏற்படும் தவறுகளை நியாயப்படுத்துவதும், பொய்யான தொன்றை நடந்ததெனக் கூறுவதும், உண்மையற்ற முறைகளில் உரிமை கோருவதும், நண்பர்களை எதிரிகளாக்குவதும் போர்த்தந்திரங்களல்ல தவிர்க்கப்பட வேண்டியவை. இவ்வாறான தொடர்ச்சியான செயல்கள் விடுதலை அமைப்புக்களில் நடைமுறைகளில் இருக்குமானால் தோழர்களுக்கும், மக்களுக்கும் சுத்த ராணுவப் பார்வையைக் கொடுத்து ஒரு சில ஆயுதப் புரட்சியாளர்களாலேயே விடுதலை கிடைத்துவிடும் என நம்பிப் பார்வையாளர்கள் நிலையிலேயே தள்ளப்படுவர். அத்துடன் உண்மைகள் புரியவரும்போது மக்கள் மத்தியிலிருந்தும், தோழர்கள் மத்தியிலிருந்தும், அவ்விடுதலை அமைப்புக்கள் தூக்கியெறியப்படுவதும் தவிர்க்கமுடியாததே. சிலவேளைகளில் ஆயுத முன்னணிகள் எதிரிக்கே இனங்காட்டப்படலாம். முன்பு விடுதலை அமைப்புக்களின் நபர்களைக் காணத்துடித்த மக்கள் இன்று சில விடுதலை அமைப்புக்களைக்காண வெறுக்கின்றனர். அதோடு பய உணர்வும் ஏற்படுகின்றது. இந்த நிலையின் காரணம்தான் என்ன? ஆயுதம் நண்பர்களான மக்களையும், தோழர்களையும் ஆளநினைப்பதும், ஆயுதம் சகல பிரச்சனைக்கும் சர்வ நிவாரணி எனக் கொள்ளப்பட்டு வருவதுமாகும். அதுமட்டும் அல்ல மக்களுக்காக இயக்கம் என்ற நிலை மாறி இயக்கத்துக்காக மக்கள் என்ற நிலையும் தோன்றியிருப்பதுமாகும். மக்கள் விடுதலை ஸ்தாபனங்களின் பிழை சரிகளைச் சுட்டிக்காட்ட இயலாத போக்குகள் உள்ளன. ''தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்'' என்பர். இதை விடுதலை விரும்பிகள் உணர வேண்டும். ஏனெனில் இது தொடர்ச்சியான தொன்றாக இருக்க முடியாது: மக்கள் புரட்சியை விரும்பினாலேயே; பங்களித்துக் கொண்டாலேயே விடுதலை சாத்தியம் என்பதனை அறியவேண்டும்.

(மக்கள் மட்டுமே போராட்டத்தின் உந்து சக்தி.

— மாவோ)



படிப்பகம்

www.padippakam.com

''புரட்சிகர விடுதலை ஸ்தாபனமொன்று மக்களுக்கு ஆசிரியனாகவும், மக்களிடமிருந்து கற்றுத்தெளியும் மாணவனாகவும் இருந்தால் மட்டுமே புரட்சிகர அரசியல் விடுதலையை அடைய முடியும்''

— மாவோ

ஆயுதம் மக்களையும், தோழர்களையும் அதாவது ஸ்தாபனத்தையும் ஆளுமானால் முற்போக்கு சக்திகளாக இருக்கும் தோழர்கள் தமது கட்சிகளில் விமர்சனப் பங்கிருக்கும் வரை விமர்சித்துக் கட்சிகளைத் திருத்துவர். விமர்சனப் பங்கு ஏற்றுக் கொள்ளப்படாத பட்சத்தில் அவர்களின் அன்றைய சிந்தனைகளுக்கு ஏற்ற முறையில் செயல் பட ஆரம்பிப்பர். ''விடுதலை ஸ்தாபனம் ஆயுதத்தை ஆளலாம். ஆனால் என்றும் ஆயுதம் ஸ்தாபனத்தை ஆளக்கூடாது.'' (துப்பாக்கி மீது கட்சி ஆணை செலுத்த வேண்டும். மாறாக கட்சி மீது துப்பாக்கி ஆணை செலுத்தக் கூடாது.

— மாவோ)

இவ்வாறான போக்குகள் புரட்சிகர விடுதலை ஸ்தாபனங்களில் நிலையாகக் காணப்படுமானால் கட்சி பிளவுபடுவதுடன், புரட்சியும் பின்னடிக்கப் பட்டு தோழர்களது தியாகங்களும் விழலுக்கு இறைத்த நீராகவும், இதனால் ஏனைய தோழர்களுக்கும், மக்களுக்கும் விரக்தியும் போராட்டமே பிழை என்ற பாணியும் தான் எஞ்சி இருக்கும். இது தோழர்கள் அனைவரினது கவனத்துக்கும் உள்ளாக்கப்படுதல் அவசியம்.

அடுத்த பகுதி விசை 2 இல்..............(தொடரும்)

> ..............மிகமிக முன்னேறிய தத்துவத்தால் வழி செலுத்தப்படுகிற ஒரு கட்சியால்தான் முன்னணிப் போராளியின் பாத்திரத்தை நிறைவேற்றி வைக்கமுடியும்.
>
> — வி. இ. லெனின்


ஊக்குவிப்பு — 1

## ''பாவம் மக்கள்'' சிற்பி வெளியீடு!

இன்று பொது எதிரிக்கெதிரான போராட்டத்தை முதன்மைப்படுத்தி மக்களணியினரின் யுத்தப் பாதைக்கு வழிகாட்டாது

**இனவெறியால்; ஓர் இனத்திற்கெதிராகவும்,**

**சுகபோக தலைமை, – இரத்தவெறியால்; மக்களுக்கும், தோழர்களுக்கும் எதிராகவும்,**

**குழுவெறியால்; மாற்று ஸ்தாபனங்களுக்கு எதிராகவும்**

''முதன்மை முரண்பாடாக'' — ''பகை முரண்பாடாக'' — செயல்பட்டு மார்க்சிச – லெனினிய — மாவோயிச சிவப்பதிகாரங்களைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் போராட்ட யுத்ததந்திரத்தைக் கடைப்பிடித்து வரும் – ''இயக்க, ஸ்தாபன, – கட்சி'' அராஜகங்களின் சிலபகுதிகளைத் தோலுரித்துக் காட்டியும், இந்த அராஜகங்களின் மத்தியில் மக்களதும், தோழர்களதும் சில பரிதாபத்துக்குரிய தன்மைகளையும் சலை இலக்கிய கவிதைக்களமாக

உதிர்ந்திருக்கிறது. **''பாவம் மக்கள்''**

***''அனைத்து தளையையும் ஒருங்கே சேர்த்து***
***வேரோடு மாய்க்க இனியொரு போராட்டம்***
***தொடுப்போம்''***




படிப்பகம்

www.padippakam.com

# இந்திய அரசு -- நண்பன் என்ற மாயையின் வடிவம்.

இலங்கையின் மன்னராட்சிக் காலங்களில் இந்தியாவுடனான வியாபார உறவுகளின் மூலம் கருவான நட்பு தென்னிந்தியப் படையெடுப்புக்களால் அரசியல், பொருளாதார, கலாச்சாரப் பந்தங்கள் இந்நாட்டின் வடபிரதேசங்களில் பிரசவித்தது. காலனி ஆதிக்கங்களால் அது மேலும் மெருகூட்டப்பட்டு அரைக்காலனித்துவக் காலங்களில் — 1947 க்குப் பின் இன்றுவரை — அதன் எஜமானர்களாலும், உள்நாட்டு ஏஜண்டுகளாலும், ஒப்பந்தங்கள், நல்லுறவுகள், பேச்சுவார்த்தைகள், மாநாடுகள், இந்து சமுத்திரப் பாதுகாப்புப் பிராந்திய மயமாக்கல் போன்ற ஜனநாயக கோசங்களால் முதலாளித்துவம் இம்மாயையைப் பலப்படுத்தியது. இவர்களது கருத்துக்களை நியாயப்படுத்தும் செய்தித் தொடர்புச் சாதனங்களும் தமிழ் மக்கள் மத்தியில் இந்தியா நண்பன் என்ற மாயையை மேலும் வளர்த்தது.

தமிழ் மக்கள் இன ஒதுக்கல் செய்யப்படுவதையும், படுகொலை செய்யப்படுவதையும் சுட்டிக்காட்டி தலைமைப் பங்கேற்ற அரசியல் லாபம் கருதிகளான தமிழ்த் தலைவர்கள் பாராளுமன்ற நாற்காலிகள் மூலமும், அல்லது காந்தீய வழிமுறைக்கான சத்தியாக்கிரகம், சாத்வீகம், அகிம்சை, உண்ணாவிரதம் என்ற மாயைகளையும் மக்கள் மத்தியில் திணித்தனர். அவ்வழிகளும் செல்லாக்காசாக இறுதியில் கொள்கை வரைமுறையற்ற "தமிழீழம்" என்ற புதிய மாயையும் காட்டப்பட்டு தமது முகத்தில் தாமே சாணத்தைப் பூசிக்கொண்டு தமிழ் வாலிப விடுதலை அணிகளின் சில செயல்களுக்கு (?) அஞ்சி தமது அரசியல் நாற்காலிகளை விட்டு விட்டு இந்திய அரசே கதியென அவ்வரசிற்கு காவடிதூக்கி அந்த மாயையை "இன்றும்" மேலும் வளர்க்கின்றார்கள். அன்றியும் இந்திய இராணுவத் தலையீட்டின் மூலமே தமிழீழத்தை வென்றெடுக்க முடியும் என்றும், இந்திய இராணுவத் தலையீட்டின் மூலம் பாகிஸ்தான் பிரித்துக் கொடுக்கப்பட்டது போல் இலங்கையும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படவேண்டுமெனவும் கூறி உள்நோக்காக இந்திய சுரண்டும் வர்க்க சார்பாக அதன் அடிவருடியாக தமிழீழத்தில் தமது வர்க்க சார்பான விட்ட சிம்மாசனங்களைப் பிடிக்க வேண்டுமென எண்ணியுள்ளனர் போலும். அல்லது இரண்டு சுரண்டும் அரசுகளுடனான பேச்சு வார்த்தைகள் மூலம் சமரசத் தீர்வு கண்டுவிடலாம் என்ற மூட நம்பிக்கை போலும்.

வரலாற்றுப் பின்னணிகளை சரிவர ஆராய்ந்து வரலாற்றைத் தமது நண்பன் எனக் கூறிக்கொள்ளும் ஆயுதம் தரித்த விடுதலை அமைப்புக்கள் சிலவும் இவ்வாறான நிலையில் உள்ளதே மனம் வருந்தத்தக்கது. தேசமொன்றின் விடுதலைப் போராட்டம் வெற்றியளிக்க வேண்டுமானால் இன்னொரு நாட்டின் அரசினதும், மக்களினதும், முற்போக்கு சக்திகளினதும் ஆதரவு என்பது இருத்தல் அவசியம். ஆனால் அந்த ஆதரவு எந்த வகையில் இருத்தல் வேண்டும் என்பதுதான் மிக முக்கியமானது. தமிழின விடுதலைப் போராட்டத்தை எடுத்துக் கொண்டால் இந்தியாவிலும், இலங்கையிலும் இருக்கின்ற முற்போக்கு சக்திகள் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் எமது விடுதலை அமைப்புகள் சில இந்திய அரசின் மேலாதிக்கக் கொள்கையை அறியாதது போல் தமது குரல்வளைகளை அவ்வரசைப் பற்றிப் பிடிக்க விட்டு விட்டு, தாம் – சுதந்திரமாக "இங்கு மக்கள் கிளர்ச்சி என்ற போர்வைகளில்" – போராடுகிறோம்; இந்திய அரசின் ஆதரவு –"தலையீடு"– நமக்குத் தேவை, அதன் மூலமே தமிழின விடுதலையை அடைய முடியும், என்ற வேடத்தில் தாமும் இருப்பதுடன் தமிழ் மக்களையும் அந்நிலைக்கு இட்டுச் சென்று, சிங்கள உழைக்கும் மக்களையும் கிலி கொள்ளச் செய்யும் விதத்தில் கீச்சிடுகின்றனர். ஆனால் பாட்டாளி மக்களாம், தேசியமாம், சர்வ தேசியமாம், சோசலிசமாம், பேசித்திரிகின்றார்கள். இவ்வேடத்தில் மக்களை இட்டுச் செல்வதன் மூலம் அவர்களை மேலும் பார்வையாளர்களாக்கி சித்தாந்த ரீதியில் அரசியல் மயப்படுத்தாது போராட்டத்தை பின்னடையச் செய்கிறதே என்பதனை உணர்கின்றார்களில்லை. நம் மக்களைப் பூரண அரசியல் மயப்படுத்தி ஆயுத பாணிகளாக போராட வைக்க இவர்களுக்குத் துணிவில்லையா? அல்லது இயக்கம், புரட்சி என்றால் என்ன என்றே தெரியாதா?

> "புரட்சி என்பது மக்கள் யுத்தம். மக்களைத் தட்டி யெழுப்பி மக்களைச் சார்ந்திருந்தால்தான் இதைச் செய்ய முடியும்"

என்ற தோழர் மாவோ அவர்களின் கூற்றையும் இவர்கள் அறியவில்லையா? அல்லது இவ்வார்த்தைகளை வேறு கோணத்தில் பார்க்கிறார்களா?

இந்திய மண்ணில் புரட்சித் தத்துவத்தின் பேரில் செத்து மடிந்த, மடிந்து வருகின்ற பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும், புரட்சிகர வீரர்களது மரணத்திற்கும் காரணமாக இருந்த பாசிச இந்தி இனவெறி அரசின் பிரதமர் இந்திரா மரணத்திற்கு இங்குள்ள புரட்சிகர சக்திகள் எழுபதிற்கும் மேற்பட்ட குண்டு வேட்டு அஞ்சலி செலுத்தியதுடன் பச்சை மாவிலைத் தோரணங்களுடன் வட பிரதேசங்களை அலங்கரித்து மக்களையும் அஞ்சலி மாயையில் சிக்கவைத்தனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும், அதன் ஏஜண்டான இலங்கை அரசயந்திரத்தையும் எதிர்த்து வரும் (இது நியாயமானது) இயக்கமொன்று அதாவது– அலன் தம்பதிகள் கடத்தலை மேற்கொண்ட புரட்சிகர அமைப்பொன்று அவர்களை விடுதலை செய்ததற்கான முதற்காரணம் இந்திய அரசின் வேண்டுதலே எனவும், இரண்டாம் காரணம் மனிதாபிமான அடிப்படை எனவும் தமது அறிக்கையில் கூறி



படிப்பகம்

www.padippakam.com

யுள்ளனர், ஆனால் 1. கடத்தலுக்கு முதலிலேயே இந்திய அரசைக் கேட்டுக் கடத்தியிருக்கலாம். 2. மனிதாபிமான அடிப்படையை முதலிலேயே கடைப்பிடித்திருந்தால் கடத்தியிருக்கத் தேவையில்லை என்பதனை ஏன் உணர வில்லை? வேறு சில புரட்சிகர அமைப்புகளும், இந்திய முற்போக்கு அணியினதும், இந்திய மக்களினதும் மரணத்திற்கு அஞ்சலி செலுத்தாது, அவர்களது புரட்சிகர கோசங்களுக்கு அங்கீகாரம் தெரிவிக்காது அவர்களைப் படுகொலை செய்துவந்த, இந்திய சிறுபான்மை இனங்களின் சுயநிர்ணய உரிமையை (பிரிந்து போதல் உட்பட) அங்கீகரிக்காது அடக்கு முறைகளை மேற்கொண்ட பாரதப் பிரதமர் மரணத்திற்கு நான் முந்தி, நீ முந்தி என வரிந்துகட்டி பிரசுரங்கள், அறிக்கைகள், பேட்டிகள் என்பவற்றின் மூலம் அஞ்சலி செலுத்தி இந்திய அரசின் செயல்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளதை விடுதலையில், புரட்சியில் உணர்வு பூர்வமான சிந்தனை உள்ள மக்கள், போராளிகள், அறிவு ஜீவிகள் மறந்து விடமாட்டார்கள். இச் செயல் முறையால் தமிழ் மக்கள் இந்திய அரசை முற்போக்கான அரசு எனவும், ஆகவே இந்திய அரசு உதவும் எனவும், அதனை நண்பன் என்ற மாயை வலையில் மேலும் சிக்குப்படுவார்களெனவும், இதனால் மக்கள் ஆயுதப் புரட்சிப் பாதையில் இருந்து நழுவி மேலும் பார்வையாளர்களாவார்கள் என்பதனையும் ஏன் புரட்சிகர அமைப்புகள் கருதவில்லை? அன்றியும் இது புரட்சிகர அமைப்புகளே இன்னும் அரசியல் மயப்படுத்தப்படவில்லை என்பதனையும், மக்களையும் புரட்சிகர அரசியல் மயப்படுத்தும் செயல் திட்டங்களில் ஈடுபடவில்லை என்பதனையும் எடுத்துக்காட்டுகின்றது. ஆக இவ்வாறான புரட்சிகர அமைப்புகள் இந்தியாவை பின்தளம் என்று வலியுறுத்துவதுடன் இந்திய அரசின் அடிவருடிகளாக அவர்கள் குட்டைகளில் தாங்களும் ஊறி மக்களையும் ஊறவைத்து இந்த மாயையிலேயே இலங்கையில் இன்றுள்ள அமெரிக்கா போன்ற ஏகாதிபத்தியங்களின் சுரண்டல் முறைகளுக்கும், சிங்கள - தமிழ் - தரகு - அரை நிலப்பிரபுத்துவ சுரண்டல் நுகத்தடிக்குப் பதிலாக சமூக ஏகாதிபத்தியமான ரஷ்யாவினதும் அதன் ஏவல் நாய்களினதும் நவகாலனித்துவ புதிய சுரண்டல் நுகத்தடியைப் பூட்டிக்கொண்டு அதன் வழி எமது நாட்டின் அரசியல், பொருளாதார, கலாச்சார நிலைகளை இட்டுச் செல்வதையுமே குறியாக சுட்டிக்காட்டுகின்றது.

மக்களை ஸ்தாபன மயப்படுத்தி அணிதிரட்ட திராணியற்றவர்களும், நமது சொந்தப் பலத்தில், சொந்தத் தளத்தில் நின்று போராடத் தெரிந்து கொள்ளாதவர்களும், 'எம்மால் இவ்வளவுதான் முடியுமென்று அறைகூவல் கூவிவிட்டு விடுதலைக்காகப் போராடும் முற்போக்கு சக்திகளுக்கும், போராளிகளுக்கும், வெகுஜனங்களுக்கும் பாதையை விடுத்து ஜனநாயகப் புரட்சிக்குப் படுகுழி பறியாது ''நாய்க்கு ஏன் போர்த்தேங்காய்'' என ஒதுக்கி விடுவதே தமிழினத்திற்கும், இன விடுதலைக்கும் இவர்கள் செய்யும் மாபெரும் உதவியாகும். இல்லையேல் உண்மையான தத்துவ, நடைமுறைகள் வழி திசைதிருப்பப்படும்.(?) இதை விட்டு விட்டு இன்றுள்ள சூழ்நிலையில் ஏட்டிக்குப் போட்டியாக இந்திய அரசுடன் உறவு என்றும், பேச்சு வார்த்தை என்றும், அரசியல் தீர்வு என்றும், இந்திய இராணுவம் வருகிறது என்றும், ரஷ்ய மிதவாத முதலாளித்துவ கொள்கைகளின் அடிவருடிகளை சிறு சிறு முற்போக்கு சக்திகளென்றும், அது தமது பின்தளம் என்றும், தங்களுக்குள்ளேயே முரண்பட்டுக் கொண்டும், மூடி மறைத்தும் மக்களையும், போராளிகளையும் காதிலே பூ வைத்தவர்களாக ஆக்குவது புரட்சிகர பாட்டாளி வர்க்க அரசியலுக்குச் செய்யும் மாபெரும் துரோகமாகும். அத்துடன் தென்னிலங்கையிலுள்ள சிங்கள உழைக்கும் மக்களின் பயத்தை அதிகரிக்கச் செய்து அவர்கள் முற்போக்குச் சக்திகளாக மாறுவதை இடைநிறுத்தி இலங்கை இனவெறி ஐ. தே. கட்சி அரசினதும் அதன் வால்பிடிகளதும் பேரினவாதப் பேச்சுக்கும் இரையாக்குவதாகவும் உள்ளது.

யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு மூன்று மாதங்களாக நடைபெற்ற திம்புப் பேச்சுவார்த்தையும் வம்புப் பேச்சுவார்த்தையானதும், இந்திய காங்கிரஸ் பிரதிநிதி ரஜீவ் சதியும், அதனுடனான வர்த்தக உறவைப் பலப்படுத்தி இக்கால இடைவெளிக்குள் இலங்கை அரசு மேற்கொண்ட இராணுவ, யுத்தக் கொள்கைகளும் இன்று ஓரளவு மக்களுக்குப் புரிந்திருக்கும். நேற்று அன்னை: இந்திரா மேலாதிக்க வெறியில் எட்டடி பாய்ந்ததை உணர்ந்தவர்கள் இன்று குட்டி: ராஜீவ் பதினாறடி பாய்ந்து வருவதையும் உணரத் தவறமாட்டார்கள். ஏகாதிபத்தியங்களதும், ஏனைய சகல பிற்போக்கு வாதிகளதும் புதிய, புதிய மாயைகளை - அதிக ஆதரவு பெற்ற த. வி. கூட்டணியினர் இன்று தூக்கியெறியப்பட்டது போல் - மக்கள் காலதாமதம் ஆனாலும் இனங்கண்டு தூக்கியெறிய முற்படுவர்.

''மார்க்ஸிச இயங்கியலில்'' — ''ஒரு பொருளின் அகநிலையில் முரண்பாடு நிகழும் போது, புறநிலையில் முரண்பாடுகள் அதிகரிக்கும் போதும் அகநிலைப் பொருளில் புதிய மாற்றம் நிகழ்கின்றது'' — ''புரட்சி அகநிலையில் பல வர்க்க முரண்பாடுகள் நிகழும் போது, புறநிலையில் சுரண்டல் அரசுகளினதும், பிற்போக்குவாதிகள், திரிபுவாதிகள் ஆகியோரது சுரண்டல் முரண்பாடுகளும் தீவிரப்படும் போதும் புரட்சிகர அகநிலையில் பாட்டாளி வர்க்க சிந்தனையும், அறிவு ஜீவிகளது சிந்தனையும் மேலும் மெருகூட்டப்பட்டு புதிய புரட்சிகரநிலை தோன்றுகின்றது''

— மார்க்ஸ் — ''குணா''

ஒரு தனி நபருக்கு எது பொருந்துகிறதோ அதுவே சில தேவையான மாற்றங்களுடன் அரசியலுக்கும், கட்சிகளுக்கும் பொருந்தும். தவறுதலே செய்யாதவன் புத்திசாலியல்ல; ஏனெனில் அது போன்ற மனிதனே இல்லை - இருக்கவும் முடியாது. எவன் மிகப் பெருந்தவறுகளைச் செய்வதில்லையோ, எவன் செய்த தவறை சுலபத்திலும், சீக்கிரத்திலும் திருத்திக் கொள்ளத் தெரிந்து கொள்ளுகிறானோ அவனே சிறந்த புத்திசாலி!! — ''லெனின்''



படிப்பகம்

www.padippakam.com

# கலாச்சார சிதைவுகள்;
## ''மினி சினிமா'' திரைப்படங்கள்

தமிழ் மக்கள் மத்தியில் புரட்சிகர அறிவு நிலை தோன்றி வரும் இன்றைய சகாப்தத்தில் ''மினி சினிமா'' வீடியோ மூவிசின் வானலை ஒளிபரப்பு - போன்ற திரைப் படத்துறை சமூகத்தின் சகல துறைகளிலும் ஆக்கிரமிப்புச் செய்து சீரழிவுக் கலாச்சார வலையினுள் அவர்களைச் சிக்க வைத்தும் வருகிறது.

இதனை ஒளிபரப்புபவர்கள் மக்களின் விருப்பத்திற் கிணங்க, ஆதரவின் பேரில் நடத்துகிறோம் எனப் பசப்புக் கூறி மக்களைச் சீர் கெடுக்கும் இதனை அவர்களிடம் திணித்து வருவதன் நோக்கம்; இக்கலாச்சார மேலாதிக் கத்தை அவர்கள் மத்தியில் வெற்றிகரமாக நுழைத்தால் தாம் பொருளாதார இலாபம் அடையலாம் என்பதே யாகும்.

ஆனால் இதனால் மக்கள் அடையும் பிரதிபலன் என்ன வென்றால் அவர்கள் கையில் இருக்கும், உழைக்கும், பணம் பறிக்கப்பட்டு மீண்டும், மீண்டும் அவர்களுடைய புரட்சிகர சமூக உறவுகள் சிதைக்கப்பட்டு முதலாளித்துவ சிந்தனைகளே தோன்றுகிறது என்பதே.

திரைப்பட உலகில் வரும் கதாநாயகியர் பாத்திரங் களாலும், ஆபாசப் பாத்திரங்களாலும் காட்டப்படும் நடை, உடை, பாவனைகள் அனைத்தும் பெண்கள் மனதில் வேரூன்றி ''கிரேர்யிச'' புடைநாற்ற சிந்தனைகள் அவர் கள் உடலெங்கும் பரவ வழிசெய்கிறது.

கதாநாயகர்கள் பாத்திரமென்பது; பிரச்சனைகள் அனைத்தையும் தீர்க்கும் சர்வரோக நிவாரணி தன்னிகரற்ற கதாநாயகனே என மக்களை நினைக்க வைப்பதால் இன் றைய மனிதனின் நடைமுறையில் — சமூகயதார்த்தத்தில் கதாநாயகர்களாக வரும் தனிநபர்களே (?) பிரச்சனைகளைத் தீர்த்துவிடுவர் என போலிப்பிரமை கொள்ளவைப்பதுடன் பார்வையாளர் நிலைக்கும் தள்ளுகிறது. தனிநபர்கள் ஒவ்வொருவரும் தாமும் கதாநாயகர்கள் போல் சஞ்சரித்து தானும் அவ்வாறாக இருப்பதாகக் கருதி மாரீச மான்களை யும், கானல் நீரையும் தேடி அலையும் இழிந்த நிலையில் தள்ளப்படுகின்றான். அதுமட்டுமல்லாமல் இயல்பிலேயே வன்முறை கொண்ட சமூகம் அமைப்பு ரீதியான, ஸ்தா பன வடிவிலான — வன்முறையைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாக தனிநபர் வன்முறையைத் தோற்றுவிக்க இக் கதாநாயகன் பாத்திரம் துணைநின்று முதன்மைப்படுத்தி வருகிறதும் குறிப்பிடத்தக்கது.

திரை அரங்கில் வரும் ஒவ்வொரு பாடல்களிலும் பத்துப் பதினைந்து ஆடைகளின் தரங்கள், மாடமாளிகை களின் தோற்றங்கள் போன்ற காட்சிகள் ஏழை ஜனங் களின் மனங்களில் நிழல் சுகத்தைக் காணவைக்கிறது.

- இன்றைய சூழ்நிலையில் மாணவர்களது கல்வியில் பாதிப்பு, குடும்பங்களில் வீண் பொருளாதார விரயம், மக்கள் மனதில் உண்மைக்குப் புறம்பான சிந்தனை, மக்கள் புரட்சிகர சூழ்நிலையை உணர விடாது தடுத்தில், என்பவற்றைத் தூண்டிவரும் ''மினி சினிமா'' ''வீடியோ மூவிஸின் வானலை ஒளிபரப்பு'' ''திரைப்படங்கள்'' ஆகிய காட்சிகளை வெளியிடும் உரிமையாளர்களே! இத்தீய செயலை உணர்ந்து ஒளிபரப்பு செய்வதை உடன் நிறுத்துங் கள்.
- எதிர்கால நற்சமுதாய சிந்தனைகளை மழுங்கடிக்கும் சீரழிவு ''மினி சினிமா'', ''வீடியோ மூவிஸின் வானலை ஒளிபரப்பு'', ''திரைப்படங்கள்'' போன்ற காட்சிகளை - மனிதாபிமானம் கொண்டவர்களே! அவற்றைப் பார்க்கும் எண்ணங்களை வீசி எறியுங் கள்!! ஒளிபரப்பு செய்யப்படுவதை கண்டித்துக் குரல் கொடுங்கள்!!!
- விஞ்ஞான பூர்வ உணர்வுகளை மாணவர்கள் அறிந்து கொள்வதும், நிலைநிறுத்திக் கொள்வ துமே சிறந்தது. எனவே உங்கள் கல்வியை சிறந்த முறையில் முன்னெடுக்க இச் சீரழிவுக் கலாச்சாரத்தில் சிதைவை ஏற்படுத்த அணிசேருங் கள் மாணவர்களே!

★ கலாச்சாரச் சீரழிவு!

★ பொருளாதாரப் பாதிப்பு!

★ போராட்டப் பின்னடைவு!

- கலாச்சாரப் புரட்சியும் சமுதாய மாற்றத்தில் ஏற்பட வேண்டுமென உண்மையான உணர்வு பூர்வ போராட்ட தத்துவ நடைமுறைகளைக் கொண்ட இயக்கங்களே! சிந்தனையில் சிதைவுகளை ஏற்படுத் தும் ''மினி சினிமா'', ''வீடியோ மூவிஸின் வானலை ஒளிபரப்பு'' ''திரைப்படங்கள்'' என்ப வற்றை ஒழித்திட முன்வாருங்கள்!!
- அன்னையர்களே! தந்தையர்களே!! உங்களது பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக முன்னணிகளாத் திரண்டு இக் கலாச்சாரத்தை எதிர்த்து நில்லுங் கள்!!!
- அறிவு ஜீவிகளே! ஆசிரியர்களே!! சமூகத்திற்கு உதவாத, அநாகரிக வாழ்வுக்கு வழிகாட்டும், பொருளாதார விரயத்தை இன்றைய சூழ்நிலையில் ஏற்படுத்தும் இத்தீய நடைமுறையை மனிதாபனம் கொண்டு எதிர்க்க முன் வாருங்கள்!!!
- இதைத் தடுப்பதற்கு மக்கள் அணியினரை ஒன்று திரட்டுவோம்! அணிசேர்ப்போம்!!

வெளியீடு:- கீழைக்காற்று வெளியீட்டுக் குழு.



படிப்பகம்

www.padippakam.com

வயதுவந்த, திருமணமான ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான உடலியல் பூர்வமான நிகழ்வுகள் இரும்புத்திரையில் இருக்கவேண்டியதொன்று. ஆனுல் இன்றைய இந்தத் திரையுலகின் பாடல்கள், ஆடல்கள், வசனம், காட்சியமைப்பு போன்றவற்ருல் அரைகுறை ஆபாசமலங்கள் இளவயதினர் எண்ணங்களில் வெளிப்படையாகத் தூண்டி தத்தம் சமூகப்பிரச்சனைகளை மறக்கச் செய்து பாலுணர்வு ஒன்றே முதன்மைப் பிரச்சனை என அவர்கள் முன்நிறுத்துகிறது.

முக்கியமாக இன்று இனவெறி ஆட்சியின் கொள்கைகளாலும், சில விடுதலைப்பிரிவினதும், தீயசக்திகள் சிலரினதும் செயல்களினுலும் அறிவுஜீவிகளாக வளரவேண்டிய மாணவ சமுதாயத்தின் கல்வி பாதிக்கப்பட்டு வருவது சமூகம் அறிந்ததே, மேலும் ''மினி சினிமா'' காட்சிகளாலும் பாதிக்கப்பட்டால் எதிர்கால புரட்சிகர அரசியல் நிலையில் அறிவுஜீவிகளே அற்ற நிலைதான் உருவாகும்.

அண்மையில் ''மினியின்'' தொடர்ச்சியான ஒளிபரப்புக்களால் சிறுர்களின் மனம் ''சிலுக்'' கவர்ச்சிகளால் உந்தப்பட்டு வருவதை அவதானித்திருப்பார்கள் சமூகத்தினர். அன்றியும் இதன் ஒளிக்கதிர்கள் அவர்களுடைய கண்பார்வையையும் இளவயதிலேயே கெடுத்து விடுகின்றது. மாணவ, மாணவிகள் கல்வியில் போதிய கவனத்தை செலுத்தவும் முடிவதில்லை.

எந்த விதத்திலும் பணத்தைப் பெற்று இத்திரை ரசனைகளை ரசித்துவிட வேண்டும் என்ற நிலை எவ்விதத்திலும் சமூகத்திற்கு உதவப் போவதில்லை. மாருக மக்களுக்கு அநாகரீக வாழ்வையும், அவர்களை புரட்சிப்பாதையில் இருந்து அந்நியப் படுத்துவதாகவும், சரணடைவுப் பாதையையே கலாச்சார வடிவத்தில் அமைக்கும் என்பது குறிப்பிடக்கூடியது.

இதற்காகச் செலவிடும் பணத்தை சமூகத்தின் அறிவியல் ஆக்கங்களுக்கும், பொருளாதார செயல் திட்டங்களுக்கும் பொதுமக்களை சமூகத்தைப் பற்றிச் சிந்திக்க வைக்கக் கூடிய பொதுவுடைமைப் பின்னணிக் கலை, இலக்கிய நிகழ்ச்சிகளுக்கும் செலவிடுவதே சிறந்தது.

அண்மையில் மாணவர்களால் - ''மினி'' வீடியோக்களால் எவ்வாறு சமூகம் பாதிக்கப்பட்டு வருகிறது என்பதனை இரத்தினச் சுருக்கமாக எழுதி தமது கருத்துக்களுக்கு முன்னுரிமை தந்து இந்த மினி அசிங்கத்தை மனிதாபிமானம் கொண்ட மக்களே! அகற்றுவீர்கள்! எனக் கோசம் வைத்த தமது கையெழுத்துப் பிரதிகளை சனசமூக நிலையங்கள் போன்ற பொது இடங்களில் அவர்களால் வைக்கப்பட்டும், ஒட்டப்பட்டும் இருந்ததை நாம் கட்டாயம் குறிப்பிட்டாக வேண்டும். அவர்களுடைய இப்பிரதிகளே எம்மையும் இக்கட்டுரையை வரையத் தூண்டியது நன்றி மாணவர்களே!

எனவே சமூகயதார்த்தம் சீரழிவு திரையுலக யதார்த்தத்தில் தலைகீழாக முரண்பட்டுள்ளதைப் போன்று சகல சீரழிவுக் கலாச்சார சிதைவுகளையும் எதிர்க்க புரட்சிகர பொதுமக்களே! முற்போக்கு அறிவுஜீவிகளே! ஜனநாயக இயக்கங்களே! முன்வருவீர்!

# செந்தமிழ் நாட்டு அன்னையரே!

நாகலாந்து வீதிதோறும் நிர்வாணப் படங்கள் காட்டும் ''வீடியோ'' நிலையங்கள் பெருகி வருகின்றன. எட்டுலட்சம் மக்கள் உள்ள ஒரு நகரத்தில், இப்படிப்பட்ட வீடியோ நிலையங்கள் 300 இருக்கின்றன. அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள், அரசியல் வாதிகளின் முழு ஒத்துழைப்போடு நாகலாந்து முழுவதும் தங்குதடையில்லாமல் நிர்வாணப் படங்கள் வியாபாரம் செய்யப்படுகின்றன. அரசியல் வாதிகளும், அதிகாரிகளும், தங்களுடைய வீடுகளிலேயே இவற்றைப் போட்டுப் பார்த்துக் கொள்கிருர்களாம்.

போதை மருந்துகள், புளூபிலிம்கள் இளைஞர்களுக்கு தாராளமாகக் கிடைக்கின்றன. இவைகளினுல் இளைஞர்கள் சீரழிவதைத் தடுக்க நாகலாந்து தாய்மார்கள், சங்கம் ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

நீண்டகாலமாக நாகா மக்கள் தங்கள் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திய போராட்டத்தைத் தீரமுடன் தொடர்ந்து நடத்தி வருகிருர்கள். இளந்தலைமுறையினர் போராடும் வீரர்களாக மாறுவதைத் தடுக்க இந்தச் சீரழிவு திட்டமிட்டே பரப்பப்படுகிறது. இதை உணர்ந்து கொண்ட தாய்மார்கள் இந்தச் சீரழிவைத் துடைத்தெறியும் வரை ஓயப் போவதில்லை; என போர்க்கொடி உயர்த்தியிருக்கிருர்கள்.

— நன்றி: மன ஓசை —

''பூர்சுவா இலக்கியங்களை ஆதரிப்பவர்கள் நிகழ்காலத்தைக் கொலை செய்தவர்கள் ஆவார்கள். நிகழ்காலத்தைக் கொலை செய்வதன் மூலமாய் அவர்கள் எதிர்காலத்தையும் கொலை செய்கிருர்கள். எதிர்காலம் என்பது; இனிமேல் வர இருக்கும் நமது சந்ததியர்க்கு உரியது. அவர்களுக்கு உரியதான எதிர்காலத்தையும் கொலை செய்ய இவர்களுக்கு என்ன யோக்யதை இருக்கிறது?''.........

— லூ — சுன்



படிப்பகம்

www.padippakam.com

# இந்திய - இலங்கை அரசியலின் இன்றைய பொதுப் போக்கு

இன்றைய இந்தியா பல்வேறு தேசிய இனங்களின் சிறைக்கூடமாக விளங்குவதுடன் பெரும்பான்மை மக்களான, தொழிலாளர்கள், விவசாயிகளை, அடக்கி ஒடுக்கி வருவதுபோல் ஏனைய தேசிய இனங்களையும், அடக்கி ஒடுக்கிவருகின்றது. இதே போல்தான் இலங்கை அரசும், இலங்கைத் தரகு முதலாளிய – அரைநிலப்பிரபுத்துவக் கும்பல்கள் — ஐ. தே. கட்சி, ஸ்ரீ. ல. சு. கட்சி, த. வி. கூட்டணி, இ. தொ. காங்கிரஸ் இன்னும் பல்வேறுபட்ட பாராளுமன்ற வால்பிடிகள் — எவ்வாறு தங்கள் ஏஜமானர் களான ரஷ்சியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் ஏஜண்டுகளாக இருந்து தமது வர்க்க நலன்களைப் பாது காத்துக் கொள்கிருர்களோ அதேபோல்தான் இந்திய தரகு முதலாளிய — அரைநிலப்பிரபுகளும் — அ. இ. கா. கட்சி, ஜனதா கட்சி, அ. இ. அ. தி. மு. கழகம், தி. மு. கழகம், மா. லெ. கட்சி, ஏனைய வால்பிடிகள், — ரஷ்சிய, அமெரிக்க ஏஜண்டுகளாவர். இலங்கையில் ஆட்சிமொழி சிங்களம், அரசகரும மதம் பௌத்தம் இருப்பது போல் இந்தியாவில் ஆட்சி மொழி இந்தி, அரசகரும மதம் இந்து ஆகும். கலை, கலாச்சாரம், பண்பாடு என்பனவும் சிறுபான்மைத் தேசிய இனங்களுள் திட்டமிட்டு புகுத்தப் பட்டும், பேரினவாதத்தை வளர்த்தும் பெரும்பான்மை இன மக்களின் ஆதரவின் பேரில் ஆட்சியை நடத்தி வருகின்றனர்.

இலங்கையில் இனப்படுகொலை நடக்கின்றது என்று நீலிக்கண்ணீர் வடிக்கின்ற இந்தி அரசு தனது நாட்டில் நடக்கின்ற இனப் படுகொலையையும், தனி நாட்டுப் போராட்டங்களையும் ஏன் மூடிமறைக்கின்றது. ஆனல் இதற்குத் தீர்வுகாணப் போகிறதாம்; அதுவும் பேச்சு வார்த்தையின் மூலம்; இது "விந்தையடி மாமி கொத்து தடி கோழி" என்பது போலிருக்கிறது. ஏன் இன்றும் கூட எமது போராட்டம் நியாயமானது என்றும் "தமிழ் மக்களது பிரச்சனைக்கு தமிழீழம் தான் சரியான தீர்வென்று தனிநாட்டுக் கோசத்தை இன்னும் அங்கீகரிக்காத இந்திய அரசு நமது மக்களுக்கு உதவி புரியுமா? மேலும் இலங்கை அரசுடனன வர்த்தக, இராணுவ; இராஜதந்திர உறவுகளை துண்டிப்பதற்குப் பதிலாக இந்திய அரசு பலப்படுத்தி வரு கின்றது. தமிழீழ விடுதலை அமைப்புகளை இணைத்து ஆயுத உதவியை உதவியாகச் செய்யாது அவர்களுக்குள் ளேயே முரண்பாடுகளையும் தோற்றுவித்து — சில வேளை களில் பலாத்காரப்படுத்தியும் — பண்டமாற்று மூலமோ, பணத்திற்கோ ஆயுதங்களை வழங்க முன்வராத இந்திய அரசு தனது அடிவருடிகள் "சிலர்" மூலமே அதையும் செய்கின்றது. இது "தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளுவது" போல் இருக்கிறது.

தனது நாட்டில் மாநிலங்களின் தனிநாடு கோரும் சிறுபான்மையின மக்களை நசுக்குவதற்காக பிரிவினைவாத தடைச் சட்டம் போன்ற சட்டங்களை அமுல்படுத்தி அதை மீறுபவர்களுக்கு மரணதண்டனை மசோதாவும் சட்டப் புத்தகத்தில் வரைந்திருக்கிறது. இலங்கையின் இனவெறி அரசு இனவெறியூட்டி, இராணுவக் குவிப்பு, ஆயுதக் குவிப்பு, இனப் படுகொலை என்பன வற்றைச் செய்து வருகின்றது. ஆனல் இந்தி இனவெறி காங்கிரஸ் மத்திய அரசும், தமிழக மாநில அரசும் இலங்கைத் தமிழர்கள் படு கொலையைக் கண்டித்து அங்கு சுவரொட்டிகள் ஒட்டவோ; போராட்டங்கள் நடத்தவோ, முயலக்கூடாதென தடைச் சட்டம் போட்டுள்ளது. எனவே இந்திய அரசு சுரண்ட லற்ற தமிழீழத்தைப் பெற்றுத் தரும் என்பது "கிளி இலவு காத்த" கதைபோல் தான். தனது நாட்டில் உள்ளது போல் ஓர் மாநில சுயாட்சியை தமது இலங்கை அடிவருடிகள் சார்பாக வழங்க முன்வரலாம். நாம் இது வரை சிந்திய இரத்தமும், கொடுத்த உயிர்ப்பலிகளும், அனுபவித்த சித்திர வதைகளும், சுரண்டலுள்ள அடக்கி ஒடுக்குகின்ற மாநில சுயாட்சியைப் பெறுவதற்காகவா? அல்லது இராணுவத் தலையீட்டின் மூலம் ஆளுங்கும்பல் தமிழீழத்தைப் பெற்றுக் கொண்டால் அல்லது இலங்கை முழுவதையும் மேலாதிக்கம் செய்து கொண்டால் இந்தி யாவின் 22 வது அடிமை மாநிலமாகத் தமிழ் நாட்டை வைத்திருப்பது போல் இலங்கையில் சிங்கள-தமிழ் பகுதி களைப் பிரித்து 23-வது 24-வது அடிமை மாநிலங்களாக வைத்திருக்க முடியாதா? அப்படியாயின் ஒரு சின்னஞ் சிறிய எமது நாட்டின் சுரண்டலிலிருந்து விடுதலை பெற இவ்வளவு இன்னல்களை அனுபவிக்கும் நாம் ஆசியாவின் ஒரு துணைக்கண்டமான இந்தியாவில் இருந்து விடுதலை பெற எத்தனை இன்னல்களைக் காணவேண்டும்.

சமூக ஏகாதிபத்தியமான ரஷ்யாவின் குஞ்சங்களில் சிக்குண்ட இந்திய அரசின் துணை ஏஜண்டுகளான இங் குள்ள சி. ல. சு. கட்சியினரதும், த. வி. கூட்டணியின ரதும், சில விடுதலை அமைப்புகளதும் வால்பிடித்தலைப் பயன்படுத்தி இலங்கையை அது மேலாதிக்கம் செய்யு மானல் அந்நிய தளத்தில் நீயே கதியென நிற்கும் போராளிகளதும், மக்களதும், நிலை பரிதாபத்திற்குரிய தன்றே! இதே போல்தான் தமிழ்நாட்டு அரசியல் கட்சித் தலைவர்களது நிலைப்பாடும் இந்திய இராணுவம் தலையிட வேண்டும் என்பதே. எனவே, ஒட்டு மொத்தத்தில் இவ் அரசியல்வாதிகள் அனைவரும் "ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே"



படிப்பகம்

www.padippakam.com

இலங்கை அந்தமான் தீவுபோல் இந்து சமுத்திரத்தின் தூரதேசமாக இருந்திருந்தாலோ, தமிழ் நாட்டுத் தமிழ் மக்கள் இந்தியாவின் வேறொரு திசையில் அல்லது வேறொரு மொழியில் இருந்திருந்தாலோ எமது போராளிகளைத் தமது அடிவருடிகளாக மாற்றியிருக்கும், இல்லையேல் கடித்துக் குதறியிருக்கும் இல்லையேல் இலங்கை அரசிடம் இந்திய அரசின் இலங்கை ஏஜண்டுகளின் ஆட்சி இங்கு நிலவியிருந்தால் ஒப்படைத்திருக்கும், அல்லது வங்கதேசம் பிரிக்கப்பட்டது போல் பிரித்திருக்கும் அல்லது சீக்கிம் அபகரிக்கப்பட்டது போல் அபகரிக்கப்பட்டிருக்கும். ஏன் இன்று கூட மேலாதிக்கக் கொள்கையிலேயே இந்திய அரசு இலங்கை அடித்தளத்தின் நோக்கில் செயல்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று எமக்கு வரலாற்றுப் பின்னணியாக இருக்கும் வங்கதேசத்தில் 1971-ல் ரஷ்சிய சார்பாக இந்திய இராணுவம் தலையிட்டதால் அந்நாட்டில் புரட்சிகர விடுதலைக் கோசத்தை வைத்த நக்சல்பாரித் தோழர்களின் இராணுவ முன்னணியை நசுக்கியதுடன் சந்தேகத்தின் பேரில் பல்லாயிரக் கணக்கானோரைச் சித்திரவதையும் செய்தது. இந்திய இராணுவ கற்பழிப்புகளால் அதிகமான பெண்கள் தற்கொலை செய்து கொண்டதுடன் அன்று பிறந்த குழந்தைகளுககு தகப்பன்யாரென்று இன்றுவரை தெரியாமல் போனகதையையும் நாம் மறந்துவிடக் கூடாது. இந்திய இராணுவத்தால் கற்பழிக்கப்பட்ட பெண்களையும், விதவைப் பெண்களையும் திருமணம் செய்யும் படியும், தகப்பன் யாரென்றே தெரியாத குழந்தைகளுக்கு தகப்பனர்களாக முன்வரவேண்டும் என வங்க வாலிபர்களுக்கு பாரதப் பிரதமர் இந்திரா அறைகூவல் விட்டதுபோல் எமது நாட்டு வாலிபர்களுக்கும் பாரதப் பிரதமரின் அறைகூவலைக் கேட்க ஆசையா? அதோடு அப்பாப்பிள்ளை அமீருடையதோ அல்லது வேறுயாருடையதோ (?) அதற்குத் தாளம் போடும் கோவூர்கிளார்களது இரங்கற்பாக்களையும் கிரந்தங்களையும் கேட்க ஆசையா? வங்கப் பெண்களுக்கு ஏற்பட்டநிலை எமது நாட்டுப் பெண்களுக்கும் வரவேண்டுமா?

அண்மையில் சென்னையில் நடந்த தமிழ்ப் பல்கலைக் கழக மாணவர் போராட்டம் இலங்கையின் இனப்படுகொலையைக் கண்டித்தும், தமிழீழ தனிநாட்டுக் கோசத்தை இந்திய மத்திய அரசையும், தமிழ் நாட்டு மாநில அரசையும் அங்கீகரிக்கும் படியும் கோசங்கள் எழுப்பப்பட்டு போராட்டம் நடத்தப்பட்டபோது மத்திய அரசு தனது அடிவருடியான மாநில அரசின் கூலிப்பட்டாளங்களைக் கொண்டு தடியடிப்பிரயோகம் செய்து அப்போராட்டத்தை அடக்கியது. இவர்களின் வன்முறையால் பல மாணவர்கள் பலத்தகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள். பலர் கைதுசெய்யப்பட்டார்கள். ஏனைய மாணவர்களின் ஸ்தாபன வடிவத்திலான போராட்ட உணர்வுகளை மழுங்கடிப்பதற்காக பாடசாலை விடுமுறையளித்து ஏனைய தமிழ்ப் பிரதேசங்களுக்கு இச்செய்தி தெரியாத முறையில் செய்தித் தணிக்கையும் செய்யப்பட்டது. இவ்வன்முறையை மாநில அரசோ, ஓட்டுக் கட்சிகளோ, பிரதிநிதிகளோ கண்டிக்கவும் இல்லை, எதுவித நடவடிக்கைகளை மேற் கொள்ளவுமில்லை. எனவே இவ்வாறான இந்திய அரசும், அதன் அரசியல் வாதிகளும், எவ்வாறான நண்பர்கள்? இந்தியாவைப் பின்தளம் எனக் கூறிக்கொள்ளும் விடுதலை அமைப்புகள் (?) சில சற்று சிந்திப்பார்களானல் இந்திய அரசியலில் அடிபணியும் செயலையும், தமது சோழியன் குடுமி தத்துவங்களையும் அறுத்தெறிந்து விடமாட்டார்களா? மக்களை விஞ்ஞான தத்துவங்களின் திசைப் போக்கில் மக்கள் போராட்டமாக, பாட்டாளித்துவ மக்களின் ஜனநாயக சர்வாதிகாரத்திற்கான அரசியல் நிர்மாணத்திற்கு ஐக்கியப்பட்டு புதிய ஜனநாயகப் புரட்சிக் கோசங்களை முன்வைத்து தமிழின விடுதலையைப் பெற்றிட ஒரணியில் அணிதிரள மாட்டார்களா?

மேற்கு ஐரோப்பிய நாடுகள் கைத்தொழில் புரட்சிக்கு பிற்பாடு அண்டைய நாடுகளில் சந்தை கிடைக்காத காரணத்தினல் கீழைத் தேசங்களில் தமது சந்தைகளையும் அரசியல், பொருளாதார ஆதிக்கங்களையும் நிலைநாட்டின இலங்கையில் 1505-ல் போர்த்துக்கீசர் கோட்டை இராஜதானியின் வீரபுருஷனை மன்னன் வீரபராக்கிரமபாகுவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களால் கறுவா, மிளகு, யானைத்தந்தம், முத்து, இரத்தினக்கல் போன்ற மூலப் பொருட்களைக் கொள்ளையிடவும் அவர்களது சகல துறைகளின் செல்வாக்கு இங்கு நுளையவும் வழிவகுத்தான். இதே போல்தான் 1602-ல் ஒல்லாந்தரும் 2-ம் இராஜசிங்கனுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு தமது ஆதிக்கங்களை நிலைநிறுத்திச் சென்றனர். 1796-ல் ஆங்கிலேய மேலாதிக்கம் புதிய அரசியல் கொள்கைகளை இலங்கைப் பிரதிநிதிகள் சார்பாக விரிவாக்கி தமது வரலாற்றை 1948-ம் ஆண்டு வரை நீடித்துக் கொண்டதுடன் அக்கால இடைவெளிகளில் இன முரண்பாட்டையும வளர்த்து தமது சுரண்டலிற்கு எதிரான உள்நாட்டு கலகங்களையும் திட்டமிட்டு இலங்கை தமிழ்-சிங்கள பிரதிநிதிகள் சார்பாக அடக்கியும் வந்தனர். இன்றும் அதுதான் நடைபெற்று வருகிறது. இவ்வாறு தான் இலங்கையில் தோன்றி மறைந்த வீர புருஷர்களுடைய தலைமை ஆசை, பதவி ஆசை, போன்றவற்றாலும், தமது பலத்தில் நம்பிக்கையில்லாத மன்னர்கள், பிரதிநிதிகள் அடிவருடிப் போக்குகளாலும் அந்நியர்கள் தமது விரிவாதிக்க கொள்கைகளை இங்கு பலப்படுத்தியும், பன்முகப்படுத்தியும் வந்தனர். இந்திய வரலாறும், ஏனைய உலகியல் வரலாறும் தனிநபர் வீரபுருஷர்களின் அடிவருடிப் போக்குகளால் மேலாதிக்கத்திற்கு உள்ளானதை வரலாற்று அடிப்படைகள் காட்டுகின்றன.

இன்றுள்ள தமிழீழ விடுதலைக் கோசங்களை எழுப்புகின்ற புரட்சிகர விடுதலை அமைப்புகளின் வீர புருஷர்கள் தமது தனிநபர் வரலாற்றைப் படைப்பதற்காகவோ, என்னவோ (?) இந்திய அரசை எதுவிதத்திலும் நியாயப்படுத்தி அதன் புதிய மேலாதிக்கத்தின் கீழ் லாபக்கணக்கு பதிகின்றனர் போலும்.



படிப்பகம்

www.padippakam.com

''இலங்கையில் இன்று இருந்து வரும் அரசியல் ஒருமைப்பாட்டைக் கட்டிக்காப்பதும், தமிழினம் அரசியல் விடுதலையைப் பெறக்கூடாது என்பதுமான ஓர் அரசியல் போக்கு உள்ளது.'' எனவே அனைவரும் உலகியல் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள முயல வேண்டும். உலக சமூக ஏகாதிபத்தியச் சுரண்டல் ஆதிக்கத்தால் அடிமைப் படுத்தப்பட்டிருக்கும் வரை இவ்வாறு சுரண்டி ஆதிக்கம் செய்வது முன்னணியில் நிற்கும். இன்றைய சோவியத் சமூக ஏகாதிபத்தியம் உலக மக்கள் விடுதலைக்கும், உலகின் எந்த ஒரு தேசவிடுதலைக்கும் உதவியாய் வராது. தமிழின விடுதலைக்கும் எதிராகவே வந்துநிற்கும். ரஷ்ய எடுபிடி இந்தியாவும், ரஷ்ய சமூக ஏகாதிபத்தியத்தின் நலனுக்காகவும், இந்திய ஆளும் வர்க்க நலனுக்காகவும் தமிழின மக்களை அடிமைப்படுத்தவே செய்யும். எனவே இலங்கை இந்தியத் தரகு முதலாளிகளும் - அரைநிலப் பிரபுக்களும் அதன் எஜமானர்களான அந்நிய ஏகாதிபத்தியங்களுமே எமது எதிரிகள். அவர்களின் பிரதிநிதிகளான இலங்கை, இந்திய ஒட்டுக் கட்சிகளும், ஆளும் கட்சிகளும் எமது எதிரிகள். இப்போக்கினர் அனைவருமே ஒடுக்கப்படுகின்ற தேசிய இனங்களுக்கும், உலக உழைக்கும் மக்கள் அனைவருக்குமே எதிரிகள், இந்திய இலங்கை உழைக்கும் மக்களும், விடுதலை விரும்பிகளுமே உண்மையான நண்பர்கள்.

எனவே நாம் எமது மக்கள் அனைவரையும் ஸ்தாபன மயப்படுத்தி எமது சொந்தப்பலத்தில், சொந்தமண்ணில், சொந்தப் படையில் நின்று போராட்டத்தை மக்கள் போராட்டமாக முன்னெடுத்து பாட்டாளி வர்க்க விடுதலைக்கான விஞ்ஞான பூர்வமான தத்துவங்களையும், நடைமுறைகளையும் உள்ளடக்கும் மார்க்ஸிஸ-லெனினிஸ மாவோயிஸ சிந்தனைப்படைப்புக்களை வரலாற்றுப் படைப்புக்களாகக் கொண்டு எமது நாட்டு சூழ்நிலைகளுக்கமைந்த தத்துவங்களின்படி ஓரணியில் திரண்டு புதிய ஜனநாயகப் புரட்சிப் பாதையில் தமிழின விடுதலையை வென்றெடுத்திட அனைத்து அமைப்புகளின் முற்போக்கு சக்திகளுக்கும் வேண்டுதல் விடுகின்றோம்.

---

**''முதலாளித்துவ நாடாளுமன்றங்களுடன் சரியான போர்த் தந்திரங்களைப் பயன்படுத்தி ஓர் புரட்சிகர விடுதலை ஸ்தாபனத்தின் தலைமைகள் கலந்து கொள்ளலாம்'' — லெனின்.**

---

ஆனால் அவ்வமைப்புகளின் தலைமை தன்னை அந்த நாடாளுமன்றத்திற்கு விற்றுவிடக் கூடாது. மேற்கூறிய தத்துவத்தை வறட்டுச் சூத்திரமாகப் பாவித்து முதலாளித்துவ நாடாளுமன்றங்களில் ஏற்கனவே உள்ள சகல குறைபாடுகளையும் — வரலாற்றுப் பின்னணிகளையும் — தாமும் புரிந்து கொள்ளாது, தொழிலாளர்களிடையேயும், புரட்சிகர சக்திகளிடையேயும் புரியவைக்காது கலந்து கொள்வதானால் 1971-ல் பாகிஸ்தானில் நடந்ததைப் போலும், சிங்கப்பூர், வியட்நாம் ஆகியவற்றில் நடக்கும் சுரண்டல் ஆளுங்கும்பல் ஆதிக்கம்போல் தான் அமைந்து கொள்ளும். இதனை புரட்சிகர சக்திகள் என்றும் நினைவில் கொள்ள வேண்டியது அவசியம்.

---


ஊக்குவிப்பு — 2

**-''யமன்''-**

விடுதலை என்ற பதத்தில் எந்தப் பிரிவானாலும் ஜனநாயக ரீதியிலான பண்பியல்புகள் இருக்கும் என்று கருதியோ, கருதாமலோ போராளியாகும் ஒவ்வொருத்தரிலும் அந்தப்பிரிவில் ஜனநாயக குணாம்சங்கள் உண்மையான பாதைக்கு மாறாக, பகையாக, தடம்புரண்டு செல்லுமானால் அதன் அராஜக தலைமைகளின் விடுதலை என்றபதத்துள் போராடும் — ஏன் இதை அறிந்தும் பாராமுகமாகும் மக்களுக்கும் கூட — அனைத்து ஜனநாயக சக்திகளது நிலையும் சுதந்திரமற்றதே (உயிர் உட்பட) என்பது முதல் வகைப் போராளிகளுக்கு வெகு விரைவில் தெட்டத் தெளிவாகும்.

அந்த வகையுள் விடுதலையின் தேவையை புரிந்துகொள்ளும் அனைத்து சக்திகளின் உறுதியையும், பல்வேறு இன மக்களின், முற்போக்கு சக்திகளின் ஐக்கியத்தையும் இணைக்கவும், இதன்தேவையை புரிந்து கொள்ளாத முறையில் இருப்பவர்களை எழுப்பவும், ஒன்றிணைக்கவும் இயற்கையின் ''கவி'' தழுவலுடன்

வந்திருக்கிறது **-''யமன்''-** சேரன் கவிதைகள்.

''மக்களைப் பிரிந்த துப்பாக்கிகளுக்கு அவை, ஏ. கே. 47 ஆயினும் கூட ஏது அர்த்தம்''

''சோகம் படர்ந்த தேசப்படமும், இதுவரை காலமும் சிந்திய ரத்தமும், இதுவரை கால இழப்பும், நெருப்பும், எரியும் மனமும் இன்னொருவனுக்கு அடிமையாகவா? இரவல் படையில் புரட்சி எதற்கு? எங்கள் நிலத்தில், எங்கள் பலத்தில், எங்கள் கால்களில் தங்கி நில்லுங்கள். வெல்வோமாயினும் வாழ்வோம்! வீழ்வோமாயினும் வாழ்வோம்! நமது பரம்பரை போர்புரியட்டும்.




படிப்பகம்

www.padippakam.com

# விடுதலை

அது
நம் கைகளில் இப்போது இல்லை.
இப்போது மட்டும்தான் இல்லை.

"நேற்று"
நீயும், நானும் எரிக்கப்பட்ட போது கூட
நம் நிலமும் வானும் புகைந்த போது கூட,
கிடுகு வேலிகளும், கிழக்கு வயல்களும்
நம்முடையதாக இருந்தன.

வெல்லப்படாத விடுதலையும்,
விடுதலைக்கான கனவுகளும்
நம்முடையதாக இருந்தன.

"இன்று"
சுரம் உயர்த்தி கிளர்ச்சி செய்த போது,
வேறு மண்ணில் கால் ஊன்றி
நின்ற போது
ஆயுதங்களுக்காக யாசித்த போது
பயிற்சிக்காக இடம்,
பெற்ற போது
அது
நம் கைகளில் இல்லை.

அது
இப்போது இருவேறு
அரக்கக் கரங்களில் அகப்பட்டு
கழுத்து நெரிபட்டு
நம் கைக்கு மாற
நாக்கு வரண்டு வீறிடுகிறது.

வேறு ஒன்று மல்ல,
தோழனே! அது
எம் விடுதலை தான்.

நன்றி "வழி" — இதழ் 2

பசியால் துடிப்பதோ பாட்டாளி மக்கள்
வெறியால் குதிப்பதோ டிஸ்கோ கும்பல்
சீரழிப்பதோ மேலை நாட்டுக் கலாச்சாரம்
சிந்திக்க வைப்பதோ புதிய கலாச்சாரம்.

## கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன், வானமேறி வைகுந்தம் போக முடியுமா?

அக்டோபர் மாத "செம்மலர்" பத்திரிகையில் 'வேதனை தரும் ரசிகர் மன்றங்கள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாகியுள்ளது. அதில் கமலஹாசன், ரஜனிகாந்த், பாக்கியராஜ் ரசிகர் மன்றங்களின் அருவருப்பான நடவடிக்கைகள் பற்றிக் கடுமையாகச் சாடி அந்த நடிகர்களின் முகத்திரையைக் கிழிப்பதற்குப் பதில் ஒப்பாரி வைத்திருக்கிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் அந்தக் கட்டுரையில் ஒரு இடத்தில் கூட மேற்சொன்ன நடிகர்களின் பெயரைக் குறிப்பிடவில்லை. மாறாக குமுதம் போன்ற பத்திரிகைகள் 'மூன்றெழுத்து நடிகை' நான்கெழுத்து நடிகர்' என்று கிசுகிசு செய்தி எழுதுமே அதைப் போல, 'முன்னணியில் நிற்கும் இரண்டு நடிகர்கள்' 'முதலமைச்சரால் தனது சினிமா வாரிசு என்று சொல்லப்பட்ட ஒரு நடிகர்' என்று தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகிறது இந்த 'முற்போக்கு'ப் பத்திரிகை.

ஒருவிதத்தில் செம்மலரின் தீர்க்க தரிசனத்தை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. சென்ற தேர்தலில் தி.மு.க. வுடன் கூட்டுவைத்துக்கொண்டு டி. ராஜேந்தர் பின்னால் அலைய நேர்ந்தது. அடுத்த தேர்தலில் கமலஹாசனோ, ரஜனிகாந்தோ ஒரு கட்சி தொடங்கலாம். அல்லது 'முற்போக்கு'க் கூட்டணியில் ஏதாவது ஒரு கட்சியில் கூட சேர்ந்துவிடலாம். இன்று தாக்கி எழுதிவிட்டால் நாளை பிரச்சனையாகி விடுமல்லவா? - அதனால் தான் வருமுன் காப்போம் என்று இப்போதிருந்தே ஜாக்கிரதையாக இருக்கிறார்கள் போலும்!

"திரைப்படங்களில் கலைஞர்கள் தங்களது பலதரப்பட்ட திறமைகளை வெளிப்படுத்துகிறார்கள்; கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கிறார்கள்" என்று அந்த கழிசடை நடிகர் பட்டாளத்துக்கு ஒரு பாராட்டுச் சான்றிதழ் வேறு கொடுத்திருக்கிறது செம்மலர். சீரழிந்த சினிமா நடிகர்களை ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்தத் துணிவில்லாத இவர்கள் தான் புரட்சி, புரட்சி என்று வாய் கிழியப் பேசுகிறார்கள். கூரை ஏறிக் கோழிபிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போக முடியுமா?

— நன்றி புதிய கலாச்சாரம்.



படிப்பகம்

www.padippakam.com

# சாட்டை

❊ கோவையில் - [கோயம்புத்தூர்] - ரெலோ ஏற்பாடு செய்த ஈழத்தமிழர் ஆதரவுக் கூட்டத்தில் கலந்து கொண்ட கலைஞர் கருணாநிதி, திராவிடர் கழகத் தலைவர் திரு. இ. வீரமணி, காந்தி காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. பி. நெடுமாறன் போன்ற தென்னிந்தியத் தலைவர்கள் திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் ஐம்பதாயிரம் தமிழர்கள் விரட்டியடிக்கப் பட்டு சிங்களவர்கள் குடியேற்றப்படுகின்றார்கள். இலங் கைத் தமிழர்களின் நிலையான உரிமைக்கும், நீடித்த பாதுகாப்பிற்கும் உறுதியளிக்கும் விதத்தில் இப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என உள்ளக் குமுறல்களுடன் பேசினார்கள்.

**— செய்தி "ஈழமுரசு" 5-10 85**

இந்தியாவில் தேசிய இனங்கள் ஆளும் அரசால் அடக்கி ஒடுக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டு வருவதை யும், இந்தியத் தமிழ் உழைக்கும் மக்கள் கொத்தடி மைகளாக, விபச்சாரிகளாக, ஏழ்மையில் பாமரமாக்கப் படுவதையும், அந்நியர்களாலும், இந்திய ஆளும் வர்க்கங்களாலும் இந்திய உழைக்கும் மக்கள் கொள்ளை யிடப்படுவதையும் உணர்ந்தும், உள்ளக்குமுறல்களுடன் கண்டித்தும் பேசாத இவர்கள் இலங்கையில் இன்றைய தமிழ் மக்களின் அரசியல் சூழ்நிலைகளுக்கு ஆதரவா கப் பேசி தாமது விட்ட அரசியல் நாற்காலிகளைப் பிடிக்க வும் தம்மைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவுமே ஆடு நனைகிறதென ஓநாய் அழுவதுபோல் தென்னிந் திய மக்கள் முன் கூக்குரலிடுகின்றனர். ஒட்டு மொத் தத்தில் இந்த அரசியல் வாதிகள் அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே.

❊ இந்தியத் தலைவர் பண்டாரியைச் சந்திக்க முதலமைச்சர் இராமச்சந்திரன் இலங்கைத் தமிழ்...?, ...?, ...?, தலைவர்கள் டில்லி பயணம். பயணமாவ தற்கு முன் பல விடயங்களை அ...ல...சி ஆராய்வதற்காக சென்னையில் கூடி யுத்தநிறுத்தத்தை இலங்கை அரசு மீறிவருவதால் பேச்சுவார்த்தை சாத்தியமில்லை என் றும், அதிகாரப்பரவலாக்கல் பிரேரணைகளை ஆராய்வதில் அர்த்தமேதும் கிடையாது எனவும் தீர்மானம் எடுத்த னர்.

**— தலைப்புச் செய்தி "ஈழமுரசு" 5-10-85**

அன்றிலிருந்து இன்று வரை இலங்கைத் தமிழி னப் படுகொலை தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதன் சாராம்சத்தையும், ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த காலம் தொடக்கம் தமிழினத்தின் விடுதலையின் உள்ள டக்கத்தையும் இன்றுவரை இன்னும் அலசி ஆராய வில்லையோ!? என்னையா அலசவேண்டி இருக்கிறது!? அலசி அலசி அரிக்கன் சட்டியில் இருக்கும் அரிசியை எல்லாம் கீழே கொட்டி அரிக்கனின் அடியில் எஞ்சும் ஊரிக்கல்லுகளையா உலையில் இடுவது? என்னத்தை அலசி ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதோ!? இந்த உலையிலிடும் ஐம்பங்கள் பலிக்காது. முருக்குப் பருத்தும் தூணுக்கு உதவாதென்பதைத் தோழர்கள் இப்போது நன்கறிவர். மக்களும் அறிந்து வருகின் றனர். இயங்கியல் விதி தப்பாமல் உண்மையான போராட்ட வடிவம் முன்னெடுக்கப்படும் என்பதையும் மறந்து விடக்கூடாது பாரும்.

## ஒரு வேண்டுகோள்!

தமிழ்க் கலைப்படைப்பாளர்களுக்கு கீழைக்காற்றின் சார்பில் ஒரு வேண்டு கோள்:- நீங்கள் எழுதும் கட்டுரைகள், கவிதைகள், கதைகள், நாடகங்கள் என்ப வற்றினூடே ஒரு பொதுக் கொள்கை – கோட்பாடு இருக்கும். அந்தக் கொள்கை என்ன என்பதை அறிந்து கீழைக்காற்றுக்கு ஒரு கட்டுரையாக எழுதி சமர்ப்பியுங் கள். இம்முயற்சி தமிழ்க் கலை படைப்புக்களின் தரத்தை முற்போக்கானதாக உயர்த்தும். மற்றைய கீழைக்காற்று விசைகளில் இத்தகைய கட்டுரைகள் விமர் சனத்திற்கு உள்ளாக்கப்பட்டு வெளியிடப்படும்.

**நன்றி.**



படிப்பகம்

www.padippakam.com

# இந்திய மாநில சுயாட்சி

இந்திய அரசியல் அமைப்பு பல்வேறு தேசிய மக்களின் கூட்டாட்சி தன்மையையும், அதே சமயத்தில் மத்தியத்துவத்தன்மையும் கொண்டது என்று வர்ணிக்கப்படுகிறது. ஆனால் சாராம்சத்தில் பார்ப்போமெனில் முழுக்க முழுக்க மத்தியப்படுத்தப்பட்ட தன்மைதான் கொண்டிருக்கிறதே தவிர கூட்டாட்சித்தன்மை கொஞ்சமும் கொண்டதல்ல. இந்திய கூட்டாட்சித் தன்மை என்பது; முற்று முழுதாக பல்வேறு தேசிய மக்களையும் ஏமாற்றுவதற்கான ஒரு மோசடியே. அரசியல் அமைப்பின் பிரதான கூறுகளான சட்டம், நிர்வாகம், நீதித் துறை அதிகாரம் பற்றியதில் மைய அரசிற்கும், மாநில அரசிற்கும் உறவுகளை ஒப்பிட்டுப் பார்த்தாலே மையப் படுத்தப்பட்ட தன்மையை சகல துறைகளிலும் விஞ்சி நிற்பதைக் காணலாம். மாநில சட்ட சபையின் சட்டமியற்றும் அதிகாரத்தில் - மாநில அரசிற்கு மாநில மக்களின் முக்கிய பிரச்சினைகளில் நேரடியாகத் தலையிட அதிகாரமில்லை. மக்களை ஒடுக்குகின்ற காவல்துறை அதிகாரங்கள் பற்றிய சட்டங்கள்தான் அதிகமாக உள்ளது. மாநிலத்தின் தொழில்துறை பற்றித் தீர்மானிக்க மாநில அரசிற்கு உரிமையில்லை. 1982-ம் ஆண்டு மாநில அரசின் சட்டமியற்றும் அதிகாரத்தில் 66 வகைகளில் 30 வகைகள் காவல்துறை பற்றியது. 22 வகைகள் வரி விதிப்பது சம்பந்தப்பட்டது. 14 வகைகள் மட்டும் தொழில்துறை பற்றியது. இந்த உரிமைகள் கூட மைய அரசினால் ''தேச பாதுகாப்பு'' என்ற பெயரிலோ அல்லது ''பொதுநலன் என்ற பெயரிலோ (இன்றும்) மைய அரசு எடுத்துக் கொள்ள இந்திய அரசியல் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மாநில அரசிற்கும், மைய அரசிற்கும் பொதுவாக இருதரப்பும் தலையிட வாய்ப்புள்ள சட்டமியற்றும் அதிகார வரம்புகள் கூட இறுதியில் ஏதாவது ஒரு காரணம் கூறி எல்லாவற்றிலுமே இந்திய மைய அரசு - (மத்திய அரசு - ஹிந்தி அரசு) தலையிட வழிவகை உள்ளது. மாநில மக்களின் முக்கிய பிரச்சினைகளைத் தீர்மானிக்க உரிமையற்ற நிலையில் உள்ள மாநில சட்ட மன்றமாவது சுதந்திரமாகச் செயல்படுகின்றதா எனில் அதுவும் இல்லை. இந்திய அரசின் தலைவரான ஜனாதிபதியின் ஏஜண்டுகளாக மாநிலங்களில் பதவியேற்றிருக்கும் கவர்னர்கள் அனுமதித்தால்தான் சட்டமன்றமே இயங்க முடியும். அவருக்குத் திருப்தி இல்லையெனில் சட்ட மன்றத்தைக் கலைக்க அதிகாரம் அவருக்கு உண்டு. தமிழ் நாட்டில் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்றத்தை இரு தடவை மைய அரசு கலைத்திருக்கிறது. இந்தியாவின் பல்வேறு மாநில மக்களின் சட்ட மன்றங்களை இதுவரை 64 தடவைகளுக்கும் மேலாகக் கலைத்துள்ளது. அன்றியும் சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் கவர்னர் ஒப்புதல் பெற்றால்தான், ஜனாதிபதி ஒப்புதல் அளித்தால்தான் சட்டமாகும். கவர்னரோ சட்டமன்றங்களைக் கலைக்காமலேயே அவசரச்சட்டம் கொண்டுவர இயலும். மாநில அரசின் அனுமதியின்றியே மாநிலத்தின் எந்த ஒரு பகுதியையோ அல்லது முழுவதையுமோ. ''கலவரப் பகுதி'' யாக அறிவிக்கலாம். மாநிலங்களுக்குள் இராணுவத்தையும் அனுப்பலாம்.

மாநில அரசின் நிர்வாக அதிகாரத்திலும் மைய அரசு தலையிட உரிமை உள்ளது. மாநில அரசு நிர்வாகத்தில் தீர்மானிக்கும் சக்தி வாய்ந்த உயர் அதிகாரிகள் யாவரும் மைய அரசிற்குக் கட்டுப்பட்டவர்களேயொழிய மாநில அரசிற்குக் கட்டுப்பட்டவர்களல்ல. நிர்வாகத்தின் அனைத்துத் துறைகளிலும் மாநில நிர்வாக மட்டத்திலிருந்து. மாவட்ட நிர்வாக மட்டம் வரை I A S, I P S, படித்த மத்திய அரசின் ஆட்களாக இருந்து கொண்டு மாநில மக்களின் நலன்களை அடகுவைக்கின்ற கைக்கூலிகளே இருக்கின்றனர். மாநில அரசிற்கு எந்தவித உரிமையும் இல்லை. அரசியல் சட்டப்படி ஏற்படுத்தப்படாமல் மைய அரசின் தன்னிச்சையாக உருவாக்கிக் கொண்ட ''திட்டக் கமிஷன்'' ''தேசிய திட்டக் கவுன்சில்'' போன்றவற்றை வைத்துக்கொண்டு மாநில மக்களின் வளர்ச்சிக்கேற்றபடி ''திட்டங்களையோ'', ''நிதி ஏற்பாடுகளையோ'', ஏற்படுத்தாமல் அந்நிய ஏகாதிபத்தியக் கொள்ளையர்களுக்கும், இந்திய தரகு முதலாளிய - அரைநிலப்பிரபுத்துவ கொள்ளையர்களுக்கும் ஏற்றபடி ''நிதிப் பொறுப்பை'' வைத்துக் கொள்கிறது. தமிழ் நாட்டிற்கு மைய அரசின் உதவி கடந்த காலங்களிலிருந்து படிப்படியாகக் குறைந்து வந்துள்ளதே தவிர தமிழ் மக்களின் தேவையையொட்டி வழங்கப்பட்டவை அல்ல.

| | | | |
|---|---|---|---|
| முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் | | ........ 10 · 8 | வீதம் |
| இரண்டாவது...,, | ,, | ........ 9 · 0 | ,, |
| மூன்றாவது......,, | ,, | ........ 7 · 4 | ,, |
| 1966-1969......,, | ,, | ........ 6 · 8 | ,, |
| நான்காவது ...,, | ,, | ........ 4 · 7 | ,, |

ஆக உள்ளதைக் காணலாம்.

நீதித்துறையைப் பொறுத்தவரையில் கூட அந்தந்த மாநில மக்களின் நீதிமன்றமே உச்ச அதிகாரம் கொண்டவை என்பது அல்ல. மாநிலங்களில் உள்ள உயர் நீதிமன்றம் உச்ச நீதிமன்றத்தின் ஒரு கீழ்க்கிளையாகவே செயல்பட்டு வருகிறது. உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் பொறுப்பும் மாநில அரசிற்குக் கிடையாது. மைய அரசே தீர்மானிக்கும் விதத்தில் அரசியல் சட்டம் வரையப் பெற்றுள்ளது. அண்மையில் மாநில உயர்நீதிமன்ற நீதிபதிகளில் 1/3 பங்கினரும், தலைமை நீதிபதியும் வெளி மாநிலத்தவராக இருக்க வேண்டும் என நிர்ணயம் செய்யப் பெற்றுள்ளது. இருக்கின்ற கொஞ்ச நஞ்ச நீதிமன்ற உரிமைகள் கூட பறிக்கப்படும் முயற்சியே இது.



படிப்பகம்

www.padippakam.com

ஒவ்வொருதேசிய இனத்திலுமுள்ள தரகு முதலாளித்துவ-அரை நிலப்பிரபுத்துவ வர்க்கங்கள் தங்கள் தேசிய இன மக்கள் எழுச்சியைக் கண்டஞ்சி இந்தி தரகு முதலாளித்துவ-அரைநிலப் பிரபுத்துவ வர்க்கங்களின் மையப் படுத்தப்பட்ட அதிகாரத்தை ஏற்றுக் கொள்வதால் அந்தந்த தேசிய இனங்களிலும் - மாநிலங்களிலும் - அவர்களைப் பிரதி நிதித்துவப் படுத்துகின்ற அரசியல் கட்சிகள் இந்திய அரசின் இந்த மத்தியத்துவப்பட்ட தன்மையை அப்படியே ஏற்றுக் கொண்டு - (ஏகாதிபத்தியங்களே! இந்திய ஆளும் வர்க்கங்களே! நீங்களும் சுரண்டுங்கள் நானும் சுரண்டுகின்றேன் அனைத்து உயர் வர்க்கங்களும் சுரண்டுவோம்)-ள்ளன. பெயருக்கு ''மாநில சுயாட்சி'' ''மாநில மக்களின் சொந்த - சுய ஆட்சி'' என்ற போலிக் கூச்சல் போடுகின்றது.

இலங்கை மக்களுக்கு - தமிழ் மக்களுக்கு - இவ்வாறான புதிய சுரண்டலாட்சி தேவைதானா? மாநில, மத்திய சுரண்டலாளர் சுயாட்சி தேவைதானா?

## ''காகம்''
## அன்னநடை நடக்கப் போனால் தன்னடையும் இழக்காதோ?

''போராட்ட வரலாற்றில் இரண்டாவது மன்னிப்பு'' என்ற போர்வையில் 20-02-86 ஈழமுரசு பத்திரிகை இதய ஒலி பகுதியில் பிரிட்டிஸ் பத்திரிகை நிருபர் பெனிலொப் வில்லிஸ் என்ற பெண்மணி EROS இயக்கத்தால் கைது செய்யப்பட்டதாகவும், அவரிடம் இருந்த தாஸ்தா வேசுக்கள் அவரை ஓர் உளவென்று ஆதாரம் காட்டியிருந்தும் தமது போராட்டப் பாதையை உலக அரங்கிற்கு வெளிப்படுத்துவதற்காகவும், தமது மனிதாபிமான அடிப்படையைத் தெரியப்படுத்துவதற்காகவும் அவர்கள் வில்லிசை விடுதலை செய்ததாகக் குறிப்பிட்டுள்ளது.

அதே பத்திரிகையில் ''பாரத உதவியுடன் மார்க்ஸிச அரசமைப்பது போராளிகளின் நோக்கம்'' என வில்லிஸ் கூறிய பேட்டி ஒன்றும் போடப்பட்டுள்ளது

இதை ஒப்பிட்டுப் பார்க்கும் போது I ஆரம்பத்திலேயே மனிதாபிமானம் கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் கடத்தியிருக்கத் தேவையில்லை; ஏனென்றால் உளவுக்காரியெனில் தேசத்தைக் காட்டிக் கொடுக்காதவள் தானே? II மார்க்ஸிச மனிதாபிமானக் கொள்கை உண்டென்றால் உளவு வேலை செய்பவர் என்ற ஆதாரங்கள் கிடைத்திருந்தும் பிரிட்டனின், அல்லது எந்த ஒரு நாட்டின் புரட்சிகர சேர்க்கைகளுக்கும் விரோதமாக இனி அவரால் செயல்பட முடியாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? மனிதாபிமானம் சர்வதேச பாட்டாளிகளுக்கு மட்டும் துரோகமாக செயல்படப் போகிறதே? ஏன் இதை உணரவில்லை?. III அவரது பேட்டியின் சாரம் தரகு, - அரை நிலப் பிரபுத்துவத்தையும், அந்நிய சுரண்டல் கும்பல்களையும் கட்டிக் காத்து வரும் பாரத அரசை முற்போக்கானது என நியாயப்படுத்துவது என்பது; பாரதத்தைச் சுற்றியுள்ள தென்கிழக்காசிய நாட்டு மக்களையும், ஏன்? உலக உழைக்கும் மக்களையும் கூட மாயை வலையில் போட்டு இந்தியா போன்ற அரசுகளுக்கு அவர்களை அடிமைப்படுத்த நினைப்பது அரசியல் வங்குரோத்துத் தனமில்லையா? இது உலக அரங்கில் முதலிடம் வகித்து பிரதிபலிக்காதோ? IV வில்லிசின் பேட்டி சிங்கள மக்களையும் கிலி கொள்ளச் செய்து அவர்கள் மத்தியில் இனவெறி வளர்க்கப்பட உதவும் அல்லவா? V இது மார்க்ஸிசத்தின் தேசிய, சர்வதேசிய கோட்பாடே EROS இயக்கத்திற்கு இல்லை என்றும் உறுதி செய்துவிடக் கூடியதாக இருக்கிறதில்லையா?

எனவே உலக அரங்கில் EROS இன் உடைய மனிதாபிமான அடிப்படை பகிரங்கப்படுத்தப்படுகிறதோ! இல்லையோ! ஆனால் மார்க்ஸிசத்தின் பாதைகளை கொச்சைப்படுத்தும் பாதைகள் கண்டிப்பாக பகிரங்கமாக வெளிப்படுத்தப்படும். இதைவிட எத்தகைய போராட்டப்பாதை சர்வதேச அரங்கில் வெளியாக வேண்டும்?

''காகம்'' - அன்னநடை நடக்கப்போய் தன்னடையும் இழந்தது'' தான் மிச்சம்.

நாம் அரசாங்கங்களுக்கு அறிவித்துத் தீரவேண்டியதாவது; நீங்கள் தொழிலாளி வர்க்கத்துக்கு எதிராகத் திரும்பிவிடப்பட்டுள்ள ஓர் ஆயுதமேந்திய சக்தி என்பதை நாங்கள் அறிவோம். எங்கெல்லாம் எங்களுக்குச் சாத்தியம் என்று தெரிகிறதோ அங்கெல்லாம் சமாதான பூர்வமான வழியில் உங்களுக்கு எதிராக செயல்படுவோம். அவசியம் ஏற்படும் போதெல்லாம் ஆயுதங்கள் எடுத்துச் செயல்படுவோம். *காரல் மார்க்ஸ்*



படிப்பகம்

www.padippakam.com

# 'தமிழீழம்' சம்பந்தமான தவறுன போக்குகள்

இலங்கை வரலாற்றில் மன்னராட்சிக் காலங்களில் பிரபுத்துவ வர்க்கங்களின் ஆதிக்கப் போட்டியில் இனங்களுக்கிடையில் ஓரளவு கசப்புத்தன்மை ஏற்பட்டிருந்தாலும் அது முக்கிய பிரச்சனையாக வளரவில்லை. ஆனால் ஆங்கிலேயர் தமது இறுதிக்கால ஆட்சியின் போது தமிழின மக்களை சிங்களப் பெரும்பான்மை மக்களுடன் பல வழிகளிலும் முரண்படவைத்து தமக்குச் சார்பான சிங்கள தரகு - அரைநிலப்பிரபுத்துவ வர்க்கக் கைக்கூலிகளிடம் ஆட்சியமைப்பை விட்டுச் சென்றனர். அக்காலம் தொட்டு இன்றுவரை அந்நிய ஏகபோக நாடுகளும், இலங்கை ஆளும் அரசும் அதன் வர்க்கங்களும் திட்டமிட்டு தமது தேசிய ரீதியிலான சுரண்டலாதிக்கத்தை வெளிப்படையாகப் பரந்துபட்ட உழைக்கும் மக்கள் தெரிந்து கொள்ளாத முறையில், முக்கியமாக சிங்கள உழைக்கும் மக்கள் தெரிந்து கொண்டு புரட்சியை முன்னெடுக்காத முறையில், மறைமுகமாக மேற்கொள்வதற்கு இன ஒதுக்கல்களையும், இன அடக்கு முறைகளையும் சகல துறைகளிலும் திடமாகக் கடைப்பிடித்து வருகின்றனர். இந்த அரசியல் சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு குட்டி முதலாளித்துவ தமிழ்த் தலைமைகள் அரசுக்குத் தகவமைந்த முறையில் தமிழ் மக்களிலும் சட்டசபைப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கோசங்களை அன்று முன்வைத்து மாவட்டசபை, அபிவிருத்திச்சபை போன்ற ஆளும் வர்க்கத்திற்குச் சேவகம் செய்யும் அதிகாரப் பரவலாக்கல்களையும் மேற்கொண்டு இன்றைய கால இன ஒதுக்கல் அரசியல் தீவிர முரண்பாடுகளுக்கேற்ப தமிழீழம் என்ற கோசத்தையும் வைத்து ஆட்சியில் தமது வர்க்க நிலையையே பாதுகாத்தனர். இத்தகைய தமிழ் மேல்த்தட்டு வர்க்கத் தலைமைகளின் அடிவருடிப் போக்குக்களாலேயே 1915-ல் இருந்து இலங்கையின் இனங்கள் மேலும் கசப்புணர்வுகளுடன் பிரிந்தும், 'உழைக்கும் மக்களின் ஐக்கியமும் சீர்குலைக்கப்பட்டும், இன்றும் முரண்பட்டுக் கொண்டும் இருக்கின்றன. இந்தத் தமிழ்ப் பிரதிநிதிகளை அந்நிய எஜமானர்களுக்குச் சார்பான தேசிய அரச யந்திரங்கள் தமது ஆளும் அரசியலில் பயன்படுத்தியே இன்றுவரை, தேசிய சுரண்டலை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தி வந்ததும் குறிப்பிடத்தக்கது.

எனவே இன்று இந்தத் தமிழ் மக்களின் தலைவர்கள் முன்வைத்த ''தமிழீழம்'' என்ற வாய்ப்பாடு சரியானதா? இது எத்தன்மையைக் கொண்டது? ஏன் இவர்களால் முன்வைக்கப்பட்டது? அதன் உண்மையான சாராம்சம் தான் என்ன? இதை உண்மையான சமுதாய விடுதலையை எதிர்நோக்கும் புரட்சிகர சக்திகளும் மனப்பாடம் செய்யலாமா? அப்படிச் செய்வதால் ஏதாவது புதிய முரண்பாடுகள் நுழைந்து கொள்ளுமா? போன்ற தத்துவார்த்த கேள்விகளை எழுப்பாமலும் இன்றைய அரசியல் ஆதிக்க விடுதலைக்கு முன்நிற்கின்ற முரண்பாடுகளைத் தொகுத்தும் பகுத்தும் ஆராய்வு செய்யாமலும் புரட்சியை மேற்கொள்வதாகக் கூறும் விடுதலை இயக்கங்களும், தோழர்களும் தாமும் ''தமிழீழம்'' அடைவோம் என்று ''ஒன்றில் இரண்டு, நாலு'' என மனப்பாடம் செய்து, மக்களையும் இட்டுச் செல்வது மிகவும் தவறுனது. முரண்பாடுகளுள் அடிப்படையானது எது? துணையானது எது? அனைத்தும் தழுவியது எது? முதன்மையானது எது? என்பதில் சரியான வரையறை இல்லாமல் அரசியல் அதிகாரப் போராட்டங்கள் அமைந்தால் அதில் மக்களின் நிலை ''மண்குதிரைகளை நம்பி ஆற்றில் இறங்கியது போல் தான்'' இருக்கும்.

பாராளுமன்ற ஆட்சியில் இடம் பெற்ற தமிழ்த் தலைமைகள் உச்சரித்த ''தமிழீழம்'' தமிழ் மக்கள் மத்தியில் சிங்கள மக்களுக்கு எதிராக இனவெறியைத் தூண்டவும், சிங்கள மக்களைத் தமிழீழம் என்றால் தென்னிந்தியத் தமிழ் மக்களுடன் சேர்ந்து தம்மை அழிக்கும் தமிழ் பிரதேசப் பிரிவினை எனவும் ஆட்சியாளர்கள் பிரசாரம் செய்து இன வெறியைத் தூண்டவும், பரந்துபட்ட உழைக்கும் மக்களின் ஐக்கியத்துக்குக் குந்தகம் விளைவித்து சர்வதேச சோசலிச விடுதலைக்கும், இலங்கையில் அதன் முதல் கட்டமான குறைந்த பட்சத்திட்ட புதிய ஜனநாயக விடுதலைக்கும், துரோகம் தரும் விதத்திலுமே அமைந்தது. இவர்களது பகல் கனவான பாராளுமன்றத்தில் தாம் குந்தினுல் தமிழீழம் வரும் என்ற வாய்ச் சவடால்கள் பலிக்காது போக இன்று இந்தியத் தலையீட்டின் மூலம், பேச்சுவார்த்தையின் மூலம் கிடைத்து விடும் என்கின்றனர். ஒட்டு மொத்தத்தில் அடக்கப்படும் இனத்தின் விடுதலையிலும், அதன் உருவமான தேச விடுதலையிலும் அஹிம்சை வழியோ, அடிவருடித் தந்திர முறைகளோ மேற்கொள்ளப்படுமானுல் இவர்கள் கூறும் ''தமிழீழம்'' மலேசியா, போர்ணியோ, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் நவீன சுரண்டல் கும்பல்களின் தனிநாட்டுப் பிரிவினைபோல் குட்டி முதலாளித்துவ ஆளுங் கும்பல் தமிழீழத் தனிநாடாகத்தான் பிரியும். அன்றியும் மீண்டும் ஒரு நவீன மேலாதிக்கக் கொள்ளையர்களின் அடிவருடும் தமிழினப் பிரிவினையாக அமைந்து புரட்சிகரச் சக்திகளை என்றும் நசுக்கவே முன்னிற்கும் ஆட்சி அதிகாரத்தையும் தான் காணமுடியும் - கிழக்கு வங்கம் போல் - அதுமட்டுமல்ல இனங்களின், உழைக்கும் மக்களின் விடுதலைக்கான விஞ்ஞான சித்தாந்த அடிப்படைகளான மார்க்ஸிஸ, லெனினிஸ, மாவோயிச சர்வதேசக் கோட்பாடுகளுக்கும், பொதுவுடைமைக்கும் துரோகத்தனமானதும் கூட. எனவே இத்தகைய போக்குகளைக் கொண்ட இந்திய, இலங்கைக் கட்சிகள் அனைத்தும் தமிழினத்திற்கும், பரந்துபட்ட உழைக்கும் மக்களுக்கும் எதிரிகளேயாவர். எமக்கு எதிரான முரண்பாடுகளைத் தீர்ப்பதென்பது; உண்மையான விஞ்ஞானபூர்வ, புரட்சிகர தத்துவங்களையும், நடைமுறைகளையும் கடைப்பிடித்து அவற்றைத் தெளிவுபடுத்தி புதிய ஜனநாயக மக்கள் யுத்தப் பாதையின் ஆயுதப் போராட்டத்தின் மூலமாகவே அமைய வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த புரட்சிகர கட்சிகள் எனக் கருதப்பட்டு வரும் இயக்கங்களும் ''தமிழீழம்'', ''சோசலிச தமிழீழம்'' என நவீன யுத்திகளில் பிரச்சாரம் செய்து மக்களையும், தோழர்களையும் ஓரளவு ஏற்றுக்கொள்ள வைத்து நாளை தமிழீழம் கிடைத்து தமிழீழக்கொடி பறக்கும் என புரட்சிகர வசனங்களில் கைப்புண்ணுக்குக் கண்ணாடி காட்டுகின்றனர். உண்மையான சோசலிச தனிநாடு என்றால் என்ன? இன்றைய எதார்த்த சூழல் என்ன? தேசிய இனத்தின் பூகோள அரசியல் சூழ்நிலைகள் எவை? அதற்கு முன் தேவையான யுத்தப்பாதை எது? என்பது போன்ற கேள்விகளுக்கு மக்களும், தோழர்களும் விடைகாணுவார்களானால் எமது வரலாற்றுப் பின்னணிக்கான விடுதலை உணர்வு எவ்வாறான தத்துவங்களையும், நடைமுறைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதனைத் தெரிந்து செயல்படுவார்கள்.

ஓர் நாடு பல தேசங்களாகப் பிரியலாம், ஓர் அடக்கப்படும் தேசிய இனம் தனிநாட்டு விடுதலையையும் அடையலாம் என சமூக, நடைமுறை விஞ்ஞானிகள் கூறியிருக்கிறார்கள். இவர்களுடைய கூற்று; ஒவ்வொரு நாடுகளதும் சகல சூழ்நிலைகளையும் அடிப்படையாகக் கொள்ள வேண்டியே வரையப்பட்டது. இதை வரட்டுத் தத்துவமாக மேற்கொள்ளப்படுவது தவறான ஒன்று.

மார்க்ஸ் தனது காலப்பகுதியில் ஜாரிச ரஷ்சியாவில் பெரும்பான்மை மாருஸிய இனத்துள் வந்த ஜார் தனது ஆட்சியின் போது போலந்து இனமக்களை அடக்கி ஒடுக்கியதை வன்மையாகக் கண்டித்து அந்த இன மக்கள் தனிநாடாகப் பிரிந்து செல்லலாம் என்பதையும் அன்றைய சகல சூழ்நிலைகளையும் ஆராய்ந்து கூறினார். அதை லெனின் தனது காலப்பகுதியில் போலந்து தனிநாடாகப் பிரியத்தேவையில்லை என்றார். ஏனெனில் லெனின் ரஷ்சியப் பெரும்பான்மை மாருஸிய இனத்தைச் சேர்ந்தவர்மட்டுமல்ல அந்த மக்கள் மத்தியிலேயே பலம் வாய்ந்த புரட்சிகரக்கட்சி (போல்சுவிக்கட்சி) யைக் கட்டி போலந்து இன மக்கள் ஜார் மன்னனாலும், அன்றைய முதலாளித்துவ வாதிகளாலும் சுரண்டப்படும், அடக்கப்படும் அனைத்து இனங்களின் மக்களையும் விடுதலை அடைய வேண்டி மக்கள் யுத்தப் பாதையை முன்னெடுத்து அனைத்து சிறுபான்மை இனங்களின் சுயநிர்ணய உரிமைகளையும் அங்கீகரித்து தேச விடுதலையை வழிநடத்திச் சென்றதாலும் போலந்து தனிநாடாகப் பிரிவது தேவையில்லை என்றார். மார்க்சுடைய காலத்தில் போலந்து மக்கள் தேசிய இனம் என அழைக்கக் கூடியதாகவும், போராட்டத்திற்கான தனிநாட்டுத் தளப்பிரதேச பூகோள நிலமையும், சாதகமான புரட்சிகர கட்சியும், அமைக்கப்பட்டிருந்தது. அன்றியும் ரஷ்சிய மாருஷ்ய என பெரும்பான்மை மக்கள் மத்தியில் அன்று பலம் வாய்ந்த எந்த புரட்சிகர கட்சியும் வளர்ந்தெடுக்கப்படவில்லை, சிறுபான்மை இனங்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்கவுமில்லை, காலனி, மேலாதிக்கமும் இருக்கவில்லை. எனவேதான் மார்க்ஸ் போலந்து பிரிவதை ஆதரித்தார்.

எமது தமிழின விடுதலையை, தேசிய இனம் என்ற கோட்பாட்டடிப்படையில் முதன்மைப்படுத்தி பூகோள, அரசியல் சூழ்நிலைகளை, புரட்சிகர சமுதாய விஞ்ஞான அடிப்படையிலும் ஆராய்தல் வேண்டும். இதை ஆராய்வதில் நடைமுறையும் சேர்த்துக் கொண்டால் மட்டுமே பூரண தெளிவை அடையமுடியும். இதன் அடிப்படைகளில் நோக்குவோம்.

தேசிய இனம் என்றால்; ஓர் மக்கள் பிரிவு ஒரு மொழி, ஒரு கலாச்சாரம், நிலையான பொருளாதாரப் பின்னணி, தொடர்ச்சியான வாழ்க்கைப் பிரதேசம் என்ற சாராம்சங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இந்தச் சாராம்சங்களில் பொருளாதாரப் பின்னணியில் விவசாயத்திலும், கைத்தொழில் மூலவளத்திலும் உறுதியற்றநிலையே, இது உறுதியாக்கப்படல் வேண்டும். வாழ்க்கைப் பிரதேசத்தில் பொருளாதார அடித்தளத்தின் தேவைகளுக்கிணங்க தமிழினம் பிரிந்தே இருக்கின்றது. இவ்வாறிருக்க தமிழினம் தேசிய இனம் என்று கோட்பாடுகளே அற்ற முறையில் இன்று அங்கீகரித்து போராட்டத்தை முன்னெடுப்பது தவறானது. கொரில்லா யுத்த பாணிகளை மேற்கொள்வதற்கான தளப்பிரதேச அமைப்பும் பூகோள ரீதியில் சாதகம் குறைந்தநிலை அதுமட்டுமல்லாமல் இன்று சர்வதேச அரங்கில் ஒரு நாடு சோசலிச தனிநாடாகப் பிரிவதை சோசலிச திரிபுவாத ரஷ்சியா போன்ற பிற்போக்குக் கும்பல்கள் ஒருபுறமும், அமெரிக்கா போன்ற ஏகபோக பிற்போக்குகள் மறுபுறமும் எதிர்த்து முறியடிப்பதாகவும், நவகாலனித்துவப் பார்வையை அந்நாட்டின் மீது செலுத்துவதாகவும் உள்ளது. இவ்வாறு சகல சூழ்நிலைகளும் எமக்கு முரண்பட்ட நிலையில் இருக்கும் போது எமது நாட்டில் மட்டும் எவ்வாறு சோசலிச தமிழீழம் வருவது? சோசலிசப் பொருளாதார பக்கபலத்திற்கு உதவும் சோசலிச முகாம்கள் இல்லாது எவ்வாறு சோசலிச தமிழீழம் நிலைப்பது? அன்றியும் நேரடி சோசலிசப் புரட்சிக்கான முரண்பாடுகளோ, எதிர்சக்திகளோ, ஐக்கியம் கட்டக்கூடிய சக்திகளோ அற்றநிலை மாறாக சோசலிசப் புரட்சியின் முதற்கட்டமான புதிய ஜனநாயகப் புரட்சிக்கான முரண்பாடுகளும், எதிர் சக்திகளும், ஐக்கியம் கட்டக் கூடிய சக்திகளுமே இன்று தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல கீழை நாடுகளின் முன்னிற்கும் புரட்சி வடிவமுமாகும். இவ்வாறிருக்க நேரடி சோசலிச தமிழீழம் வரும் என்றும் சில புரட்சிகர இயக்கங்கள் கூறிவருவதும் வருந்தத்தக்கதே. புரட்சிகர சர்வதேசக் கோட்பாட்டிற்கு இழைக்கப்படும் துரோகத்தனமே.

அந்நிய, தேசிய ஆளும் பிற்போக்குக் கும்பல்களுடன் அரசியல் தந்திரோபாயம் எனக்கூறி பேச்சுவார்த்தை போன்ற சரணடைவுப் பாதையைக் கடைப்பிடித்து அடிபணிந்தோ, அல்லது அவர்களுக்கு வழிவிட்டோ ஆயுதவழியில் செயல்படுவது தமிழ் மக்களுக்கு உண்மையான சோசலிச தமிழீழத்தைப் பெற்றுத் தந்துவிடாது. அப்படி ஏற்படுத்தப்பட்டாலும் கூட அது அந்நிய அடிவருடும் திரிபுவாத சோசலிச தமிழீழமாகவே அமைந்து இன்று கிரனடா, கியூபா, கம்பூச்சியா மக்களுக்கு நடக்கும் நிலைதான் எமது மக்களுக்கும் என்பதனைத்



படிப்பகம்

தெரிந்து கொள்ள வேண்டும். அடுத்து இலங்கையின் இனங்கள் மத்தியில் இனவெறி, வகுப்புவாதம் ஆகிய வற்றைத் தூண்டும் செயல்களை மேற்கொண்டும், புரட்சிகர வர்க்கங்களிடம் ஐக்கியத்தைத் தெளிவுபடுத்தாமலும், தோழர்களுக்குள் குழு நிலைவாதத்தால் முரண்படவைத்தும் சோசலிச தமிழீழம் பெறலாம் என்பது புரட்சிகர விஞ்ஞான தத்துவங்களான மார்க்ஸிஸம், லெனினிஸம், மாவோயிஸம் ஆகியவற்றின் அடிப்படைச் சாராம்சத்திற்கும், கோட்பாடுகளுக்கும் எதிரான பகடை விளையாட்டேயாகும்.

எனவே இன்றைய புரட்சிகர சக்திகள் உண்மையாகத் தமிழினம் விடுதலை அடைய வேண்டுமானால் மக்கள் அணியினரை ஐக்கியப்படுத்தாது, தோழர்களைப் புரிந்துணரவைத்து உணர்வு பூர்வமாக செயல்படுத்தாது அந்நிய இரத்தவெறி பிடித்தவர்களுக்கு உழவுவேலை பார்த்துக் கொண்டு, தம்மைத் தாராளவாதப்பாங்கில் அனைவரையும் விசுவாசிக்கவைத்து, கட்சியையும் குழுநிலைவாதத்தில் செயல்படவைக்கும் தலைமைகளை இனங்கண்டு மக்கள் மத்தியில் இருந்து தூக்கி எறிந்து, இன்றைய முதன்மை முரண்பாட்டைத் தீர்ப்பதற்கும், சர்வதேச ரீதியில் ஆளுங் கும்பல்களுக்கு நெருக்கடிகளைத் தோற்றுவித்தும், அனைத்து திரிபுவாதிகளையும்; பிற்போக்கு வாதிகளையும் எதிர்த்துப் போரிடுவதும், அதற்காக மக்கள் அணியினருக்கு அரசியல் தெளிவையும் ஊட்டி, புரட்சிகர வர்க்க ஐக்கியத்தையும் ஏற்படுத்தப்படுவதையே முன் தேவையாகக் கொள்ளவேண்டும். இதை வெற்றிகரமாக மேற்கொள்ளவே சிங்கள மக்கள் என்ற அணியினர் மத்தியில் பலம் வாய்ந்த புரட்சிகரசக்திகளது கட்சி ஒன்று உருவாக உதவுவதும், அனைத்து இனங்களின் மத்தியிலும், அதாவது புரட்சிகர வர்க்கங்கள் மத்தியிலும் நட்பையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்துவதும் தமிழ் முற்போக்கு சக்திகளது கடமையாகிறது. (அதுவரை நாம் பேசாமல் இருப்பதென்பதோ, கலந்து கரைவதோ என்பதல்ல.) இதற்காகவே தான் அந்நிய, தேசிய ஆளும் அரசயந்திரத்தின் அடித்தளமான பொருளாதாரத்திலும், மேல் கட்டுமானங்களிலும் எமது குறியை வைத்து, புதிய ஜனநாயக மக்கள் யுத்தப்பாதையை முன்னெடுக்கும் சிந்தனைத் தலைமையான பாட்டாளி வர்க்க சிந்தனைத் தலைமையில் அணிதிரண்டு தேசத்தின் அனைத்து உழைக்கும் மக்களின் விடுதலைக்காக விஞ்ஞானபூர்வ தத்துவ நடைமுறைகளையும் இறுதிவரை கடைப்பிடித்து அதாவது இனவிடுதலையை உள்ளடக்கும் புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுத்து, சர்வதேச அரங்கிலும் சோசலிசப் புரட்சிக்கான முன் தேவைகளைப் பூர்த்தி செய்வதுமே இன்றைய யதார்த்தம். இத்தகைய பாட்டாளி வர்க்க அரசியல், பொருளாதார, கலாச்சார, சர்வாதிகாரப் போராட்டத்தின் மூலமே தான் தமிழினம் உண்மையான விடுதலையைப் பெற முடியும். இதற்கு மாறான கோசங்கள் யாவும் மாயைகளே என்பதனை உண்மையான ஜனநாய சக்திகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அடுத்த விசையில் தொடரும்........

ஊக்குவிப்பு — 3

## "மக்கள் யுத்தம்"

"ஆயுதப் போராட்டம்" பற்றி தெளிவற்ற சில செயல்பாடுகள் இருந்து வரும் இவ்வேளையில்; மக்கள் அவற்றை இனங்காண, போராட்டத்தில் இணைந்து கொள்ளும் ஒவ்வொரு பொதுமனிதனும் முரண்பாடுகளுள் முதன்மைப்பட்டிருக்கும் எதிர்த் தன்மையை எதிர்க்க, பல நாடுகளின் புரட்சித் தொகுப்புக்களையும் அறிந்து எமது நாட்டு சூழ்நிலையின் சரியான மக்கள் யுத்தத்தை முன்னெடுக்க, செழுமைப்படுத்த எமது விழிப்புணர்வின் ஒரு பகுதிக்கு மட்டும் உதவ சீன, வியட்நாம் புரட்சி வரலாற்றனுபவத்தின் பகுதிக் கட்டுரையாக

பிரசவித்திருக்கிறது **"மக்கள் யுத்தம்"** பாசறை வெளியீடு—3

— S. நாராயணன் —

— "முழுமையான விடுதலை என்பது; ஒரு சுரண்டலில் இருந்து விடுபட்டு மற்றொரு சுரண்டலுக்கு உள்ளாகாமல், ஒன்றின் ஆதிக்கத்தில் இருந்து மற்றொன்றின் ஆதிக்கத்திற்கு ஆளாகாமல் அதாவது; சுயாதீனத்துவத்தையும், இறைமையையும் இழக்காத, சுரண்டல் நீத்த, சகல ஒடுக்கு முறையிலிருந்தும் முற்றாக விடுபட்ட நிலைமையை குறிக்கிறது." —



படிப்பகம்

www.padippakam.com

கவிதை அரங்கு

# நீங்களும் நாங்களும்

— முருகு இரத்தினம் —

❋

நீங்களும் நாங்களும்
மனிதர்களே!
உங்கள் திறமையால்,
எங்களை மயக்கி,
உங்களை வழிப்படுத்தி,
வாழ்வு கண்டீர்கள்.
வியர்வை சிந்தாமல்,
வியாபாரம் செய்யும்
அரசியல் விபச்சாரிகளே!
மாபெரும் கூட்டம்
கூட்டிக் கலைபட்ட போது,
ஓடி விழுந்து,
முழங்கால்கள் உடைந்ததால்
வடிந்த குருதிகண்டு,
நீங்கள் உயர்த்தப்பட்டீர்கள்
தியாகிகள் வரிசையில்.

ஆனால் நாங்களோ!
நாளும் வதைபட்டு,
குருதி சிந்தி வருந்தி,
சுறைப் பறவைகளாய்,
சித்திரவதைப் பட்டு,
உருகி உருகி நலிகிறோம்.
எங்கள் உடல்களில்
முதலாளித்துவத்தின் நச்சு
மருந்துகள் ஏற்றப்படுகின்றன.
எங்கள் புரட்சி வரலாறுகள்
எமக்குப் பெயரிடும் என்றோ?
ஒருநாள்,

பொய்த் துப்பாக்கிகள்
வெடியாமல் கிடக்கும்.
எங்கள் துப்பாக்கிகள்
வேட்டுகள் தீர்க்கும்
சன்னங்கள் உங்கள் எண்ணங்களை
நடனமாடிச் சுவைக்கும்.
விலங்குகள் அறுந்து
விடுதலை பிறக்கும்.
அந்நாளில், எமது கரங்கள்
உயர்ந்து நின்று
இரத்தத்தால் வரலாறுகள்
எழுதும்; உயிர்கொடுத்தோர்
கல்லறைகளால் எமது கீதம்
பாடும்; அப்பொழுது
உங்களது சாம்பல் மேடுகளில்
சுடர்விடும் நற்சமுதாய விளக்கு
எங்களுக்கு ஒளிதரும்.

❋

★

❋ மகா சக்தி வாய்ந்த ஒரு தெய்வீக புருஷரின் அருள் வாக்கிற்கிணங்க எமது நாட்டிலும், உலகெங்கிலும் சாந்தியும், சமாதானமும், ஒற்றுமையும், சுபீட்சமும் நிலவிட இறையருளை யாசித்து அஸ்வமேதயாகம் நிகழ்கிறது. யாக இறுதியில் வெள்ளைப் பெண்குதிரை ஆலயத்திற்கு தானமாக வழங்கப் படும்.

— அமைச்சர் இராசதுரை அறிக்கை.

கிழக்கு மக்கள் பேராலும், இந்து மதத்தின் பேராலும் கொள்ளையிட்ட பணம் இருக்கத்தானே வேண்டும். ஆளும் கும்பலைக் கட்டிக்காக்க ''யாக அபினை'' கட்டாயம் காட்டத்தானே வேண்டும். எமது நாட்டின் சுபீட்சத்தையே கெடுத்து குட்டிச்சுவராக்கும் இத்தகைய காவடிகளுக்கு இவ்வாறான வழிகள் இல்லாவிட்டால் கொள்ளைக்கும், சுக போக வாழ்விற்கும் கதியேது?, சிவப்புரத்தம் சிந்துவது ஏன் என்று இந்த மதவெறியனுக்கு எப்படித் தெரியும்?

★★★

❋ முப்படைத் தளபதிகளுடன் ராஜீவ் வாரமொரு முறை சந்திப்பு- பிரதமரை அடிக்கடி சந்திப்பதால் பாதுகாப்பு விவகாரங்களில் விரைவான தீர்மானங்களை எடுக்க முடிவதனால் படைத்தளபதிகள் சந்தோசமடைந்துள்ளனர்.

— இந்து அரசியல் விமர்சகர் திரு. ஜீ. கே. ரெட்டி அறிக்கை.

தர்மபுரி, பஞ்சாப், வங்கம் இன்னும் பல பகுதிகளைப் பாதுகாப்பதாகக் கூறி கொலை, கொள்ளை, கற்பழிப்பு செய்து ருசிகண்ட நரவேட்டையர்களுக்கு மீண்டும் அதற்கொரு சந்தர்ப்பம் வந்தால் சந்தோசப்படாமல் தற்கொலையா செய்வார்கள்- அன்னைக்கொரு பண்டாரி, குட்டிக்கொரு ரெட்டி, இடைசுகம் புஷ்வாணங்களை விட்டால்தானே பதவிகள் நிச்சயம்.

★



படிப்பகம்

www.padippakam.com

விடுதலை என்ற பெயரில் விபச்சாரம் செய்யும் இயக்கமொன்றில் (?); கட்சியின் ஆரம்பத்தில் இருந்து பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை மேற்கொண்டு தற்போது ஏதோ ஒரு மாற்றத்தை (தலைமையில், தத்துவத்தில், நடைமுறையில்.) இயக்கத்தில் கண்டவுடன் கட்சியின் தவறுகளைத்திருத்தி சரியான புரட்சிகரப்பாதைக்கு அதை ஒட்டிச் செல்லலாம் என செயல்பட்டுவிட்டு அது முடியாமல் போனதும் மாறுபட்ட சிந்தனைகளின் அடிப்படையில் ஒதுங்க ஆரம்பித்தனர். இவ்வாறு ஒதுங்கும் தோழர்களில் வெளியூர் பயிற்சி பெற்றவர்கள் 20,000 ரூபாவும், உள்ளூர் பயிற்சி பெற்றவர்கள் 5,000 ரூபாவும் அந்த இயக்கத்திற்கு கட்டியாக வேண்டும் என தற்போதுள்ள ஆராயப்படாத, விவாதிக்கக் கிலி கொள்ளும் தலைமையின் எழுத்துவடிவிலில்லாத, அமைப்புச் சட்டம் கோரிக்கை விட்டுள்ளது. தமிழ் மக்களை ஏமாளிகள் ஆக்கியது போல் தோழர்களையும் கோமாளிகள் என எண்ணுகிறீர்களா?

## கோரிக்கை வடிவில்............

## "எச்சரிக்கை"...........

## "விபச்சாரம்"...........

இதில் என்ன வேடிக்கைகள் என்றால் I உண்மையில் உணர்வு பூர்வமாகவே விடுதலைக்காக தம்மை அர்பணித்துக் கொண்ட பாட்டாளி வர்க்கத் தோழர்களுக்கு இதனால் விடிவுமில்லை, விடுதலையில்லை. "பாவம் பாட்டாளித் தோழன்" II தவறுகள் திருத்தப்படவும் முடியாதாம் அதோடு தோழர்கள் ஒதுங்கவும் கூடாதாம் ஏனெனில் இன்று வேள்விக்கு வளர்ந்த கடாக்களும், கோயில் மாடுகளும் தானே தோழர்கள். III இரண்டு இடத்திலும் பயிற்சி பெற்றவர்கள் என்றால் 25 000 ரூபா கோரப்படாது என்பதற்கும் அது கட்டப்பட காலதாமதமானால் சிலவேளை வட்டியும் கூட குட்டியும் அந்த அமைப்புச் சட்டம் கேட்காது என்பதற்கும் என்ன உத்தரவாதம். IV அணுகுமுறை செய்யும் போதே இந்த அமைப்புச் சட்டத்தையும் இத்தகையது போன்ற பல்வேறு புதிய புதிய அமைப்புச் சட்டங்கள் ஆக்கப்படும் பரம ரகசியத்தையும் கூறினால் எந்த மனிதன் உங்கள் இயக்கத்தில் அணுகப்படுவான் என்பதனையும் சிந்திக்க வேண்டும்.

இந்த அமைப்புச் சட்டத்திற்கு உட்பட மறுப்பவர்கள் நிலை சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதும் அதன் மூலம் புது உறுப்பினர்களாகும் தோழர்களுக்கும், ஒதுங்கியிருக்கும் தோழர்களுக்கும் பிரிவதற்கும் பேசுவதற்கும் "கட்சியின் சுதந்திரம்" என்பதும் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கொள்கையும் நடைமுறையும் — "வேசி மகள் வேசியாகத்தான் இருக்க வேண்டும்", "கடலை விற்றவள் பிள்ளைகள் கடலை விற்றுத்தான் ஆகவேண்டும்" என்ற தத்துவப் பிதற்றலையும், இதன் மூலம் **இடதுசாரி சிவப்பதிகாரம் பேசுபவர்களின் அப்பட்டமான பிறள்வு வாதத் தலைமையையும்** தான் குறித்துக் காட்டுகிறது.

**"மக்கள் இராணுவம் என்பது; கூலிப்பட்டாளமல்ல, அது புரட்சியின் உயர்ந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கான சுயவிருப்பத்தின் அடிப்படையில் ஒன்று பட்ட தமது உயிரை அர்ப்பணிக்கத் தயாராக உள்ள நபர்களைக் கொண்டு உருவான ஆயுதம் தாங்கிய குழு. எனவே கூலிப்பட்டாளத்தில் இல்லாத ஜனநாயகம் மக்கள் இராணுவத்தில் இருக்கும்.** — மாவோ.



படிப்பகம்

www.padippakam.com

# பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர அரசியலுக்கு அறிவுஜீவிகளின் தேவை

உழைப்புப் பிரிவினையின் தொடக்ககாலத்தில் இருந்து ஒவ்வொரு சமுதாயத்தின் வாழ்க்கையின் அறிவுநிலையை ஆளும் வர்க்கத்தின் தத்துவங்களின் செல்வாக்கே ஆட்சி புரிந்தது. இன்றைய சமுதாய அறிவு நிலையும் அவ்வாறே. எந்தவர்க்கம் அரசியல், பொருளாதார, கலாச்சார சாதனங்களை ஆட்சிபுரிகின்றதோ அதற்கு அடிமைப்படுத்தப் பட்டிருக்கும் வர்க்கம் சகல துறைகளிலும் கட்டுப்பட்டுத் தான் இருக்கும். அறிவியலைப் பரப்பும் கல்வி, தொடர்புச் சாதனங்கள் அனைத்தும் கூட ஆளும் வர்க்கம் சார்பான ஊதுகுழல்களாகவே இயங்கும். எனினும் புரட்சிகர நிலை தோன்றும் போது படிப்படியாக அறிவியல் படைப்பாளர்கள் தம்மை விடுவித்து புரட்சிகர வர்க்கத்தோடு தமது அறிவியல் பயன்பாட்டை ஈடுபடுத்தத் தொடங்குகிறார்கள்.

முதலாளி வர்க்கத்தின் அம்மணமான, வெக்கங்கெட்ட ஆட்சியின் விளிம்பில் போராடும் புரட்சிகர செயல்பாடு உச்சநிலையை அடையும் தறுவாயில் கூட வரலாற்றை இயங்கியல் தத்துவார்த்த ரீதியில் புரிந்து கொண்ட முதலாளித்துவ தத்துவவாதிகளின் ஒரு பகுதியினர் தம்மைப் புரட்சிகர அறிவியலுடன் இணைகின்றனர். அன்றியும் சுரண்டலாளர்களது பகுத்தறிவற்ற தன்மையையும், சீர்கேட்டையும், ஒழுக்கமற்ற தன்மையையும் அனுபவவாயிலாக மக்கள்முன் அம்பலமாக்குவர்.

இன்றைய நவீன விஞ்ஞான உலகில் ஏகாதிபத்திய வாதிகளும், ஏனைய பிற்போக்கு வாதிகளும் அறிவியலைத் தமக்குச் சார்பாக பல துறைகளிலும் பல பிரிவுகளாகப் பிரித்து பயிற்சியளிக்கின்றனர். அதன் வடிவம் தனிநல இலாபத்தை நோக்காக வைத்தே தலைவிரித்தாடுவதாகும். ஒருபுறம் பாட்டாளிவர்க்கம் பட்டினிச்சாவில், மறுபுறம் மனிதனை அழிக்கவல்ல அணுகுண்டு போன்ற நவீன ஆயுத உற்பத்தி, விண்கோள் ஆராய்வு, கேள்வியில் முரண்படும் பண்ட இறக்குமதி ஏற்றுமதி, வர்த்தகப்பயிர் உற்பத்தி, அபிவிருத்தி போன்றனவற்றால் மூலதனத்தை முதலாளிகள் பால் சேர்க்கும் திட்டங்கள், வைத்தியம், பொறியியல், கலை போன்ற பல துறைகளும் மூலதனத்தை நாடிய விற்பனைப் பண்டங்களாகவும் மாறிய நிலை என்பன கருத்தியல் சார்ந்த விஞ்ஞான பூர்வமற்றதான அறிவியலாக பயன் படுத்தப்படுகின்றது.

ஆளும் வர்க்கங்களால் முடக்கப்பட்டிருந்த விஞ்ஞானபூர்வமான தத்துவவியல்-அறிவியலாளர்கள் தொழிற் பிடிப்புக்களால் தொழிலாளர்களுடன் தொடர்புற்று மூலதனத்திற்கும், உழைப்புக்குமான இடைவெளியைப்புரிந்து கொண்டு தம்மையும் வர்க்கப் போராட்டத்தில் இணைக்கின்றனர். அப்போது அது வெளிப்படையாகின்றது.

> "புரட்சிகர அரசியல் விடுதலை மூலம்தான் அறிவியலானது-உழைப்போடு இணையும் என்றும், அப்போதுதான் சமூகத்திற்குத் தேவையான பயன் மதிப்புப் பொருட்களைத் தயாரிக்கும் சக்தியாக அது மாறும் என்றும் அறிகின்றனர்." — மார்க்ஸ்

அறிவார்ந்த கவிதை, ஓவியம், இசை, நடனம், இலக்கியம் என்பன ஒவ்வொரு காலகட்டத்திலும் அந்தந்த சமுதாய அமைப்பை வர்ணிப்பவையாகவே ஒடுக்கும் வர்க்கத்திற்கு சேவகம் செய்துமே வளர்ந்து வந்திருக்கின்றது. முதலாளித்துவ சமுதாயத்திலும் கலைஞனின் சுதந்திரம் என்பது; சந்தையின் சுதந்திரமானது. கலை, இலக்கியம் அனைத்தும் வணிகப் பண்டங்களாகின. இன்றைய முதலாளித்துவ சமுதாயத்தில் கலை கலைக்காகவே என அல்லாமல் கலைஞர்கள் சமூகத்திற்கான கலை என்பதனையும் மறந்து அவர்களுக்கே உரிய நேர்மை உணர்வையும், அடகுவைத்து அதை விற்பனைகின்றனர். ஒரு கலைஞன் தன்னை மக்களோடு இணைத்துக் கொள்ளும் போதும் அவர்களுக்கு ஏற்படுத்தும் மகிழ்ச்சியைப் பொறுத்துமே அவனது கலைக்கு மதிப்பு ஏற்படுகிறது.

விஞ்ஞான பூர்வமான அறிவியல்துறை புரட்சிகர போராட்டத்தின் மூலம் சமூகத்தை முற்று முழுதாக மாற்றி தன்னையும் செழுமைப் படுத்துகிறது. கட்சி பாட்டாளி வர்க்கத்திற்கு தலைமை ஏற்பதுபோல் தான் அறிவுஜீவிகளுக்குப் தலைமை ஏற்கிறது. எனவே அறிவுஜீவிகளான கலை, இலக்கியவாதிகள் மூலதனத்துடன் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ள தமது இன்றைய கலைப்பாடுகளை உதறி எறிந்துவிட்டு நடைமுறைப் போராட்டங்களில் பங்கேற்றும், மார்க்ஸிஸத்தையும், சமூக உறவுகளையும் கற்றுணர்ந்து புரட்சிகர வர்க்கத்திற்காகவும் அது அமைக்க இருக்கும் புதிய சமுதாயத்திற்காகவும் சேவை செய்ய முன்வரவேண்டும். "புரட்சிகர அரசியல் போராட்டமென்பது; பாட்டாளி வர்க்கம் தலைமை ஏற்றால் மட்டும் போதாது அதன் சிந்தனையிலுள்ள அறிவுஜீவிகளின் சுதந்திரமான இசைவையும், முழு அளவிலான உடன்பாட்டையும் பெற்றால்தான் அதனைக்கொண்டு நடத்தவும் வெற்றி காணவும் முடியும்" — மா-ஓ

பாட்டாளி வர்க்கத்திற்கும், அறிவுஜீவிகளுக்கும் மத்தியிலுள்ள பகையற்ற முரண்பாடுகளை அதிகாரபபடுத்தியோ, கட்டாயப்படுத்தியோ இணங்கவைக்க முடியாது. அது தோல்வியிலேதான் கொண்டுசெல்லும். எனவே, புரட்சிகர கட்சியிலும்சரி, அறிவுஜீவிகளுடனும் சரி, ஏனைய சமுதாயக் குழுக்களுடனும் சரி, அறிவியல் என்பது விவாதம், விமர்சனம், கல்வி, இணங்கச் செய்தல் போன்ற ஜனநாயக முறையைப் பயன்படுத்தியே புரட்சிகர செயலில் ஈடுபடச் செய்ய முடியும்.



படிப்பகம்

அறிவியல் என்பது; வெளியுலகத்தின் வாழ்வுப் பொருள் குறித்து நடைமுறையில் ஆராயப்பட்ட புறநிலை அறிவேயாகும். மார்க்ஸிஸ அறிவியல் என்பதே; முதலாளித்துவத்தில் சேகரிக்கப்பட்ட மனித அறிவின் வலுவான அஸ்திவாரத்தின் மீதுதான் கட்டப்பட்டுள்ளது. ஆகவே, பாட்டாளி வர்க்க சிந்தனையாளர்கள், அறிவுஜீவிகள் இதைப் புறக்கணிக்காது முதலாளித்துவ சீரழிவுச் சிந்தனைகளையும், வெட்கங்கெட்ட பண்பாடுகளையும், ஒழுக்கங்களையும், நடைமுறைகளையும் மக்கள் சமூகத்தில் அம்பலமாக்கி பாட்டாளிவர்க்க கலாச்சார சிந்தனைகளை, பொருளாதார அடித்தளத்தை, அரசியல் நடைமுறைகளைக் கைக் கொள்ளவும், உழைக்கும் வர்க்கத்தின் அரசியல் விடுதலைப் பாதைக்கான அறிவுப் பயன்பாட்டை நடைமுறைப் படுத்தவும், முன்வரவேண்டும்.

புரட்சிகரப் படைப்புக்களென்பது; ''பாட்டாளிவர்க்க சிந்தனையாளர்கள், அறிவுஜீவிகள் தமது அறிவியல் படைப்புக்களின் உள்ளடக்கத்தில் புரட்சிகர அரசியல் கண்ணோட்டத்தையும், உருவத்தில் நல்ல கலை நுணுக்க அம்சங்களையும் கொண்டதான கண்ணோட்டத்தையும் செலுத்தி படைக்கப்படும் அறிவியல் படைப்புக்களேயாகும்.''

எனவே, புரட்சிகர அறிவுஜீவிகள் தம்மை மக்களோடு இணைத்துக் கொண்டும், பல புரட்சிகர சித்தாந்த-நடைமுறை அனுபவங்களைப் பெற்றும் புரட்சிகர வர்க்கங்களோடு தம்மை இணைத்துக் கொண்டும் இருந்தால் தான் இத்தகைய விசயங்கள் அனைத்திலும் தமது புரட்சிகர பங்கினை ஏற்பவர்களாவார்கள். அப்போதுதான் அவர்கள் படைக்கும் படைப்புக்கள் - அறிவியல் கலையும்-பாட்டாளி வர்க்கத்தன்மை கொண்டதாகவும், உயிரோட்டமுள்ளதாகவும் இருக்கும். புதிய சமுதாயத்தின் நிர்ணயத்திற்கும் அதன் பகுதியாகவும் அமையும்.

புரட்சிகர கலை, இலக்கியம் உண்மையான வாழ்க்கையினின்று பல்வேறு விதமான பாத்திரவளர்ப்புக்களை உருவாக்கி வரலாற்றை முன்னெடுத்துச் செல்வதில் மக்களுக்குத் துணையாக இருக்க வேண்டும். பலவித கட்டுக்கதை, அரசியல், பொருளாதாரம், கலாச்சார ரீதியிலான சாதனங்கள் அனைத்திலும் இடங்கொண்டிருக்கும் கருத்தியல் சார்ந்த மாயைகளை மக்களுக்கு மாயைதான் என புரியவைத்தல் வேண்டும். ஒருபுறத்தில் பசி, இயற்கை அழிவு, அடக்குமுறை ஆகியவற்றின் மூலமாக துன்பங்கள் உள்ளன. மறுபுறத்தில் மனிதனை மனிதன் சுரண்டி வதைசெய்யும் கொடுமையும் உள்ளது. இத்தகைய உண்மைகள் அனைத்து இடங்களிலும் ஒவ்வொரு வடிவத்தில் காணப்பட்டு பொதுவானதாக இருக்கின்றன. இத்தகைய நிகழ்ச்சிகளின் மீது எழுத்தாளர்களும், கலைஞர்களும் ஊன்றிக் கவனம் செலுத்தி அவைகளுக்கிடையிலான முரண்பாடுகளையும், போராட்டங்களையும், ஐக்கியத்தையும் வகைமாதிரிப் படுத்தி கலை, இலக்கியப் படைப்புக்கள் வெளியிடப்படுதல் வேண்டும். அப்படைப்புக்களே மக்களின் உற்சாகத்தைத் தூண்டி, அவர்கள் ஒன்றுபட்டு, தம் நாட்டு சூழ்நிலைமைக்கேற்ற போராட்டத்தில் தம்மை இணைத்து முற்போக்கான நடைமுறைகளில் விழிப்படையச் செய்யவும் உதவும்.

❋ மலையக மக்கள் இன்று காணியுரிமையின்றி, கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு இன்றி தவிக்கின்றனர். பிரஜாவுரிமைப் பிரச்சினை அவர்களை எல்லா வகையிலும் பாதிக்கின்றது. எமது பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாக எல்லா அரசுகளுமே கூறின. எனினும் நாம் காத்திருந்து ஏமாந்ததுதான் மிச்சம். எனவே பிரார்த்தனைப் போராட்டம் செய்தால் கடவுளாவது எமக்குக் கருணைகாட்ட முன்வருவார். இதற்கு ராஜீவ், எம். ஜி. ஆர். ஆதரவு—

— இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூட்டங்களில் விளக்கம்.

சகல அரசுகளுடனும் கூட்டுச் சேர்ந்தே மலையக மக்களின் உரிமைகளைக் கருவறுத்துவிட்ட ஓட்டுப்பொறுக்கிகள் கருணைவேண்டிப் பிரார்த்திக்கிறதாம். மீண்டும் ஓட்டுப்பொறுக்கத்தானே. மலையகத்தில் அடிமைவாழ்வு தோன்றியதிலிருந்தே கடவுளது கருணைகள் காட்டப்பட்டு அந்த மக்கள் ஏமாந்த வரலாறுகள் நிறைய இருக்கிறது, மக்கள் கண்டமிச்சம் ஒன்றுமில்லைத்தான் ஆனாலும் துப்பாக்கி வேட்டுகள் இருக்கிறதே இல்லையா அவர்களிடம் தேயிலை பறிக்கும் கரமும், கூடையும் இருக்கிறது. மதவாத மதத் தலைவர்களை வைத்து அகாலி மக்களை படுகொலை செய்து வரும் ராஜீவிற்கும் தமிழ் நாட்டு மீனவ மக்களைப் படுகொலை செய்விக்க காரணமாயிருந்த எம். ஜீ. ஆர். அரசுக்கும் உடன் பிறப்புக்களிலும், ரத்தத்தின் ரத்தங்களிலும் என்னே கருணை!

பாட்டாளி வர்க்கப் புரட்சியை முன்னெடுத்து இறுதி வரை நடத்திச் செல்லும் போதும், பழைமையான சமூகத்தின் அறிவுஜீவிகள் தம்மைப் பெருந்திரளான மக்களுடன் இணைத்துக்கொண்டு செயல்படும் போதும், வெகுஜனங்கள் பழம் சமூகத்தின் அறிவியல் வளர்ச்சி போன்ற அறிவுச் சாதனைகளைத் தமக்குள் கிரகித்து கலாச்சார மட்டத்தில் தம்மை உயர்த்திக் கொண்டு செயல்படும் போதும், மனித சமுதாயத்தின் வர்க்கப் பிரிவினைகள், உடல் உழைப்பு, மனித உழைப்புப் பிரிவினைகள், மானிட சமூக உணர்வுகளில் ஏற்பட்ட பிரிவினைகள் ஆகியவற்றுக்கிடையில் ஒரு புதிய ஒற்றுமை மலரும்; அது மனித சிந்தனையின் அறிவு அம்சங்களுக்கும், உணர்ச்சி அம்சங்களுக்கும் இடையிலான ஒற்றுமையாகும். அதுமட்டுமல்ல மனித சிந்தனையின் இவ்விரண்டு அம்சங்களுக்கும், நடைமுறைக்கும் இடையிலான ஒற்றுமையுமாக உருவெடுக்கிறது.

வெகுஜனங்கள் மத்தியிலும், மாணவர்கள், ஆசிரியர்கள், அறிவுஜீவிகள், பல்துறை ஸ்தாபனங்கள் மத்தியிலும் சமீப காலங்களில புரட்சிகர இயக்கப் போக்குகளாலும், சுரண்டல் அரங்குகளின் மாயைகளினலும், அதன்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

வால்பிடியாளர்களாலும் சித்தாந்த அரசியல் வேலைகளில் ஒரு வீழ்ச்சி காணப்பட்டு சில இடங்களில் புரட்சிகர செயல்பாடுகளை எதிர்த்த சில ஆரோக்கியமற்ற சுபாவங்களும் தோன்றியுள்ளன. அரசியல் பற்றியோ, அல்லது தாய்நாட்டின் பாதுகாப்புப் பற்றியோ, மனித குலத்தின் லட்சியங்கள், எதிர்காலங்கள் பற்றியோ, அக்கறை கொள்ள வேண்டிய அவசியம் இனிமேல் இல்லை என்றும், அல்லது அறிவு ஜீவிகள் அனைவரும் போராட்டத்தின் தனித்தனி தலைமைகள் என்றும், அல்லது குழுநிலைவாதத்தில் இன்று சிக்கி மாரடிக்கும் விடுதலைக்குழு ஒன்று விடுதலை அளித்துத்தரும் என்றும், அல்லது வேறொரு அரசு எமக்கு உதவும் என்றும் சிலர் எண்ணுவது போல் தோன்றுகின்றது. இத்தகைய துன்மார்க்க நிலையை எதிர்நோக்கும் போது நாம் எமது சித்தாந்த அரசியல் வேலையைப் பலப்படுத்த வேண்டும். மாணவர்களாயினும் சரி, ஆசிரியர்களாயினும் சரி, புத்திஜீவிகளாயினும் சரி, தமது விஷேட பாடங்களைப் படிக்கும் போதும், அலுவல்களைக் கவனிக்கும் போதும் அதேவேளையில் அவர்கள் சித்தாந்த ரீதியிலும், அரசியல் ரீதியிலும், நடைமுறை ரீதியிலும், முன்னேற்றமடைய மார்க்ஸிஸ-லெனினிஸ-மாவோயிச சித்தாந்த அரசியலையும் மனமுவந்து கற்று எமது நாட்டு சூழ்நிலைக்கமைந்த புரட்சிகர தத்துவ, நடைமுறைகளையும் புரிந்து கொள்ள வேண்டும். ''நடைமுறை சூழ்நிலையில் சரியான அரசியல் கண்ணோட்டம் இல்லாது இருப்பது உயிரில்லாது இருப்பதற்குச் சமம்''—மா. ஓ.

விஞ்ஞான பூர்வமான சமுதாயக் கண்ணோட்டம் உடையவர்கள் இன்று முன்னெடுக்கப்பட்டுள்ள புரட்சிகர அரசியல் சூழ்நிலைகளில் குறைகள் இருப்பின் அவற்றை நிவர்த்தி செய்து சகல இலாக்காக்கள், ஸ்தாபனங்கள், புரட்சிகரக் கட்சிகள், வாலிபர் சங்கங்கள், கல்விக் கழகங்கள், ஆசிரியர் சங்கங்கள், தொழிலாளர், விவசாய சங்கங்கள் அனைவற்றிற்கும் எமது சித்தாந்த அரசியல் விளக்கங்களைக் கொடுத்து புரட்சிகர அறிவுஜீவிகள் முன்னேற்ற நிறுவனங்களாக உருவாக்க முன்வரவேண்டும். நமது கல்விக் கொள்கை; கல்வி பெறும் ஒவ்வொருவருக்கும் ஆத்மீகரீதியிலும், அறிவியலிலும், ஆரோக்கியத்திலும், வளர்ச்சி அடையவும், சோசலிச உணர்வும், கலாச்சாரமும் உடைய உழைப்பாளிகளாகவும், போராட்ட பங்காளர்களாகவும் மாற்ற துணைசெய்ய வேண்டும்.

நாம் எமது நாட்டை கடின உழைப்பாலும், சிக்கனத்தாலும், கட்டியமைக்கும் கருத்தைப் பரப்ப வேண்டும். உலகில் வறிய நாடுகளில் எமது நாடும் ஒன்று. ஒரு குறுகிய கால எல்லைக்குள் தேசிய இனங்களுக்கு இடையிலும், ஏனைய இனங்களுக்கு இடையிலும் உள்ள முரண்பாடுகளைக் களைவதும், அதன்பின் தேசவிடுதலையை முன்னெடுப்பதும் என்பது இலகுவான காரியமல்ல, அதுமட்டுமல்ல அந்நிய மேலாதிக்கக் கொள்கைகளில் இருந்தும், ஏனைய பிற்போக்கு வாதிகளின் சூழ்ச்சிகளை மழுங்கடிப்பதும், பின்னுள்ள வர்க்கமற்ற சமூகமாக மாற்றுவதும், பொருளாதார அடிப்படைகளை சரியான முறையில் முன்னெடுப்பதும், சகல துறைகளிலுமான கருத்தியல்களை உடைத்தெறிவதும் என்பது கூட மிக நீண்ட நாள் போராட்டத்தின் வழிமுறை மூலமேயாகும். அதுவும் எமது சொந்தப்பலத்திலேயே, சொந்த மண்ணிலேயே கூட்டு முன் முயற்சிகளெடுத்து எமது நாட்டை ஒரு பலம் வாய்ந்த சுபீட்சமான நாடாக்க முடியும் - என்பதனை எமது மக்களையும், வாலிப அணிகளையும் புரிந்து கொள்ளக் கூடிய வழிவகைகளை அறிவுஜீவிகள் காட்டவேண்டும்.

நமது இன்றைய இனவிடுதலைப் போராட்டத்தை நிர்ணயிக்கும் புதிய ஜனநாயகப் புரட்சி ஸ்தாபகம் எதிர்காலத்தின் லட்சிய சமுதாயத்திற்கு இட்டுச் செல்லும் பாதையைத் திறந்திருக்கிறது. ஆனால் இந்தக் கனவை நனவாக்க கடின உழைப்புத் தேவை. ஒரு புரட்சிகரக் கட்சி ஒன்று அமைக்கப்பட்டு ஆயுதம் தரித்து விட்டால் மட்டும் எல்லாம் சரியாகி விடும் என்றும், சந்தோசமான எதிர்கால வாழ்விற்காக பாடுபடாது, முரண்பாடுகளை தொகுத்தும், பகுத்தும் ஆராயாமல் ஏற்கனவே உள்ள முதலாளித்துவ சிந்தனைக்குரிய இன்பகரமான வாழ்வை அனுபவிக்கலாம் என்றும் எமது புரட்சிகர வாலிபர்களும், சில மக்கள் அணியினரும் எண்ணுகின்றனர். இது உண்மைக்குப் புறம்பானது. அன்றியும் போராட்டத்தைப் பின்னடையச் செய்வதுமாகும். எனவேதான் புரட்சிகர முற்போக்கு அரசியல், நடைமுறை அறிவு ஜீவிகளாக அனைவரும் திரண்டால்தான் புரட்சிகர பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசியலை நிர்ணயம் செய்ய முடியும்.

## ''சிந்திப்பாய் மானினமே''

பார்தனில் பச்சை ரத்தம்
சிறைதனில் சிவந்த ரத்தம்
நவபாசிசத்தால் சிந்துதடா!
நரபலி எங்கும் நடக்குதடா!

நேற்று எவரோ தெரியவில்லை
இன்று யாரோ புரியவில்லை
நானே நீயே என எண்ணி
''சிந்திப்பாய் மானினமே''



படிப்பகம்

www.padippakam.com

# "இப்படியும் நடக்கிறது"

இன்றைய சமூக அமைப்பில் உயர்சாதி என கருதப்படும் ஓர் குடும்பத்தில் நடந்த சம்பாசனை
தாய், மகன் சுரேஸ், அவனது தோழன்; இடம்பெறும் பாத்திரங்களாவர்.

**தாய்:** தம்பி சுரேஸ்! பக்கத்துத் தெருவிலை இண்டைக்கு என்ன குழப்பம் நடந்தது.

**மகன்:** ஆ... அதுவே... அம்மா! உயர்சாதிக் குடும்பமென்று கருதப்படும் ஒரு வீட்டிலை ஏதோ விசேஷதினமாம். அதற்கு தாழ்த்தப்பட்டதாகக் கருதப்படும் மக்கள் சிலர் உணவுக்காக அங்க போக வெளிக்கிட்டிருக்குதுகள். அந்த நேரம் அங்க வந்த ஆயுதம் தாங்கிய விடுதலைக் கோஷ்டி ஒன்று அவர்களை மறித்து உணவுக்காகவோ, வேலைக்காகவோ இனி உயர்சாதியளின்ரை வீட்டை போகக்கூடாது, எனக்கூறி கன்னை பின்னை என திட்டி இருக்கினம்.

**தாய்:** பிறகு...... என்னடா நடந்தது......

**மகன்:** அந்த மக்கள் மௌனமாக இருந்திருக்கினம். இதைப் பார்த்துக் கொண்டு நின்ற துணிச்சலான ஒரு மனிதர்; இண்டைக்கிருக்கிற வாழ்க்கையின் சீரல பல கஷ்டங்களின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிற எமக்கு நீங்களெண்டாலும் சாப்பாடு தாருங்கோ...... நாங்கள் போகாது விடுவதற்கு, எனக் கேட்டார். அதற்கு விடுதலை கோஷ்டி: உங்களுக்கு வெக்கமில்லையே!...... உழைத்துச்சாப்பிட கைகால் இல்லையே...... உழைத்துச்சாப்பிடுங்கோ எண்டிருக்கினம். உடனே அந்த மனிதர்; களவு எடுத்துத் தின்றதுதான் பிழை. ஆனால் பசியிலை வாடுற எங்களைப் போன்ற மக்கள் இரந்து கேட்கிறதுல வெக்கமொண்டுமில்லை. அனைவரும் இன்று தொழிலுக்கோ......! உணவுக்கோ......! படிப்புக்கோ......! இனி வழியில்லை என்றே போராடுகிறார்கள். நீங்களென்னடான்னா ஒரு சவமும் இல்லாத எங்களை உழைத்துச் சாப்பிடுங்கோ என்கிறீர்கள். உழைப்பதற்கு எதாவது தொழிற்திட்டங்களை கொணந்து போட்டு உதைச் சொன்னாலும் கிடக்கு என்றார்.

**தாய்:** டெ...... இதென்னடா...... இயக்கங்களும் இப்பிடி நடக்கிறதே. உதுக்கு அவன்தான் சரி......! துணிச்சலுள்ளவன். பேந்து என்னடா நடந்தது......

**மகன்:** வேற என்ன நடக்கும் வழமையாக நடக்கிறதுதான் (?) பலாத்காரமாக அவர்களை இரவுவரை மறிச்சு விடுதலைக் கோஷ்டியினரும் நிண்டிருக்கினம். பிறகு அவர்கள் போனதும் அந்த மக்கள் சினந்தபடி உயர் குடும்பத்தின் வீட்டைபோய் உணவு வாங்கிக் கொண்டு வந்து சாப்பிட்டிருக்கினம்.

(இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சுரேசுடன் கூடவந்த தோழர் கூற ஆரம்பித்தார்)

**தோழர்:** அம்மா!...... இது எதைக்காட்டுகிறது என்றால்...... சில விடுதலை அமைப்புகளுக்கே சமூகப்பிரச்சனை எவ்வாறு தோன்றுகிறது? வர்க்க சுரண்டல், சாதியமைப்பு என்பன் எவ்வாறு தோன்றியது? அதைத் தீர்த்து வைக்கும் முறையாது? என்பதே தெரியாது போலும். ஆயுதத்தை ஏந்திவிட்டால் எல்லோரும் கீரோக்கள் என்ற நினைப்புவேற. அந்த மச்சள் மத்தியில் அந்த மனிதர் கேட்ட கேள்விகளைச் சரிவரப் புரிந்து கொள்ளாது பலாத்காரம் செய்து கொண்டது அவர்களின் படு பிற்போக்குத்தனம். மக்களிடமும் இருந்து கற்றுக் கொண்டு அவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டிய இவர்களுடைய இந்த வன்செயல் மக்களிடம் இருந்து தாங்கள் கற்பதற்குத் தயாரில்லை. எல்லாமே, ஆயுதம்...... என்ற போக்கை மட்டும் கொண்டுள்ளதாகத்தான் காட்டுகிறது.

**தாய்:** ஓம்... தம்பி!...... சரியாகச் சொன்னாய்......
இப்ப மக்களின்ரை நிலை கோயில் மாடுகளின்ரை நிலைதான்......

**தோழன்:** இதுமட்டுமில்லையம்மா!...... பலாத்காரத்தின் மூலம், ஆயுதத்தின் மூலம் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை பரந்துபட்ட மக்களுக்கும் எதிரிக்கும் இடையிலான பிரச்சினையே. அதாவது அடக்குகின்ற அரசுக்கும் மக்களுககும் இடையிலான பகையான முரண்பாடே ஆகும். ஆனால் மக்கள் மத்தியில் உள்ள முரண்பாடுகள் பகையற்றவை; பலாத்காரத்தின் மூலம், ஆயுத மூலம் தீர்க்கட புறப்படுவது நாளாவட்டத்தில் விடுதலை அமைப்புக்களே தூக்கியெறியப்படலாம். மக்கள் மத்தியில் இருக்கும் முரண்பாடுகளை எடுத்துக் கூறி உணரவைத்தல், கலந்துரையாடுதல், சில வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல் என்பன மூலம் தீர்க்கப்பட வேண்டியது.

**தாய்:** உம்...... இதை எங்கே!...... எப்ப இந்த இயக்கப் பொடியள் விளங்கிக் கொள்ளப் போறாங்களோ...... தெரியாது.

**தோழர்:** இவர்கள் என்றைக்கு சகலதையும் சரியாக ஆராய்ந்து முற்போக்கு சக்திகளாக சிந்திக்க ஆரம்பிக்கிறார்களோ! அன்றுதான் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பப்படி கட்டப்படும்.

(யாரோ வரும் போது அனைவரும் கலைகின்றனர்)

குறிப்பு: இக் கதையின் சாராம்சம் ஓர் கிராமத்தில் நடந்துள்ள உண்மைச் சம்பவம். இதில் தோழர் என்ற பாத்திரம் மட்டும் புரட்சிகர அறிவு நிலைக்காக எம்மால் கொடுக்கப்பட்ட கற்பனைப் பாத்திரமே. இதை நாம் எழுதுவதற்குக் காரணம் ஏழாலை, புத்தூர், சங்கானை, புன்னாலைக் கட்டுவன், மண்டான், வறணி, மிருசுவில், கட்டைவேலி, வதிரி, கட்டைக்காடு போன்ற இடங்களில் இது போன்ற பலவித கண்ணோட்டத்திற்குரிய, புரட்சிகரப் பார்வைக்கெதிரான சம்பவங்களாக இவை இடம் பெற்று வருவதனால் இதுபோன்ற சம்பவங்கள் மேலும் இடம் பெறக்கூடாது என்பதனை வலியுறுத்துவதற்காகவே ஆகும்.

★



படிப்பகம்

www.padippakam.com

# மார்க்ஸிஸ சொற்பதங்களின் தெளிவாக்கம்

## 1. காலனி

காலனி என்பது; வளர்ந்த நாடு ஒன்று அதாவது மூலதனத்தில் வளர்ச்சியுற்ற ஏகாதிபத்தியமொன்று ஏழைநாடுகளில் ஒவ்வொன்றையும், அல்லது பல மற்ற நாடுகளில் ஒவ்வொன்றையும் தனித்தனி தமது அரசியல், பொருளாதார, கலாச்சார பின்னிணைப்பில் கொண்டு வருதல், அந்த நாட்டின் அனைத்துத் துறைகளின் உயர் நிர்வாகத்தில் உயர் தலைமைகள் ஏகாதிபத்தியத்தின் ஆட்களும், கீழ் நிர்வாசங்களில் அந்நாட்டில் உள்ள தமக்குச் சார்பாக சேவகம் செய்யக் கூடியவர்களையும் அமர்த்தி அதன் மூலவளங்களையும், மனித உழைப்பையும் நேரடியாகச் சுரண்டியும் செல்வதாகும் அன்றியும் தமக்கு எதிரான கிளர்ச்சிகளை தமது சேவகர்கள் மூலமே அடக்கவும் அத்துமீறினால் தமது படை கொண்டு நேரடியாக அடக்கவும் முற்படுவர். இவ்வாறு வறிய, கீழை நாடுகளில் நடைபெறும் ஆதிக்கமே காலனி ஆதிக்கமென்றும், இவ்வாறான நிர்வாகத்தில் உட்படுத்தப்பட்டிருக்கும் நாடுகளைக் காலனி நாடுகள் என்றும் வழங்கப்படுகிறது.

உ-ம்: இலங்கையில் கி. பி. 1505—1948 வரை ஐரோப்பியர்களால் நடத்தப்பெற்ற நிர்வாக ஆதிக்க முறையே காலனி.

## 2. அரைக்காலனி

அரைக்காலனி என்பது; பல வளர்ந்த நாடுகள் அதாவது மூலதனத்தில் உயர் வளர்ச்சியை அடைந்திருக்கும் பல ஏகாதிபத்தியங்கள் வறிய கீழை நாடுகளின் அரசுகளுடன் தொடர்புபட்டு தமது மூலதனங்களான பணத்தையும், நவீன இயந்திர சாதனங்களையும் அந்நாட்டு அரசு, தனிநபர் கம்பனிகளிலும், தொழிலகங்களிலும், ஏனைய சகல துறைகளிலுமிட்டும், தமது உற்பத்திப் பண்டங்களை அங்கு குவித்தும், ''அபிவிருத்தி'' ''உதவி'' என்ற போர்வைகளில் வங்கிசார் வட்டி மூலதனத்தைக் கொடுத்தும் அந்நாட்டு மூல வளங்களையும், மனித உழைப்பையும் காலனியைப் போன்று நிர்வாகமல்லாமல் அந்நாட்டு அரசிடமும், அது சார்ந்த வர்க்கங்களின் மூலமும் சகல நிர்வாகங்களையும் வைத்திருக்க உதவி தமது சுரண்டலை மறைமுகமாக மேற்கொள்வது அரைக்காலனித்துவ ஆதிக்கமாகும் இவ்வாறான நிர்வாகத்தை உள்ளடக்கிய நாடுகளே அரைக்காலனி நாடுகளாகும்.

உ-ம்: 1948-ன் பின்னர் இன்றுவரை ஏகாதிபத்தியங்களான அமெரிக்கா, பிரிட்டிஸ், யப்பான், ஜெர்மன், பிரான்ஸ் போன்றவைகளால் இலங்கை மறைமுகமாக கொள்ளையிடப்பட்டு வருவதையே அரைக்காலனி முறை என்பதாகும்.

## 3. நவீன காலனி—நவகாலனி

நவகாலனி என்பது: அதி உயர் மூலதன வளர்ச்சியடைந்த ஏகாதிபத்திய நாடொன்று கீழைநாடுகளை-பலயீனமான நாடுகளை தமது நேரடி இராணுவக் கட்டுப்பாட்டில் கொணர்ந்து அந்நாடுகள் ஒவ்வொன்றையும் ஏனைய நாடுகளை எச்சரிக்கும் தமது இராணுவத் தளமாக்கும் கொள்கைகளுக்கு உட்படுத்தலும், வெளி உலகத்திற்கு அந்நாட்டின் நிர்வாசங்களை நியாயப்படுத்துவதற்காக அதன் அரசுப்பிரதிநிதியை தமது பொம்மை ஆட்சியாளனாக வைத்திருந்து அந்நாட்டு சகல செல்வங்களையும், அந்நியப்படுத்துவதுமே நவீன காலனி ஆதிக்கமாகும். அந்த பலயீனமான நாடுகளையே நவீனகாலனி-நவகாலனி நாடுகள் எனப்படுகின்றது.

உ-ம்: அமெரிக்க ஏகாதிபத்தியம் தமது இராணுவத் தளங்களாக கிரனடா, தியக்கோகாசியா போன்ற நாடுகளை வைத்திருப்பதும், ரஷ்சிய சமூக ஏகாதிபத்தியம் மொங்கோலியா, அப்கானிஸ்தான் போன்ற நாடுகளை தமது இராணுவமயத்திட்டத்தில் வைத்திருப்பதுமே நவ-நவீன காலனி முறையாகும்.

குறிப்பு:- மூலதனத்தில் அதிஉயர் வளர்ச்சியடைந்த மேலைநாடுகளான ஏகாதிபத்தியங்கள் பின்தங்கிய கீழை நாடுகளை நவீன காலனித்துவப் படுத்தும் திட்டங்களில் கொண்டுவருவதற்கு தமது கண்ணோட்டத்தைச் செலுத்துகின்றனர்.

## 4. சந்தர்ப்பவாதம் — OPPORTUNISM

தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சொற்பதத்தில், தொழிலாளி வர்க்கத்தின் உண்மையான நலன்களுக்கு எதிராகப்போகிற முதலாளி வர்க்கத்திற்கு சாதகமான பாதையில் தொழிலாளர் இயக்கத்தைத் தள்ளுகிற ஒரு தத்துவமும், நடைமுறையுமாகும். சந்தர்ப்பவாதம் தொழிலாளர் இயக்கத்தை அதன் வர்க்க எதிரிகளின் பலாபலன்களுக்கு, நலன்களுக்குப் பொருத்தமாக தத்துவங்களையும், நடைமுறைகளையும் திருத்தி அமைத்துக் கீழ்ப்படுத்துகிறது.

அரச இயல்பைப் பொதுமைப்படுத்தி சந்தர்ப்பவாதத்தை நோக்குமிடத்தில் முதலாளித்துவ சமூக அமைப்பில் அதன் அரசியல் சிம்மாசனங்களுக்காக போட்டியிடும் பலவித கருத்துக்களும் வலதுசாரி, அரசியல் சந்தர்ப்பவாதத்தையும், புரட்சிகரமான அரசியலுக்கான தத்துவங்களை மட்டும் கொண்டிருப்பது, நடைமுறையை மட்டும் கடைப்பிடிப்பது, அராஜகவாதப் போக்குக் கொண்டிருப்பது, அல்லது குட்டி முதலாளித்துவ சோசலிசப் பாதையைக் கடைப்பிடிப்பது இடதுசாரி, அரசியல் சந்தர்ப்ப வாதத்தையும் விளக்குகிறது



படிப்பகம்

www.padippakam.com

புரட்சிகரக் கட்சி என்று கூறப்படும் ஸ்தாபனம் ஒன்றைப் பொதுமைப்படுத்தி நோக்குமிடத்தில் முதலாளித்துவ சமூக அமைப்பைக் கட்டிக்காக்கும் தத்துவங்களையும், நடைமுறைகளையும் கொண்டிருப்பதுடன் மிதவாதிகளுக்கு அரசியலில் வழிகாட்டுவது, அல்லது விட்டுச் செல்வது, ஒதுங்குவது வலதுசாரி சந்தர்ப்பவாதம் என்றும், தவறுகள் புரிந்தும் திருந்தாது, திருத்தமுனையாது, அடிப்படைகளைத் தெரிந்து கொள்ளாது அமைதிவாதிகளாவது இடதுசாரி சந்தர்ப்பவாதம் என்றும் கருதலாம்.

## I வலதுசாரி சந்தர்ப்பவாதம் — "RIGHT" WING OPPORTUNISM

தொழிலாளர் இயக்கத்தின் நலன்களை முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்கு நேரடியாகக் கீழ்ப்படுத்தும் நோக்குள்ள சீர்திருத்தவாதக் கொள்கைகளின், சமரசப்படுத்தும் போர்த்தந்திரங்களின் மொத்தத் தொகை. "சமூக அமைதி" — தனியுடமையாளர்களுடன் அமைதி-என்ற தத்துவத்தில் வர்க்கப்போராட்டத்தை மறைப்பது, சகாப்தங்களுக்கு ஏற்புடைய மார்க்ஸிஸ தத்துவங்களை மறைப்பது, அதாவது ஆளும் சுரண்டல் அரசுகளின் கீழ் இருந்து கொண்டே தொழிலாள, விவசாய சுரண்டப்படும் வர்க்கங்களைக் கோசங்கள், கோரிக்கைகள், அகிம்சை வழிகள் போன்ற சரணுகதிகள் மூலம் சுரண்டல்களில் இருந்து விடுபட்டுவிடலாம் எனக்கூறி தேச உழைக்கும் அணிகளை ஒன்றுதிரளவிடாது அரசுடனும், ஆளும் வர்க்கங்களுடனும் சமரசமாக்கும் கொள்கைகளை உடைய தத்துவமும் நடைமுறையுமாகும்.

அரசியலைப் பொதுமைப்படுத்துகையில் "தாய் நாட்டுப் பாதுகாப்பு என்ற கோட்பாட்டைப் பயன்படுத்தி சர்வதேச, தேச பிற்போக்கு வாதிகளின் சுரண்டல்களை மூடிமறைத்து அதை நியாயப்படுத்தி சுயநிர்ணய உரிமை என்பது கற்பனையானது, மாயையானது, சிறு முதலாளித்துவ தன்மைகொண்டது என்றெல்லாம் கூறி அதை அங்கீகரிக்க மறுக்கும் போக்கும், அல்லது சுயநிர்ணயத்தைப் பற்றிய சரியான கருத்தைத் தெளிவாக்காமலோ, அல்லது நழுவவிடும் தன்மையையோ கொண்டிருக்கும்."

புரட்சிகரக் கட்சியைப் பொதுமைப்படுத்திப் பார்க்கையில் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்த போதும் நடைமுறையில் தவறிழைத்து மிதவாதக் கும்பல்களுக்கு வழிகாட்டவும், இணையவும் செய்கிறது.

## II இடதுசாரி சந்தர்ப்பவாதம் — "LEFT" WING OPPORTUNISM

அதீத புரட்சித் தத்துவங்களையும், குருட்டுச் சாகசமுள்ள போர்த்தந்திரங்களையும் கொண்ட ஒரு திடமற்ற கலவை, ஆதாரமற்ற செயல்கள், விவேகமற்ற தியாகங்கள், தோல்விகள் ஆகியனவற்றை உண்டாக்கும் பாதையில் இது புரட்சிகரமான தொழிலாளர் இயக்கத்தைக் கொண்டு போகிறது.

புரட்சித் தத்துவத்தையும், நடைமுறையையும் சில வேளைகளில் தனி நலனுக்கு—தனிநபருக்கு—விசுவாசமான முறைகளில் மாற்றியமைக்கும். அல்லது உண்மையான தத்துவத்தை ஆதாரமற்ற தாக்குதல்களிலிருந்தும், அதைச் சீர்கெடுக்கச் செய்வதற்கான முயற்சிகளிலிருந்தும் பாதுகாத்தும், பிழையான எல்லாவற்றையும் நியாயப்படுத்தி எல்லா விமர்சனங்களுக்கும் பகையாகி பாட்டாளி வர்க்கத்திற்கும், சிந்தனைக்கும் துரோகம் செய்யும் போக்கும், தத்துவம், அரசியல், போர்த்தந்திரம் ஆகிய துறைகளில் முன்னேறக் கூடாது தான் கூறும் அனைத்திற்கும் வாலைப்பிடித்துக் கொண்டு வா என்ற பிரச்சாரத்தையும், விமர்சனம் ஜனநாயக மத்தியத்துவமல்லாமலும் காணப்படும் போக்கும் இடதுசாரி சந்தர்ப்ப வாதத்தில் உண்டு.

கட்சிகளில் இருக்கும் தவறுகளை ஆதரித்துப் பேசுவதும், அல்லது அதைக் கேட்டுக்கொண்டு புரட்சிகரமான ஜனநாயக மத்தியத்துவ விமர்சன வன்முறையைப் பாவிக்காது அமைதிவாதிகளாக இருக்கும் நிலையும் இடதுசாரி சந்தர்ப்பவாதமே.

## 5. சீர்திருத்தவாதம் — REFORMISM

தொழிலாளர் இயக்கத்தில் உள்ள ஓர் அரசியல் போக்கு, இது வர்க்கப் போராட்டம், ஜனநாயகப் புரட்சி, சோசலிசப் புரட்சி, தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவற்றின் அவசியத்தை மறுக்கின்றது. வர்க்க சமரசத்தைக் கோருகின்றது. சுரண்டும் சமுதாயத்தின் அடித்தளங்களைப் பாதிக்காத தொடர்ச்சியான சில்லறைச் சீர்திருத்தங்கள் மூலமாக முதலாளித்துவ சமுதாயத்தைச் "சேமநல சமுதாயமாக" — "சோசலிச சமுதாயமாக" உருமாற்றலாம் எனக் கனவுலகில் சஞ்சரிக்கும் போக்காகும்.

முதலாளித்துவ சமூக அமைப்பில் சமஷ்டி அரசென்றும், ஜனநாயகப் பாதுகாப்பென்றும் அபிவிருத்தி, உற்பத்தி, தொழில் நுட்ப வளர்ச்சி, நவீன சாதனக் குவிப்பு, அனைத்திலும் விஞ்ஞானமுறை எனக்கூறி முதலாளித்துவ அடித்தளத்தையும், மேல்கட்டு மானங்களையும் கருத்தியல் சார்ந்து வளர்க்கும் தத்துவங்களும், நடைமுறைகளுமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# தளிர் ஆசிரியர் குழுவிற்கு வேண்டுகோள்!

தளிர் சஞ்சிகை, திரள்-3, ஆனி-ஆடி; 1985. ஆசிரியர்குழு-யாழ் பல்கலைக்கழகம் இச்சஞ்சிகையின் 35-ம் பக்கத்தில் ''அண்மையில் தமிழ்ப் பகுதிகளில் கலை கலாச்சாரம்'' என்ற தலையமைப்பில் கொடுக்கப்பட்டிருக்கும் சாராம்சம்: முதலாளித்துவ சிந்தனைக்குரிய கருத்தியல்களைக் கொண்ட சீரழிவுக் கலாச்சாரங்களை — குறிப்பாக ''மினி சினிமா'', ''வீடியோ'', 'திரைப்படங்கள்'' — மாற்றியமைத்து இன்றைய புரட்சிகர சூழ்நிலைக்கு இசைவான கலை, கலாச்சாரங்களைப் படைக்கும் படியும் குறித்துக் காட்டியிருப்பது வரவேற்கக் கூடியதொன்று.

ஆனால், அதே தளிர் திரளின் 37-ம் பக்கத்துக்குரிய இறுதிப்பக்க அட்டையின் உள்பகுதியில் விளம்பரமாக:- **"BHARAT STUDIO"—"BHARATS CENTRE", May Sair Mini Cinema, — "LENDING VIDEO CASSETTES — GENTLE ENTER TAIMENTS:-** இடம்பெறும் பகுதியின் சாராம்சமானது நாம் மேலே வரவேற்ற கட்டுரையின் அடிப்படையான, உள்ளடக்கமான; சாராம்சத்தையே பொசுக்கிவிடுவதுடன், மீண்டும் இயக்கமறுப்பியல் கருத்தியலான முதலாளித்துவ சீரழிவுக் கலாச்சார நிலைக்கு இன்றைய புரட்சிகர சூழ்நிலையில் உள்ளவர்களைத் தள்ளுவதாகவே அமைந்துள்ளது

இதனை ஏனோ! தளிர் சஞ்சிகையின் தத்துவார்த்த விமர்சன ஆசிரியர் குழு புரிந்து கொள்ளவில்லை. இவர்களும் புடைநாற்றமெடுக்கும் வியாபார கலை இலக்கிய வாதிகளாக மாறிவிட்டார்களோ?! அல்லது இரட்டைக் குணாம்சங்களையும், அதாவது மேற்கூறிய இரண்டு சாராம்சங்களையும் இணைத்து நவீன பிறழ்வுவாத, சமூகத்திற்கே புதிய கலாச்சார மாயை ஒன்றைப் புகுத்த நினைக்கிறார்களோ?! என்ற கண்ணோட்டங்களையும், தளிரின் ஏனைய கட்டுரைகளும் விளக்குமாற்றுக்குக் குஞ்சம் கட்டியது போல்தான் திரள் 3 ற்கும் கட்டப்பட்டிருக்கிறதோ?! என்ற சந்தேகத்தையும் தான் ஏற்படுத்துகிறது.

எனவே இதுபோன்றதை விமர்சனத்திற்கு உள்ளாக்கி வெளியீடுகளில் மிகவும் புரட்சிகரமான படைப்புக்களின் நோக்கமதிலே முழுமையான கண்ணோட்டத்தைச் செலுத்த வேண்டியது தளிரின் கடமை.

குறிப்பு:- தளிர்: ஆனி-ஆடி 1985 திரள் 3 ற்கான முழு விமர்சனமும் எமது கீழைக்காற்றின் விசை 2-இல் வீசும்.



படிப்பகம்

www.padippakam.com

# உணர்வு அஞ்சலி

நவபாசிச முப்படைக் குண்டர்களால்
பாரெங்கும் மரணமடைந்தீரே தோழர்களே!
உம்பணிதனை இம்மாநிலத்தார் என்று நான் உணர்வாரோ
நீலக்கடலின் உமது ரத்தமும், சதையும் கலந்திருவல்
மாங்காய்த் தீவின் கரையெங்கும் உம்ஓலம் ஒலிக்குமடா!
கீழைநாட்டு புதிய ஜனநாயக கீதத்தின் வழிநடந்து
மக்கள்யுத்தப் பாதையில் அணிதனை திரளவும் வைத்து
இடையில் பேரிழப்பை எமக்களித்தும் சென்றீரே!

பாட்டாளி மக்களின் உழைப்பை உறிஞ்சிக்குடித்து
தேச வரிப்பணத்தில் தின்றும் கொழுத்த — சதைப்
பிண்டங்களின் சொள்ளைகளைப் புரிந்தும் கொண்டீரே!
தோழர்களே! நீங்கள் ஆயுதப் புரட்சியிலும் நின்றீரே!
ஈடும் இணையும் இல்லாத தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைக்காக
அரும் பாடுபட்டு பணயம்வைத்தே உம்முயிரை நம்பாரின்
களமெங்கும் பலியாய்க் கொடுத்தீரே! — அதில்
மரணத்தின் வைரத்தை உணரவும் வைத்தீரே!

வெற்றி பெறுமோர் லட்சியமாம்
புதிய ஜனநாயகப் புரட்சிக்குமாய்
சோசலிசப் பயிர் செழித்தும் வளர
உயிரும் கொடுத்தீர்; கொடுத்தீரே!
முடிவில் ஓர்நாள் பாசிச கொடுங்கோன்மை
மூட்டோடற்றுப் போகுமடா! — அதற்கு
அடிமைப் பாட்டாளி மக்கள் விழித்தெழுவர்
அந்நாளில் உம் கல்லறைக் கீதம் இசைக்குமடா!

மார்க்ஸிஸ — லெனினிஸ தத்துவ வழியில்
மாவோ சிந்தையை மனதிற் கொண்டு
சுரண்டும் வர்க்க ஆதிக்கம் ஒழிக்க
குலமும் விட்டீர்! குடும்பமும் விட்டீரே!
பாட்டாளி வர்க்க சிந்தனைத் தலைமையில்
தொழிலாளி, விவசாயி நலனை நாடி
துப்பாக்கிப் புரட்சிக் கவிதைகள் பாடி
உழைக்கும் மக்கள் ஆதிக்க மடைய
உயிர்தனை பணயம் வைத்தீரே! என்றும்
உணர்வுஅஞ்சலி முற்போக்கு அணியினர் இசைப்பாரே!

குறிப்பு: கீழைக்காற்று விசைகளில் வரும் ஊக்குவிப்பு என்ற பகுதிகளில் வரும் கலை இலக்கிய வெளியீடுகளை படித்து விவாதித்து அதன் விமர்சனங்களை அதன் ஆசிரியர் குழுவிற்கோ (தனி நபராகக் கூட இருக்கலாம்) கீழைக்காற்றுக்கோ கிடைக்கும்படி செய்வதே புரட்சிகர கோட்பாடுகளைச் செழுமைப்படுத்த ஜனநாயக சக்திகளது முழுமையில் "சிறு" பணியாகிறது "கீழைக்காற்று"



படிப்பகம்

www.padippakam.com

# ‘சுதந்திரப் பறவைகள்’ மாதர் வெளியீட்டிற்கான (யூலை 1985) விமர்சனம்

இன்றைய எதார்த்த சூழ்நிலைகளின் சித்தாந்தங்களில முதலாளித்துவ சீரழிவுச் சிந்தனையைப் பிரதிபலிக்கும் படைப்புக்களாக கலை, இலக்கியங்கள் வெளிவருவது தவறானது என்பதனைக் கருத்தில் கொண்டு புரட்சிகர முற்போக்குச் சிந்தனையை மக்கள் மத்தியில் வளர்த்தெடுக்கும் பத்திரிகை, சஞ்சிகை ஆக்கங்களில் மாதர் வெளியீடான ‘‘சுதந்திரப் பறவைகள்’’ என்ற சஞ்சிகையும் வெளிவந்திருப்பது மிகவும் சாதகமானதே. இச் சஞ்சிகை தன்னையும் அறிந்து தன் தலைவனையும் அறிவதற்கும் முற்போக்கானதாக வளர்வதற்கும், கீழைக்காற்று சஞ்சிகை என்றும் விமர்சனங்களைத் தந்துதவும்.

‘‘வேண்டும் வேண்டும்’’ என்ற கவிதையில் அன்று ஐரோப்பியரை மக்கள் கேட்டது நியாயமானது. ஆனால் அடிமைத் தளையை சுரண்டலாளர்கள் நீக்கப்போவதில்லை, மக்கள் பலாத்காரத்தின் மூலம் பெறவேண்டியது. இன்று தமிழினத்தைப் பார்த்து இன்றைய தலைமுறைகள் கேட்பது நியாயம். இக்கவிதையிலும் ஏனைய கட்டுரைகளிலும் வரும் ‘‘தமிழீழம்’’ பற்றிய தவறான போக்குகளை கீழைக்காற்றின் இதே விசையில காணலாம். என்றுமே மதருமைச் சகோதரிகள் பெண்ணடிமையை நீக்குங்கள் என ஆண்களிடம் மட்டும் கேட்பது நியாயமற்றது. இன்றைய சமுதாயத்தில் இருக்கும் பிற்போக்காளர் அனைவரிடமும் கேட்டிருக்கலாம். இன்று இளைஞர் மத்தியில் முற்போக்கு சக்திகளே இல்லை என்பது போலும், பெண்ணடிமைக்கு அவர்கள் மட்டுந்தான் காரணம் என்பது போலும் இக்கவியின் இறுதிவரி அமைந்திருக்கிறது. வரலாற்றடிப்படையில் இதற்குக் காரணம் தனிச் சொத்துடமை, வேலைப்பிரிவினை, அதனைக் கட்டிக்காக்கும் முதலாளித்துவ சீரழிவுக் கலாச்சாரமுமே ஆகும். எனவே சமுதாயத்தினரிடம் கேட்டிருப்பதாக அமையப்பட்டிருக்க வேண்டும்.

‘‘இன்றைய சமுதாய அமைப்பில் பெண்களின் நிலைப்பாடு’’ என்ற கட்டுரை அரசியல், பொருளாதார, கலாச்சார உறவுகளுடன் பெண்கள் எவ்வாறு சமூகத்தில் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதனை இரத்தினச் சுருக்கமாகவும், சிந்திக்கவைப்பதாகவும் கொடுக்கப்பட்டுளளது. இதனுடன் பெண்கள் எவ்வாறு ஸ்தாபனமயப் படுத்தப்பட வேண்டும? புரட்சிகர அரசியல் யதார்த்தங்களில அவர்கள் எவ்வாறு பங்களிப்புச் செய்து கொளவது என்பதனையும் இணைந்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருப்பதுடன் பெண்களின புரட்சிகர ஆரவமும் ஒரு நிலைப்படுத்தப்பட்டிருக்கும்.

‘‘தமிழீழப் போராட்டத்தின் வரலாற்று பரிணாமம்’’ என்ற கட்டுரை இலங்கையின் வரலாற்று அடிப்படைகளைச் சித்தரிப்பதுடன ஆளும் அரசுகளின பொதுப் போக்கையும் காட்டுகிறது. அதனுடன் அந்நிய பண்டங்களின் குவிப்பினால எவ்வாறான முதலாளியம் வளர்ந்துள்ளது. ஆகவே எவ்வாறான புரட்சிகரத்தத்துவம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனையும் எடுத்துக்காட்டப்பட வேண்டியதும் ஒன்றாகும்.

‘‘சிந்திக்க மறுப்பதேன்’’ என்னருமைப் பெண்ணினமே என்னும் கவிதைத் தொகுப்பு பெண்களை எவ்வாறான சீரழிவுகளைத் துடைத்தெறிய வேண்டும். அதற்கு எவ்வாறான வழிகளில் முன்வரவேண்டும் என்பதனை உள்ளடக்கி வரையப்பட்டது வரவேற்கத்தக்கது.

‘‘வடமராட்சி மூலவளங்கள்’’ என்ற தலைப்பிற்குரிய கட்டுரை தமிழ்ப் பகுதிகளின் மூலவளங்களை எவற்றிற்கெல்லாம் பயன் படுத்தலாம் என்பவைகளைக் காட்டுகிறது. முக்கிய விவசாயத் தேவைக்காக நாம் செய்ய வேண்டியதும், மூலவளத்தை சங்க, கூட்டுறவு முறைகளில் கொண்டுவருவது பற்றிய விளக்கங்களையும் சேர்த்து ஆராயப்பட்டும் இருந்தால் கட்டுரை மேலும் செழுமையைப் பெற்றிருக்கும்.

‘‘யுத்த நிறுத்தமும், அந்நியரின் இராஜதந்திரமும்’’ என்ற கட்டுரை தரும் தொகுப்பு சிறப்பானதே. ரஷ்சியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளின் மேலாதிக்கக் கொள்கைகளையும், அதனால் அனைத்து புரட்சிகர போராட்டங்களும் எவ்வாறு மழுங்கடிக்கப்படுகிறது என்பதனையும் காட்டியது. அதனுடன இந்திய அரசினதும், விடுதலை ஸ்தாபனங்களினதும் போக்கையும், புரட்சிகர கண்ணோட்டத்தில் விமர்சனம் கொடுத்திருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும். அடுத்து சுதந்திரம் என்ற எமது வேதவாக்கு என கட்டுரையின் இறுதவரியில் கொடுக்கப்பட்டுள்ளது இது மிகவும் தவறானது. ஏனெனில் சுயநிர்ணய உரிமைப போராட்டத்தை முன்வைத்த ஓர் இனம் வர்க்க விடுதலையையும் உள்ளடக்கிப் போராடுமானால் அம்மக்கள் அணி ‘‘புரட்சியை’’யே வாக்காகக் கொண்டு தேச விடுதலையையே இறுதிக் கோட்பாடாகவும் கொள்வர். ஆனால் ‘‘சுதந்திரம்’’ என்பதோ வர்க்க விடுதலையைக் கோராது முதலாளித்துவ நாடுகளில் ஒன்று அந்நிய மேலாதிக்கத்தில் இருந்து மட்டும் விடுபடுவதை விரும்புவதே சுதந்திரம் என்னும் வேதவாக்கு குறிக்கிறது.

பெண்ணினமே! என்ற கவிதைத்தொகுப்பு சீரழிவுக் கலாச்சார எண்ணங்களைப் பெண்கள் கொள்ள வேண்டாம். இன்று விடுதலை வீரர்களைக் காத்திடும் வீரப் பெண்களாய் யாறினால் போதுமானது என்பது வரவேற்கக் கூடியது.

‘‘கரையை உடைக்கும் புதிய அலைகள்’’ என்ற புரட்சிகர நாடகத்தில் இடைரீதயான போராட்டத்தில் அரசியல் மேடைகளில போலி நாடகங்கள், மாணவர்கள்- ஆசிரியர்களது அரசியல் கலந்துரையாடல், பாசிச வெறியாலும், சொத்துடமையாலும உண்டாகும் சீரழிவுகள், இலலங்களில பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும இடையில் வரும் அரசியல் கருத்து மோதல்கள், விளைவுகள, கேடுகெட்ட சமுதாய பின்னணிகளுக்கான விமரசனங்கள், எல்லாவற்றிற்கும சிகரம் வைத்தாற்போல போராட்ட உணர்வில் புறப்பட்ட தனது நண்பன முரளிபற்றி ரவி அவனது காதலியான தனது தங்கையிடம் கூறும் புரட்சிகர வசனங்கள, அவளது போராட்ட உணர்வுகள என்பன வற்றை சுவைபடத் தந்துதவிய சுதந்திரப் பறவையினருக்கு நன்றி.

❋



படிப்பகம்

www.padippakam.com

★
★★★
★★★★★
★★★★★★★
★★★★★★★★★

❋ அமெரிக்க ஏகாதிபத்தியம், இலங்கைத் தரகு முதலாளித்துவ – அரைநிலப் பிரபுத்துவ அரசின் இன ஒடுக்குமுறைக்கு எதிராக ஒடுக்கப்படும் அனைத்து தேசிய இனங்களும் ஒன்றுபடுவோம்!

❋ எல்லாத் தேசிய இனங்களும் சுயநிர்ணய உரிமையின் [பிரிந்து போதல் உட்பட] அடிப்படையில் ஒன்றிணைந்து இலங்கை மக்களின் உண்மையான ஒற்றுமையை அடைய, ஒடுக்கும் பொது எதிரிகளை எதிர்த்துப் போராடுவோம்!

❋ புரட்சிகர முற்போக்கு சக்திகள் அனைத்தும் ஒன்றிணைந்து தமிழ் தேசிய இன விடுதலையை வென்றெடுத்திடப் போராடுவோம்!

❋ தமிழின மக்களின் விடுதலையே சிங்கள மக்களின் விடுதலைக்கு வழி!

❋ தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் உழவர் போராட்டத்தையும் தேசிய இன விடுதலைப் போராட்டத்துடன் ஒருங்கிணைத்து புதிய ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்காகப் போராடுவோம்!

❋ உலகின் அனைத்து ஏகாதிபத்தியங்களும், சுரண்டும் அரசுகளும் எமக்கு எதிரிகள்! சுரண்டப்படும் தேசிய இனங்களும் உழைக்கும் மக்களும் எமது நண்பர்கள்!

❋ இந்திய மக்களின் உழவர் புரட்சி ஓங்குவதற்காகவும், தேசிய இனங்களின் விடுதலைக்காகவும் குரல் கொடுப்போம்!

❋ புதிய ஜனநாயகப் புரட்சி வழிநின்று சோசலிச நிர்மாணத்தின் கீழ் பொதுவுடைமையை நாட இறுதிவரை போராடுவோம்!

**இனங்காண்போம்! ஐக்கியப்படுவோம்!! போராடுவோம்!!!**

வெளியீடு

— ***கீழைக்காற்று*** —

★★★★★★★★★
★★★★★★★
★★★★★
★★★
★

"சித்தாந்த வாதி" எனப்பட்டவன் தன்னியல்பான இயக்கத்தின் முன்னேபோய், வழியைச் சுட்டிக்காட்டி, இயக்கத்தின் "பொருளாயத அம்சங்கள்" தன்னியல்பாக எதிர்கொள்ளும் தத்துவ, அரசியல், போர்த்தந்திர அமைப்புத் துறைகளைச் சேர்ந்த எல்லாப் பிரச்சினைகளையும் மற்றெல்லோரையும் முந்திக் கொண்டு தீர்க்க வல்லானாக இருந்தால்தான் அந்தப் பெயருக்குத் தகுதியுள்ளவன் ஆகிறான். — வி. இ. லெனின்



படிப்பகம்

www.padippakam.com

ஊக்குவிப்பு — 4

## —"மரணம்"—

இயற்கை விஞ்ஞானத்தின் பார்வையில் தோற்றம், வளர்ச்சி, அழிவு என்ற முறையில் ஒவ்வொரு பொருளின் தன்மையும், இயல்பும் இருப்பதும் அதன் உரு மாற்றமும் ஏனைய விதிமுறையின் செயல்பாடும் சுழல் வடிவத்தில் உயர்வு வளர்ச்சியும், உயிரியல் மனித வாழ்வின் சிந்தனையில் தொழிற்படுவதும் விதிவிலக்கல்ல இயல்பான ஒன்றே. அதில் சிறப்புப் பகுதியாக பாட்டாளி மக்களின் அரசியல் ஆதிக்கத்தின் வாழ்வுக்கான போராட்டத்தில் அரச பயங்கர வாதத்தால், அரசியல் வறுமையால், அராஜக முறைகளால் தற்கால சூழ்நிலையில் ஏற்பட்டுவரும் அழிவுகளை —"மனித வேட்டைகளை"— இனங்காட்டி சிந்தனைச் சிறப்புக்காக "கவி" வடிவை

அடைந்திருக்கிறது **"மரணம்"** ---செழியன்

"மரணத்தைக் கண்டு நாம் அஞ்சவில்லை. ஒரு அநாதைப் பிணமாய், ஒரு அடிமையாய் புதிய எஜமானர்களுக்காக தெருக்களில் மரணிப்பதை நாம் வெறுக்கிறோம்" "உண்மையை மறுப்பவர்களிடம் கூறுங்கள் எங்கள் மரணம் அது ஒரு முடிவல்ல."

ஊக்குவிப்பு — 5

## —"மக்களே எழுக"—! —வெளியீடு சிவாபதிப்பகம்

அரச பயங்கரவாதத்தின் தீய செயல்களை பரந்து பட்ட மக்களுக்கு—(போராளிகள், பெண்கள், அன்னையர்கள், மழலைகள், உழைப்பாளிகள்)— அனைவரும் அதனுல் அடையும் இன்னல்களை அவர்களுக்கே படம்பிடித்துக் காட்டியும் - "டாக்டர்" போன்ற படிப்பாளிகள் மத்தியில் ஒரு பகுதியாக இருக்கும் கருத்தியலையும், ஆண்ட பரம்பரைகளின் வர்க்கத் தன்மையையும்; அதனுல் இனிமேல் ஆளப்போவது இது வரை ஆளப்பட்ட பரம்பரையே என்பதன் வரலாற்றியலையும், ஒவ்வொரு மனிதர்களுள்ளும் பொதுமனிதன் உருவக இயல்பையும், அமெரிக்க சுரண்டல் வடிவத்தின் தொகுப்பையும் த்னித்தனி கவிநயத்தில்

உதித்திருக்கிறுன் — **"சூரியன்"**

"சுமந்த விலங்கை சிதற உடைப்போம்"—
—"சிவந்த விடியல் பிறக்க உழைப்போம்."

வெளியீடு:-

விலை 3/50

படிப்பகம்